# மூலோபாயத் திட்டம் 2017-2020

இலங்கை தேர்தல் ஆணைக் குழு

# இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவிற்கான 2017 - 2020 ஆம் ஆண்டு வரையிலான பங்களிப்பு மூலோபாயத் திட்டம் (ப.மூ.தி)

"ஒவ்வொருவரும் தத்தம் நாட்டின் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது சுதந்திரமான முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவோ பங்குபெறுவதற்கு உரிமையுண்டு. மக்களின் விருப்பமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்விருப்பம் வெளிக்காட்டப்படுவது, காலத்திற்குக் காலம் உண்மையாக நடைபெறும் பொதுவானதும், சமமானதுமான இரகசியமான அல்லது அதற்குச் சமமான, சுதந்திரமான வாக்களிப்பு மூலமேயாகும்"

1948 ஆம் ஆண்டின் சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் 21 ஆம் பிரிவு







பங்களிப்பு மூலோபாயத் திட்டம் (ப.மூ.தி)

இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு

2017-2020

## ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தினர்களின் முன்னுரை



**மஹிந்த தேசப்பிரிய**
தவிசாளர்



**என்.ஜே. அபேசேகர**
அங்கத்தினர்



**பேராசிரியர் ரத்ன ஜீவன் ஹூல்ய**
அங்கத்தினர்

நாட்டின் நிருவாக நடவடிக்கைகளில் சுதேசிகளும் பங்கு பற்றுவதற்கான அதிக வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டுமென 20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் உருவெடுத்த பலம் வாய்ந்த எதிர்ப்புக் கோசங்களின் விளைவாக பிரித்தானிய முடியரசு ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நோக்கோடு, 1944 ஆம் ஆண்டில் சோல்பரி ஆணைக்குழுவை நியமனம் செய்து அனுப்பி வைத்தது. சோல்பரி ஆணைக்குழுவினால் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்குமான சட்டங்கள் இயற்றப்பட்டதோடு, 1946 செப்தெம்பர் 26 ஆந் தேதி பாராளுமன்றத் தேர்தல் அரச கட்டளை சட்டமாக்கப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதற்காக 1946 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. 1946 முதல் 1955 வரையிலான காலப்பகுதிக்குள் வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துவதற்குமாக ஓர் ஆணையாளரின் கீழ் பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களமும் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்களை நடாத்துவதற்காக மற்றோர் ஆணையாளரின் கீழ் உள்ளூராட்சி தேர்தல்கள் திணைக்களமும் இயங்கியது. அதுவரை வெவ்வேறாக இயங்கிய பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களமும் உள்ளூராட்சித் தேர்தல்கள் திணைக்களமும் ஒருங்கிணைக்கப்பட்டு 1955 ஒக்தோபர் 01 ஆந் தேதி தேர்தல்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

இதற்கமைய சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதும், தகைமையுள்ள பிரசைகளை வருடாந்த தேருநர் இடாப்பில் பதிவு செய்வதனூடாக பிரசைகளின் வாக்குரிமையை பாதுகாப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைளை மேற்கொள்வதும், தகைமையற்ற நபர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்குமான கடமை தேர்தல்கள் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டது. எந்தவோர் அமைச்சரினதும் நிருவாகத்தின் கீழ் வராத சுயாதீன நிறுவனமொன்றான தேர்தல் திணைக்களத்திற்கு எந்தவோர் அரசியல் அழுத்தமும் அற்ற விதத்தில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவகாசம் கிடைக்கப்பெற்றது.

பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்துடன் அதுவரை காணப்பட்ட தேர்தல்கள் திணைக்களம் இல்லாதொழிக்கப்பட்டதோடு, தவிசாளர் ஒருவர் உள்ளிட்ட மூன்று அங்கத்தினர்களுடன் கூடிய தேர்தல் ஆணைக்குழு 2015.11.13 ஆந் தேதி தாபிக்கப்பட்டது. தேர்தல் திணைக்களத்தின் அனைத்து பணியாட் குழுவினர்களும் தத்தமக்குரிய சேவை நிபந்தனைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா விதத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு உள்ளீர்க்கப்பட்டனர். இதுவரை காணப்பட்ட தேர்தல்கள் திணைக்களத்தோடு ஒப்பிடுகையில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒரு பாரிய பொறுப்பும் பணியும் சுமத்தப்பட்டுள்ளன. மக்களின் அபிலாசையாக இருந்ததும் சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்கான ஆணைக்குழுவொன்று உருவாவதைக் காண்பதேயாகும்.

மூலோபாயத் திட்டம் கடந்த காலங்களில் தனியார் துறையினருக்கு மாத்திரம் உரித்தான ஒரு விடயமாகக் காணப்பட்டது. நிகழ்காலத்தில் தமது நியதிச் சட்ட மற்றும் அபிவிருத்தி நோக்கிய அடிப்படைக் குறிக்கோள்களை முறையாக முன்னுரிமைப்படுத்தி அமுல்படுத்தவும் அக்குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஓர் அணுகுமுறையாகவும் பல அமைச்சுக்களும் திணைக்களங்களும் இத்திட்டமிடல் முறையைப் பயன்படுத்துகின்றன. தேர்தல் ஆணைக்குழு 2017 - 2020 வரையிலான காலக்கெடுவிற்கான மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும் அதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தற்போது நடவடிக்கையெடுத்துள்ளது. இம்மூலோபாயத் திட்டத்தைத் தயாரிக்கின்ற போது தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர்கள் திணைக்களத்திலிருந்தும் ஆணைக்குழுவிலிருந்தும் ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும்

இடமாற்றம் பெற்றுச் சென்ற பதவிநிலை அலுவலர்கள், சனாதிபதியின் செயலாளர், பிரதம மந்திரியின் செயலாளர் மற்றும் அமைச்சரவைச் செயலாளர் உள்ளிட்ட முன்னணி அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களினதும் நியதிச் சட்ட சபைகளினதும் பிரதானிகள், தொழில் சங்க அமைப்புக்கள், அரசாங்கத்துறையினதும் தனியார் துறையினதும் வங்கித் துறையினதும் தொழிற்சங்கங்கள், ஊடகவியலாளர்கள், ஏனைய பங்குதாரர்கள் ஆகியோரினதும் பெறுமதி வாய்ந்த கருத்துக்களும் முன்மொழிவுகளும் அவர்களுடன் நடாத்தப்பட்ட நீண்ட பல கலந்துரையாடல் தொடர்களைத் தொடர்ந்து மிகுந்த சிரத்தையோடு கருத்திலெடுக்கப்பட்டன.

இதுதவிர தேர்தல் பணிகளில் எமது பங்குதாரர்களான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள், தேர்தல் முறைப்பாட்டு விசாரணை நிலையியல் குழுவின் அரசியல் கட்சிகளின் நிரந்தர முகவர்கள், அமைச்சரவையின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர்கள், மாகாண சபைகளின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட முதலமைச்சர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரோடும் இதுபற்றிக் கலந்துரையாடப்பட்டதோடு, அக்கலந்துரையாடல்களில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களும் கருத்தில் கொள்ளப்பட்டன.

மேலும் பல்வேறு சிரேட்ட பிரசைகளின் அமைப்புக்கள், மகளிர் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள், மீனவர் சங்கங்கள், விவசாய சங்கங்கள், மாற்றுத் திறனாளிகளின் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்கள், முன்மொழிவுகள் என்பனவும் தனியார் துறையைச் சேர்ந்த முயற்சியாளர்கள் மற்றும் வர்த்தக சமூகத்தினரால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களும் இத்திட்டத்தைத் தயாரிப்பதில் பெரிதும் துணைநின்றன. இப்பணியை வெற்றிகரமாக நிறைவு செய்து கொள்வதற்கான அனைத்து அமைப்புக்களுடனான கலந்துரையாடல்கள் தலைநகரத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டன.

ஆணைக்குழுவின் கோரிக்கையை எவ்வித தயக்கமுமின்றி ஏற்றுக்கொண்டு இம்மூலோபாயத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியை தன்னுடைய அதிக பொறுப்புக்களுடன் கூடிய வேலைப் பளுவுக்கு மத்தியில் சிரமேற்கொண்ட மூலோபாயத் திட்டம் தயாரித்தல் தொடர்பான ஆலோசகரும் விசேட நிபுணருமான திரு. சரத் விக்கிரமரத்ன மற்றும் அவருக்கு உதவி புரிந்த ஆலோசகர் திரு. உபாலி மஹகெதர கமகே ஆகியோர் இப்பணியை ஆற்றிக்கொள்வதற்காக நல்கிய விலைமதிப்பற்ற பங்களிப்பை ஈண்டு நன்றியறிதலோடு குறிப்பிடுகின்றோம். அவர்கள் இப்பணியின் முன்னணியில் இருந்து கொண்டு ஆற்றிய சேவையை மதிப்பீடு செய்வதை இத்தகைய வாக்கியத் தொகுதிகளுக்குள் சுருக்கிக் கொள்வது பொருத்தமானதென நாம் நினைக்கவில்லை. தேர்தல் முறைகளோடு தொடர்புடைய மூலோபாயத் திட்டம் தொடர்பான சர்வதேச அனுபவமுள்ள தேர்தல் செயன்முறைகளுக்கான சர்வதேச அமைப்பு (International Foundation for Electoral Systems – IFES) எங்களுக்கு விசேட அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கியமை தொடர்பாகவும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் (Center for Monitoring Election Violence – CMEV) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கியமை தொடர்பாகவும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் செயலாற்றுகையைத் தீர்மானிக்கின்ற சுட்டிகள் (Critical Performance Indicators) தெளிவாக அடையாளம் காணப்பட்ட குறிக்கோள்களை குறித்த கால அட்டவணைக்குள் முறையாக நிறைவேற்றிக் கொள்ளமுடியுமென்பதை அவ்வத்தரப்பினருக்கு புரியக்கூடிய விதத்தில் சுட்டிக் காட்டியுள்ளமையால் இப்பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தை அமுலாக்கம் செய்வதும் காலக்கிரமத்தில் அதன் இலக்குகளை அடைந்து கொள்வதும் நடைமுறை ரீதியாக வெற்றியளிக்கும் என்பது எமது ஒரே நம்பிக்கையாகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கினதும் பணிகளினதும் விடயங்களுக்கேற்ப பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள எதிர்பார்ப்புக்களையும் செயலாற்றுகைகளையும் ஆற்றிக்கொள்வதன் மூலம் மக்களின் அபிலாசைகள் நிறைவேறும் என்பதை நாம் நம்புகின்றோம். முழுமொத்த அரசாங்க சேவையினதும், அரசியல் வாதிகள் உள்ளிட்ட அனைத்து பிரசைகளினதும் ஒத்துழைப்போடு இதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள தேர்தல் ஆணைக்குழுவும் அதன் பணியாட் குழுவினர்களும் முழு மூச்சுடன் ஈடுபடுவர் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம்.

2016 ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி

## நிறைவேற்றுச் சுருக்கம்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சிக் காலத்திலிருந்து 1972 ஆம் ஆண்டு வரை இலங்கை (Ceylon) என அழைக்கப்பட்ட ஸ்ரீலங்கா, தற்போது உத்தியோகபூர்வமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என அழைக்கப்படுவதோடு, இது 65,610 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் ஏறத்தாழ 22 மில்லியன் சனத்தொகையையும் கொண்டிருப்பதோடு இந்து சமுத்திரத்தில் அமையப் பெற்றிருக்கின்றது.

1505 ஆம் ஆண்டு முதல் 1656 ஆம் ஆண்டு வரை தீவின் கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கேயரால் ஆட்சி செய்யப்பட்டதோடு, 1656 லிருந்து 1796 வரையிலான காலப் பகுதிக்குள் ஒல்லாந்தர்களினால் ஆட்சி செய்யப்பட்டது. பிரித்தானியர்கள் 1796 இல் இலங்கையை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததோடு, 1802 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரை அது காலனித்துவ நாடாக விளங்கியது. சுதந்திரம் அடையும் வரை இது 152 ஆண்டுகளாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு பகுதியாக விளங்கியது. பிரித்தானியர்கள் தமது ஆட்சி முறையை இந்நாட்டுக்குள் தாபித்தனர். பிரித்தானிய ஆட்சிக்காலப் பகுதியில் 5 அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டதோடு, 1931 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தினால் சர்வஜன வாக்குரிமை கிடைக்கப்பெற்றமை காரணமாக சமூகத்தில் புரட்சிகர சமூக, அரசியல் மாற்றங்கள் உருவாகின. இது இந்நாட்டின் அரசியல் வரலாற்றிலே மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சந்தர்ப்பமாக விளங்கியது. அதன் மூலம் நாட்டின் சாதாரண மக்களுக்கு அரச பேரவைக்கான பிரதிநிதிகளை நியமனம் செய்கின்ற தேர்தலில் பங்கு கொள்வதற்கான சந்தர்ப்பம் வாய்த்தது.

இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச கட்டளை 1946 இல் நிறைவேற்றப்பட்டது. வாக்காளர்களைப் பதிவு செய்து கொள்வதற்கும் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துவதற்கும் இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைத்தது. இக்கட்டளை 1946 செப்தெம்பர் 26 ஆம் திகதி முதல் அமுல் செய்யப்பட்டதோடு, 1946ல் நிறைவேற்றப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தினூடாக உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலை நடாத்த முடிந்தது. கட்டளைச் சட்டத்தின் கீழான முதலாம் பாராளுமன்றத் தேர்தல் 1947இல் நடாத்தப்பட்டது. 1948 - 1972 வரையிலான காலப்பகுதிக்குள் இலங்கை ஐக்கிய இராச்சியத்தின் மன்னரை தமது மன்னராகவும் கருதியதோடு, அது பொதுநலவாய நாடுகளுக்குள் ஒரு சுயாதீன நாடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1972 இல் புதிய அரசியலமைப்பு இயற்றப்பட்டதோடு, “இலங்கை என்பது ஸ்ரீலங்கா” என மாற்றியமைக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் இந்நாடு உத்தியோகபூர்வமாக பொதுநலவாய நாடுகளுக்குள் ஒரு குடியரசாக மாறியது.

1978 ஆம் ஆண்டில் தேசிய அரசப் பேரவை இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இரண்டாம் அரசியலமைப்புத் திருத்தத்தை மேற்கொண்டது. 2015 மே மாதம் வரை இவ்வரசியலமைப்பு பத்தொன்பது முறை திருத்தியமைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பை பதிலீடு செய்தது. இதற்கமைய 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் கொண்டு வரப்பட்ட மூன்றாம் அரசியலமைப்புத் திருத்தமாக இது மாறியது. புதிய அரசியலமைப்பின் மூலம் ஒரு தனியான சட்டவாக்க சபை நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறை என்பன அறிமுகம் செய்யப்பட்டன. புதிய அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு பல்அங்கத்தவர் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

1946 முதல் 1955 வரை தேர்தலுக்காக இரண்டு திணைக்களங்கள் வெவ்வேறாக இயங்கின. வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துவதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களம் ஆணையாளர் ஒருவரின் கீழ் நிறுவப்பட்டது. உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களை நடாத்துவற்கான அதிகாரம் மற்றொரு திணைக்களத்தின் ஆணையாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 1955 ஒக்தோபர் 01 ஆம் திகதி இவ்விரண்டு திணைக்களங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இலங்கைத் தேர்தல்கள் திணைக்களம் உருவாக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பு சபையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியவர்களினால் நியமனம் செய்யப்படுகின்ற தேர்தல் ஆணைக்குழுவொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அரசியலமைப்பு சபையின் நியமனம் தொடர்பாக எழுந்த குழப்பநிலை காரணமாக உத்தேச தேர்தல் ஆணைக்குழு நியமனம் செய்யப்படவில்லை. எது எவ்வாறாயினும் 2015 நவம்பர் மாதத்தில் கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய 2015 நவம்பர் மாதம் 13 ஆந் தேதி முதல் அமுலாகும் விதத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. புதிதாக நியமனம் செய்யப்பட்ட தேர்தல்கள் ஆணைக்குழு

2017 - 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கான பங்களிப்பு மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென முடிவெடுத்தது. வலுவான முறையில் கட்டமைக்கப்பட்டதும் எதிர்கால நோக்கொன்றை உரித்தாக்கிக் கொண்டதுமான நிகழ்ச்சித் திட்டங்கள், கொள்கைகள் என்பவற்றை தயாரிக்கின்ற முகாமைத்துவ ஊடகமொன்றென்ற வகையில் வினைத்திறன் மிக்க முகாமைத்துவ முறைமையொன்றை அடையாளப்படுத்துகின்ற பங்களிப்பு மூலோபாயத் திட்டம், ஒவ்வொரு மட்டத்திலும் அலுவலர்களை ஊக்குவிக்கின்ற அவர்களுக்குள் தனிப்பட்ட ஒரு வலிமை மிக்க ஈடுபாட்டை உருவாக்குகின்ற கூட்டு நோக்கமொன்றையும் பணியொன்றையும், இலக்குகளையும், குறிக்கோள்களையும் கொண்ட நான்காண்டுத் திட்டமாகத் தயாரிக்கப்பட்டது.

தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் பிரிவுத் தலைவர்கள் உள்ளிட்ட ஆணைக்குழுவின் சிரேட்ட அலுவலர்கள் பதின்மரை (10) உள்ளடக்கிய திட்டத்தயாரிப்புக் குழுவொன்று பெயரிடப்பட்டது. பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தைத் (ப.மூ.தி) தயாரிக்கின்றபோது தேவையான பூரண ஒத்துழைப்பும், வழிக்காட்டலும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், ஏனைய அங்கத்தவர் இருவர் ஆகியோரிடமிருந்து கிடைக்கப்பெற்றன. பங்களிப்பு மூலோபாயத் திட்ட நிபுணர்கள் இருவரின் வழி காட்டலும் திட்டத் தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. திட்டத் தயாரிப்புக் குழு (தி.த.கு) மூலோபாயத் திட்டத் தயாரிப்பு நடவடிக்கையின் பிரதான பணிகளை மேற்கொண்டது. அப்பிரதான விடயங்களாவன.

- **ஒழுங்கமைப்புக்கு வெளியே உள்ள சக்திகள் பற்றிய பகுப்பாய்வு**
- **ஒழுங்கமைப்புக்கு உள்ளே உள்ள சக்திகள் பற்றிய பகுப்பாய்வு**
- **நோக்கு, பணிகள், உபாயங்கள் போன்றவற்றை மீள்பரிசீலனை செய்தல்.**
- **ஒப்பீட்டுப் பகுப்பாய்வை மேற்கொள்ளல்.**
- **மாற்றச் செயன்முறைப் பகுப்பாய்வு.**
- **போக்குப் பகுப்பாய்வை மேற்கொள்ளல்.**
- **ஊகிக்கப்பட்ட எதிர்கால சூழ்நிலை.**
- **ஒழுங்கமைப்பினால் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான விடயங்களை இனங்காணல்**
- **நோக்கு பணிக்கூற்று, இலக்குகள், உபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.**
- **திட்டத்தை அமுலாக்குவதற்கான வளங்களை இணங்காணல்.**

மேற்குறிப்பிட்ட விடயங்கள் திட்டத் தயாரிப்புக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விதத்தில் அரசியல் கட்சி முகவர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், தொழில் வல்லுநர்கள், தொழிற்சங்க முகவர்கள், வங்கியாளர்களும் வர்த்தக சமூகத்தினரும், ஊடகவியலாளர்கள், இளைப்பாறிய தேர்தல்கள் அலுவலர்கள், பெண்கள் மற்றும் இளைஞசார் செயற்பாட்டாளர்கள், விவசாயிகள் மற்றும் கடற்றொழில் சமூகத்தினர், மாற்றுத் திறனாளிகள் சங்கங்கள் மற்றும் முகவர்கள் ஆகிய தரப்பினர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள், கருத்துக்கள், மதிப்பீடுகள் மற்றும் முன்மொழிவுகள் என்பவற்றை ஒன்று திரட்டிக் கொள்வதற்காக தலைநகரத்திலும் மாவட்டங்களிலும் 92 பங்குதாரர் மீளாய்வுக்கு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

**“சர்வஜன வாக்குரிமையைப் பேணிப் பாதுகாக்கின்ற ஒரு நாடு”**

தேர்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் எவை? அவை ஏன்? எதிர்பார்க்கப்படும் பணிகள் எவை? எவ்வாறு அக்குறிக்கோள்களை அடைந்து கொள்வது? ஆகிய விடயங்களைக் கருத்திலெடுத்து தேர்தல் ஆணைக்குழுவின் பணிக்கூற்று கீழ்வருமாறு தயாரிக்கப்பட்டது.

**“மக்களின் இறைமை, வாக்குரிமை என்பவற்றோடு தொடர்புடைய சனநாயகக் கோட்பாடுகளைப் பேணி, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் உரிய அனைத்து தரப்பினரையும் அறிவூட்டுகின்ற சுதந்திரமானதும், நீதியானதும் நம்பத்தகுந்ததுமான தேர்தல் செயன்முறையொன்றை வினைத்திறன் மிக்கதாகவும், விளைத்திறன் மிக்கதாகவும் வழிநடாத்துதல்.”**




முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி கருத்திலெடுகின்ற பொழுது அடிப்படை மூலோபாய பகைப்புலம் (Key Strategic Areas) அல்லது கவனஈர்ப்புப் பகுதிகள் (Thrust Areas) என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. அத்தகைய கவனஈர்ப்புப் பகுதிகள் நான்கு அடையாளம் காணப்பட்டன. அவையாவன

01 அடிப்படைப் புரிந்துணர்வை மேம்படுத்தலும், கடமையுணர்ச்சியை உருவாக்கலும்

02 சட்ட மற்றும் சட்ட மதியுரை நடவடிக்கைகள்

03 தாபன அபிவிருத்தி

04 ஆராய்ச்சியும் தகவல் பரிமாற்றமும் ஆகும்.

தேர்தல் ஆணைக்குழுவின் இலக்குகளாவன (Goals)

- சுதந்திரமானதும் நீதியானதுமாக நடாத்தப்படுகின்ற தேர்தல்களில் தகைமை வாய்ந்த அனைத்து வாக்காளர்களும் தமது வாக்கினை அச்சமின்றி சுதந்திரமாகவும், இரகசியமாகவும் பிரயோகிக்கின்றனர்.
- வாக்கினைப் பிரயோகிக்கும் உரிமை மற்றொருவரால் கையகப்படுத்தப்பட முடியாத ஓர் உரிமையென பிரசைகள் புரிந்துகொண்டுள்ளதோடு, தேர்தல் செயன்முறையில் அனைத்து பிரசைகளும் செயற்பாட்டு ரீதியாக பங்குகொள்கின்றனர்.
- தேர்தல் காலப்பகுதிக்குள் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமானதும் நீதியானதுமான வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் அனைவரையும் உள்ளடக்கிய சீராக்கம் செய்யப்பட்ட தேருநர் இடாப்பொன்று தயாராக இருக்கின்றது.
- விளிம்பு நிலை சமூகத்தின் அனைத்து பிரசைகளும் நம்பிக்கையோடும் போதியளவிலும் தேர்தல் செயன்முறைகளில் பங்குகொள்கின்றனர்.
- தேர்தல் செயன்முறை திறமையாகவும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் நிருவகிக்கப்படுகின்றது.
- தேர்தல் செயன்முறை மற்றும் தேர்தல் ஆணைக்குழு தொடர்பான புள்ளிவிபரங்களும் தகவல்களும் தேவையான தரப்பினருக்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு போதியளவில் வழங்கப்படுகின்றன.

அனைத்து தரப்பினர்களோடும் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டங்கள் மற்றும் ஏனைய பகுப்பாய்வுளிலிருந்து திட்டத் தயாரிப்பு குழுவினால் மிகுந்த சிரத்தையோடு தேர்ந்தெடுக்கப்பட்ட 46 குறிப்பான குறிக்கோள்கள் மற்றும் 136 செயற்பாடுகள் பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்படுவதனூடாக மேற்குறித்த 7 இலக்குகளையும் அடைந்து கொள்ள தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

தேர்தல் செயன்முறையில் சுதந்திரமானதும், நீதியானதும் கால ஒழுங்கிற்குட்பட்டதுமான தேர்தல்கள் நடாத்தப்படுவதன் மூலம் மக்களின் இறைமையைப் பாதுகாக்கின்ற மிக இன்றியமையாத நிறுவனமென பிரசைகள் கருதுவது தேர்தல் ஆணைக்குழுவையாகும். ஆதலால் அது சுயாதீன ஒரு நிறுவனமாக விளங்க வேண்டுமெனவும், ஒத்திவைக்கப்பட வேண்டுமென சட்ட ஆக்குநர்களால் தீர்மானிக்கப்படாவிடத்து கால அட்டவணைக்கேற்ப அனைத்து தேர்தல்களையும் நடாத்த அது தயார் நிலையில் இருக்க வேண்டுமெனவும் பிரசைகள் எதிர்பார்க்கின்றனர். அவ்வெதிர்பார்ப்பை நிறைவேற்றிக் கொள்வதாயின் தேர்தல் ஆணைக்குழுவிற்கு தெளிவானதும் வலுவானதுமான ஒரு நோக்கும், ஒரு பணிக்கூற்றும், இலக்குகளும், குறிக்கோள்களும் காணப்படுதல் வேண்டும். இவ்விடயங்களை வெற்றிகரமாக ஆற்றிக்கொள்வதற்காக தெளிவானதும், நடைமுறைச் சாத்தியமிக்கதுமான ஒரு திட்டம் காணப்படுவது மிக இன்றியமையாத ஒரு விடயமாகும். இவ்வாறு நான்கு மாத காலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த பங்களிப்பு மூலோபாயத்திட்டம் தொடர்பான முயற்சிகள் காரணமாக மேலே காட்டப்பட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய முழுமையான நான்கு ஆண்டுகளை அளாவிய மூலோபாயத் திட்டமொன்றைத் தேர்தல் ஆணைக்குழுவிற்காக தயாரித்துக் கொள்ள முடிந்தது. இதற்கமைய இத்திட்டத்தை உத்தேச நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகள் என்பவற்றை நிறைவேற்றுகின்ற ஒரு செயற்பாட்டுத் திட்டமாக மாற்றிக் கொள்வதற்கு உரிய வசதி வாய்ப்புக்களையும் அர்ப்பணிப்போடு செயற்படுகின்ற திறமையான பணியாட் குழுவினர்களையும் ஒருங்கிணைத்துப் பணியாற்றி மக்களின் சர்வஜன வாக்குரிமையையும் சனநாயகத்தையும் பாதுகாக்க விழைகின்றோம்.

# பொருளடக்கம்


முன்னுரை - ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தினர்களின் II
நிறைவேற்றுச் சுருக்கம் IV

**பகுதி I**

1.அறிமுகம் 1
1.1 இலங்கை தொடர்பான அறிமுகம் 1
1.2 வரலாற்று, அரசியல் மற்றும் சமூகப் பின்னணி 1
1.3 இலங்கையில் பிரபல்யமடைந்த ஐரோப்பிய அரசியல் கலாச்சாரம் 4
1.4 இலங்கையின் அரசியலமைப்புச் சீர்த்திருத்தமும் தேர்தல் வாக்குரிமை தொடர்பான வரலாறும் 4
1.5 சுதந்திரத்திற்குப் பிந்திய காலம் 6
1.6 இலங்கை தேர்தல் முகாமைத்துவ நிறுவனத்தின் வரலாறு 9
2.தேர்தல் ஆணைக்குழுவிற்கான பங்களிப்பு மூலோபாயத் திட்டம் 10
2.1. பங்களிப்பு மூலோபாயத் திட்டமொன்றின் தேவைப்பாடு 10
2.2. ஊகிக்கப்பட்ட எதிர்கால சூழ்நிலை (Projected Future Scenario) 11
3.விருத்தி செய்யப்பட வேண்டிய பலங்களும் துறைகளும் 13
3.1. பலங்கள் 13
3.2. விருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள் 13
4.பங்களிப்பு மூலோபாயத் திட்டத் தயாரிப்பின் போது பின்பற்றப்பட்ட முறைமை 14
5.தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகளின் உருவாக்கம் 16
5.1. தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கு 16
5.2. தேர்தல் ஆணைக்குழுவின் பணிக்கூற்று 16
6.பெறுமானங்கள், கவனம் ஈர்ப்புப் பகுதிகள் மற்றும் இலக்குகள் 17
6.1. பெறுமானங்கள் 17
6.2. கவனம் ஈர்ப்புப் பகுதிகள் 18
6.3. இலக்குகள் 19
6.4. இலக்குகளும் உரிய குறிக்கோள்களும் 20
7.இலக்குளை அடைதல் 24
8.ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 25
9.அமுலாக்கம், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு 26
10.சவால்களும் மட்டுப்பாடுகளும் 26

## பகுதி II


1.பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் 27

2.பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் செயற்பாடுகள் பொறுப்புக்கள் காலக்கெடுக்கள் மற்றும் செலவினங்கள் 61

3.பின்னிணைப்பு 81

3.1. இலங்கையின் தேர்தல் முறைமை தொடர்பான கால அட்டவணை 81

3.2. தேர்தல்கள் திணைக்களத்தின் ஆணையாளர்களும், தேர்தல் ஆணைக்குழுவும 83

3.3. பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் மதியுரைக் குழுவின் அங்கத்தினர்கள் 86

3.4. பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் திட்டமிடல் குழுவின் அங்கத்தினர்கள் 86

3.5. பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் உதவிக் குழுவின் அங்கத்தினர்கள் 86

3.6. பங்களிப்பு மூலோபாயத் திட்டத்திற்கு விசேட பங்களிப்பு வழங்கியவர்கள் 87

3.7. பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தை தயாரிப்பதற்கான புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக நடாத்தப்பட்ட பங்குதார்களின் ஆலோசனைக் கூட்டங்களின் பட்டியல் 88

3.8. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் தேர்தல் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளும் 91

4.புகைப்படக் காட்சியகம் 97

5.சுருக்கச் சொற்றொடர்கள் 105

# பகுதி I

வரலாற்று, அரசியல், சமூகப் பின்னணியின் சுருக்கம்.

## 1.அறிமுகம்

### 1.1 இலங்கை தொடர்பான அறிமுகம்

இலங்கை என்பது 65,610 சதுர கிலோமீற்றர் பரப்பளவுடன் கூடியதும், அதில் 64,364 சதுர கிலோமீற்றர் பரப்பு நிலத்தையும், 980 சதுர கிலோமீற்றர் பரப்பு நீரையும் கொண்டதும், 1,340 சதுர கிலோமீற்றர் பரப்பு கடற்கரையோரத்தையும் கொண்ட இந்துமாசமுத்திரத்தில் அமையப் பெற்றுள்ள ஒரு தீவாகும். இது ஆசியா கண்டத்தில் அமைந்துள்ளது. இது $7.5653^0$ பாகை வடஅகலாங்கையும், $80.4303^0$ பாகை கிழக்கு நெட்டாங்கையும் கொண்டமைந்தது. இதன் ஆகக் கூடிய நீளம் (தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை முனை வரையிலான) 432 கிலோமீற்றர்களும், ஆகக் கூடிய அகலம் (கொழும்பு முதல் சங்கமம் மலை வரை) 224 கிலோமீற்றர்களுமாகும். இது அயன மண்டலத்தைச் சேர்ந்த பருவக்காற்று பெயர்ச்சி மழையுடன் கூடிய காலநிலையைக் கொண்டிருக்கின்றது. அவை வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலம் (திசெம்பர் முதல் மார்ச் வரை) மற்றும் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காலம் (யூன் முதல் ஒக்தோபர் வரை) என்பனவாகும்.

பலத்த பின்னடைவுக்கு மத்தியில் 2010 ஆம் ஆண்டு இலங்கை ஒரு நடுத்தர வருமானம் பெறுகின்ற நாடாக மாறியது. மானிட அபிவிருத்திக் குறிகாட்டி (HDI) 2014 இல் 0.757 ஆக இருந்ததோடு, 188 நாடுகளில் 73 ஆம் இடத்தை வகித்தது. ஆள்வீத தேசிய உற்பத்தி 3,800 அமெரிக்க டொலர்களாகும். சராசரி எழுத்தறிவு வீதம் 92.7 சதவீதமாக உள்ளதோடு, பிறப்பின் போது ஆயுட் காலம் 74.9 ஆண்டுகளாகும். மானிட அபிவிருத்தி அளவீடுகளை அடிப்படையாக வைத்துப் பார்க்கின்றபோது இலங்கை ஒப்பீட்டளவில் உயர்ந்த மானிட அபிவிருத்தியைப் பெற்றிருக்கின்றது.

### 1.2 வரலாற்று, அரசியல் மற்றும் சமூகப் பின்னணி

இலங்கை வரலாற்றுக் காலம் முதலே அழகிய பல்லின குழுமங்களைத் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. சிங்களவர் மற்றும் தமிழர் ஆகியோரின் சனத்தொகை முறையே 74 சதவீதம் மற்றும் 15.4 வீதம் என்பனவாகும். அடுத்ததாகவுள்ள முஸ்லிம்களின் சனத்தொகை வீதம் 9.2 சதவீதமாகும். முஸ்லிம்களில் ஒல்லாந்தர்களினால் கிழக்குலக தூரப் பிரதேசங்களிலிருந்த தமது காலனித்துவ நாடுகளிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்ட மலாயா இனத்தவர்களும் ஒரு பகுதியினராவர். 0.2% பறங்கியர்களும் இங்கு வாழ்வதோடு, அவர்கள் இலங்கையை ஆட்சி புரிந்த ஐரோப்பியர்களின் வழிவந்தவர்களாவர். ஏனைய இனரீதியான பிரிவினர்கள் போன்றே இவர்களும் அடுத்த இனப்பிரிவினரோடு இரண்டறக் கலந்திருக்கிறார்கள். போர்த்துக்கேயரோடு இந்நாட்டுக்கு வருகைதந்த ஆபிரிக்கர்கள் இந்நாட்டின் பல்லினத்தன்மையை மேலும் மிளிரச் செய்ததோடு, அவர்கள் ஐபீரியர்களின் மரபு வழக்கிற்குரிய பிராந்திய சங்கீதக் கலையை உயிரோட்டத்துடன் பேணிவருகின்றனர்.

நிகழ்கால இலங்கை பல்லின, பல்சமய நாடொன்றாகும். 2011 ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணிப்பீட்டுக்கமைய மொத்தச் சனத்தொகை 20.2 மில்லியன்களாகும். இச்சனத்தொகை சிங்களவர், தமிழர் (இலங்கையர் மற்றும் இந்தியர்), இலங்கைச் சோனகர், மலாயர், பறங்கியர், வேட்டுவர் மற்றும் ஏனைய இனக்குழுமங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. இதற்கமைய சிங்களவர்களின் சனத்தொகை 15.1 மில்லியன்களாகும். தமிழர்கள் 3 மில்லியன்களாகும், (இலங்கைத் தமிழர்கள் 2.2 மில்லியனும் இந்தியத் தமிழர்கள் 0.8 மில்லியன்களுமாகும்), இலங்கைச் சோனகர்களின் எண்ணிக்கை 1.8 மில்லியன்களும், மலாயர்களின் எண்ணிக்கை 0.04 மில்லியன்களும், பறங்கியர்களின் எண்ணிக்கை 0.03 மில்லியன்களும், ஏனையோர் 0.23 மில்லியன்களுமாகும். (வரைபடம் I) சமய ரீதியான சனத்தொகையை எடுத்துக் கொண்டால் 14.2 மில்லியன் பௌத்தர்களும், 2.5 மில்லியன் இந்துக்களும், 1.9 மில்லியன் முஸ்லிம்களும், 1.5 மில்லியன் கத்தோலிக்கர்களும். 0.01 மில்லியன் ஏனையோரும் உள்ளனர். 2015 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 15 மில்லியன்களைத் தாண்டியுள்ளது. (வரைபடம் II)

படம் I

இனக்குழுவின் அடிப்படையில் சனத்தொகை




படம் II

சமயக்குழுவின் அடிப்படையில் சனத்தொகை




2500 ஆண்டுகளுக்குரிய எழுத்தாவணத்துடன் கூடிய ஒரு வரலாற்றைக் கொண்டிருக்கின்றமை இலங்கையின் மற்றொரு மகிமையாகும். கிறிஸ்துவுக்கு முன்பு 6 ஆம் நூற்றாண்டில் விஜயனின் வருகை நிகழ்ந்த காலப்பகுதியில் கூட, வளர்ச்சியடைந்த கலாச்சார இயல்புகளை தன்னகத்தே கொண்ட மனிதக் குடியேற்றங்கள் இந்நாட்டில் காணப்பட்டதை உறுதிப்படுத்துகின்ற வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. இலங்கையின் முதல் இராஜதானி (தலைநகரம்) அநுராதபுரமாகும். இந்த யுகத்தில் காலத்திற்குக் காலம் மாகமையை மையமாகக் கொண்டு தெற்கிலும் களனியை மையமாகக் கொண்டு மேற்கிலும் பிராந்திய ஆட்சியாளர்கள் உருவானதற்கான ஆவணச் சான்றுகள் காணப்படுகின்றன. அதைத் தொடர்ந்து பல்வேறு காரணங்களுக்காக இந்த இராசதானி பொலன்னறுவை, தம்பதெனிய, குருணாகலை, கம்பளை, கோட்டை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. விஜய மன்னனோடு ஆரம்பித்த மன்னர் பரம்பரை கண்டி இராஜதானியின் இறுதி மன்னனாகிய ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனோடு முடிவுக்கு வந்தது. கி.மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 19 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதி வரையிலான 25 நூற்றாண்டு கால வரலாற்றில் 176 மன்னர்களால் இலங்கை ஆளப்பட்டுள்ளதாக வரலாற்றுச் சான்றுகள் நிரூபிக்கின்றன. இந்த இராச பரம்பரைக்குள் இராணிமார் சிலரும் இந்நாட்டை ஆட்சிபுரிந்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது.

மன்னராட்சி முறையில் விசேட அம்சங்கள் சில காணப்பட்டன. அரசின் தலைவராக இருந்தவர் மன்னராவார். நிருவாகம் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மன்னரிடமே குவிந்திருந்தன. சட்டவாக்கம், சட்ட அமுலாக்கம் மற்றும் சட்ட ஆட்சி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மன்னரிடமே இருந்தன. மன்னரின் கீழ் பிரதி மன்னர்கள், உப மன்னர்கள் மற்றும் பிராந்திய ஆட்சியாளர்கள் ஆகியோர் காணப்பட்டதற்கான சான்றுகளும் உள்ளன. மன்னருக்கு ஆலோசனை வழங்கவும் மன்னரின் கட்டளைகளை நிறைவேற்றவும் அமைச்சர்கள் இருந்தனர்.

இந்த யுகத்தில் தெற்காசியாவிலிருந்தும் இந்தியாவின் ஏனைய பிரதேசங்களிலிருந்தும் சீனா, பர்மா (மியன்மார்), சீயம் (தாய்லாந்து), அரேபிய, பாரசீக, கிரேக்க, ரோம இராஜதானிகளிலிருந்தும், ஏகாதிபத்தியங்களிலிருந்தும் இலங்கைக்கு வர்த்தக நோக்கிலும் சிலவேளைகளில் ஆக்கிரமிப்பு நோக்கிலும் தூதுவர்கள் வருகை தந்துள்ளனர். 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கை சிங்கள பெரும்பான்மையையும் கணிசமான தொகையுடன் கூடிய தமிழ், முஸ்லிம் மக்கள், ஆதிவாசிகள் மற்றும் ஏனைய இனத்தினர்களைக் கொண்ட சிறு பான்மையையும் கொண்ட ஒரு நாடாக விளங்கியது.

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அதாவது 1505 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில் போர்த்துக்கேயர்கள் இந்நாட்டிற்கு வருகை தந்தனர். வர்த்தக நடவடிக்கைகளுக்காக இங்கு வருகைதந்த போர்த்துகேயர்கள் 150 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தனர். ஒல்லாந்தர்களின் வருகையுடன் போர்த்துகேயர் ஆட்சி முடிவடைந்ததோடு, கரையோர ஒல்லாந்தரின் ஆட்சி 1656 முதல் 1796 வரை நிலவியது. ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்த கரையோரப் பிரதேசங்களை 1796 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டனர். 1802ல் ஏமியன்ஸ் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை காலனித்துவ நாடொன்றாக மாறியது. 1815 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட கண்டியர் ஒப்பந்தத்தை தொடர்ந்து முழுநாட்டினதும் ஆட்சி பிரித்தானியர் கைக்கு வந்தது. 1948 வரை காணப்பட்ட பிரித்தானியரின் ஆட்சி சுதந்திரத்தைத் தொடர்ந்து இந்நாட்டிலிருந்து விடைபெற்றது.

மேற்கத்தேயவர்களின் ஆட்சிக் காலம் அரசியல், பொருளாதார சமூக மட்டங்களில் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் மன்னராட்சி முறை முடிவுக்கு வந்ததோடு, இந்நாட்டின் அரசியல் களத்திற்குள் பிரதிநிதித்துவ சனநாயகக் கோட்பாடுகள் உட்பிரவேசித்தமையைக் காணமுடிகின்றது.

அதேபோன்று அதுவரை காணப்பட்ட கிராமிய விவசாயத்தை அடிப்படையாக கொண்ட பிழைப்பூதியப் பொருளாதாரம், தேயிலை, தென்னை, இறப்பர், கொக்கோ மற்றும் கோப்பி போன்ற பயிர்களைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பெருந்தோட்டப் பொருளாதாரமாக மாற்றமடைந்தது. மலைநாட்டின் தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான ஊழியர்களாக தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களை ஆங்கிலேய பெருந்தோட்ட துறையினர் தருவித்து தோட்டங்களில் குடியேற்றினர். இது பிரித்தானிய யுகத்தில் ஏற்பட்ட மிகமுக்கியமான ஒரு நிகழ்வாகும்.

சமயங்கள் என்ற வகையில் பௌத்தம், இந்து மற்றும் இஸ்லாம் என்பன காணப்பட்டதோடு, ஐரோப்பியர் வருகையோடு கிறிஸ்தவ மதமும் இணைந்து கொண்டது. ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானிய ஆட்சியின் போது ரோம டச்சுச் சட்டமும், ஆங்கிலச் சட்டமும் இந்நாட்டிற்குள் அறிமுகப்படுத்தப்பட்டன. சுதேச சட்டச் செயன்முறைக்குள் இச்சட்டங்கள் ஆழமாக வேருன்றியதோடு இன்றும் கூட வலுவாக காணப்படுகின்றன.

1948 பெப்ரவரி மாதம் 04 ஆந் தேதி இலங்கை பிரித்தானியரின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றமை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சிமுறையை நோக்கிய பயணத்தில் டொனமூர் மற்றும் சோல்பரி ஆணைக்குழுக்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் அளப்பரிய பணியை ஆற்றியுள்ளன. அவை பின்னர் விரிவாக எடுத்துக்காட்டப்படவுள்ளன. எவ்வாறாயினும் 1948 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற சுதந்திரம் ஒரு பரிபூரண சுதந்திரமாகக் காணப்படவில்லை. ஏனெனில் சிலர் வாதித்தது போல இங்கிலாந்தின் இராணியார் தொடர்ந்தும் எமது நாட்டின் தலைவராக இருந்தமையும் நீதிமன்றத் துறையின் இறுதித் தீர்ப்பு எடுக்கப்படுகின்ற மீயுயர் நீதிமன்றமாக கோமறைக்கழகம் காணப்பட்டமையும் அது ஒரு பூரணமான சுதந்திரமாகக் காணப்படவில்லையென்பதற்கான சான்றுகளாகும்.

1972 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, இந் நிலைமை முடிவுக்கு வந்தது. 1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கிணங்க பெயரளவிலான சனாதிபதி ஒருவரினதும், நிறைவேற்று அதிகாரமிக்க பிரதமர் ஒருவரினதும், அமைச்சரவை ஒன்றினதும் ஒருங்கிணைப்புடன் கூடிய ஆட்சிமுறையொன்று நாட்டிற்குக் கிடைக்கப்பெற்றது.

1947 இல் சோல்பரி அரசியலமைப்பினால் உருவாக்கப்பட்ட பிரதிநிதிகள் சபை, செனட் சபை மற்றும் பிரதம மந்திரி உள்ளிட்ட அமைச்சரவை என்பவற்றிற்குப் பதிலாக, 1972 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பினால் பெயரளவிலான சனாதிபதி ஒருவரும், பிரதம மந்திரி உள்ளிட்ட அமைச்சரவையொன்றும் இராஜாங்க மற்றும் தேசிய அமைச்சர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஆட்சிமுறையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது.

1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினால் பெயரளவிலான சனாதிபதி, நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதியாக மாற்றப்பட்டார். பிரதம மந்திரியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. சனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை பிரதான நிறைவேற்றுத்துறையாக மாறியது.

பல்லின, பல் சமய மற்றும் பல் கலாச்சாரங்களுடன் கூடிய மக்களைக் கொண்ட இலங்கையில், 1931 ஆம் ஆண்டு முதல் சர்வஜன வாக்குரிமை பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது பாராளுமன்ற சனநாயகம் செயற்படுகின்ற ஒரு நாடாகும். 1948 ஆம் ஆண்டு முதல் மக்கள் தமது வாக்குகளினால் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். 1948 ஆம் ஆண்டிலிருந்து 1955 ஆம் ஆண்டு வரை உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் ஆணையாளரினாலும் பாராளுமன்றத் தேர்தல்கள் பாராளுமன்றத் தேர்தல்கள் ஆணையாளரினாலும் நடாத்தப்பட்டன. பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் திணைக்களம் என்பன ஒருங்கிணைக்கப்பட்டு சுயாதீன தேர்தல் ஆணையாளர் ஒருவரின் கீழ் தேர்தல்கள் திணைக்களம் நிறுவப்பட்டமையால், 1955 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி அதிமுக்கியத்துவம் பெறுகின்றது. அன்றுமுதல் அனைத்து பொதுத் தேர்தல்களும் இடைத் தேர்தல்களும் மாகாண சபைத் தேர்தல்களும், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் புதிதாக நிறுவப்பட்ட தேர்தல்கள் திணைக்களத்தின் தேர்தல்கள் ஆணையாளரினால் நடாத்தப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக ஏனைய விடயங்களோடு சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்றும் நிறுவப்படுவதற்கான ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும் உண்மையில் தேர்தல் ஆணைக்குழு பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் பின்னரே அமைக்கப்பட்டது. அதற்கமைய 2015.11.13 ஆந் தேதி அரசியலமைப்புச் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட அங்கத்தினர்கள் மூவருடன் கூடிய தேர்தல் ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டது. அது 2015.11.17 ஆந் தேதி முதல் செயற்படத் துவங்கியது.

## 1.3 இலங்கையில் பிரபல்யமடைந்த ஐரோப்பிய அரசியல் கலாச்சாரம்.

1505 ஆம் ஆண்டு இந்நாட்டிற்கு வருகை தந்த போர்த்துக்கேயர் இந்நாட்டை ஆக்கிரமித்த முதல் ஐரோப்பிய இனத்தினராவர். 1517 ஆம் ஆண்டில் கொழும்பில் துறைமுகம் ஒன்றுடன் கூடிய அதிகாரக் கோட்டையொன்றை நிர்மாணித்ததோடு, படிப்படியாக தீவின் கரையோரப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். அவர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பிரதேசங்களை அப்பிரதேசங்களுக்குப் பொறுப்பான அலுவலர்களின் கீழ் கொண்டு வந்தடோடு, நாட்டில் காணப்பட்ட அடிப்படை நிருவாக கட்டமைப்பில் பெரியளவிலான மாற்றமொன்றைக் கொண்டுவராத போதிலும் நாட்டிலிருந்த மரபு ரீதியான நிறுவனங்களை போர்த்துக்கேய நிருவாகிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். இந்நாட்டின் மக்கள் போர்த்துக்கேயர்களின் ஆக்கிரமிப்பையும் அவர்களின் செல்வாக்கையும் வெறுத்ததோடு, 16 ஆம் நூற்றாண்டு முழுவதிலும் அடிக்கடி இரு தரப்பினர்களுக்குமிடையே யுத்தங்கள் ஏற்பட்டன.

1602 ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் இந்நாட்டில் காலடி எடுத்து வைத்தனர். அது சிங்களவர்கள் போர்த்துக்கேயர்களை விரட்டி அடிக்கும் வல்லமையுள்ள ஏதேனும் ஒரு சக்தியை எதிர்பார்த்திருந்த ஒரு சந்தர்ப்பமாகும். கண்டி இராச்சிய மன்னர் இதற்காக ஒல்லாந்தரின் உதவியைக் கோரினார். கடுமையான பல யுத்தங்களின் பின்னர் 1656 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர்கள் கொழும்பை ஒல்லாந்தர்களுக்குக் கையளித்தனர். 1640 ற்கும் 1656 இற்கும் இடைப்பட்ட காலத்தில் கடுமையாகப் போராடிய ஒல்லாந்தர் போர்த்துக்கேயரின் ஆட்சியை முழுமையாக இலங்கையிலிருந்து துடைத்தழித்தனர். 1656 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர்கள் கொழும்பை ஒல்லாந்தருக்குக் கையளித்ததோடு, அவர்கள் கரையோரப் பிரதேசங்களை 1796 ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்தனர்.

பிரித்தானியர்கள் இந்நாட்டிற்கு 1796 இல் வருகை தந்தனர். 1802 இல் ஏமியன்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் ஒல்லாந்தர்களின் ஆட்சியின் கீழ் இருந்த பிரதேசங்களை பிரித்தானிய ஆட்சியின் கீழ் கொண்டுவந்தமையால் இலங்கை பிரித்தானிய முடிக்குரிய ஒரு காலனித்துவ நாடாக மாறியது. 1803 ஆம் ஆண்டில் பிரித்தானியர்கள் இந்நாட்டின் இறுதி இராஜதானியான கண்டி இராச்சியத்தினை ஆக்கிரமித்தனர். அதில் அவர்கள் தோல்வியடைந்தனர். 1815 ஆம் ஆண்டு அவர்கள் கண்டி இராச்சியத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததன் மூலம் இலங்கையில் இருந்த கடைசி மன்னராட்சியும் முடிவுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து அதுவரை சுதந்திரமாக இயங்கி வந்த அனைத்து பிரதேசங்களும் பிரித்தானிய ஆட்சியின் கீழ் வந்தது. இலங்கை வரலாற்றில் முதன் முதலாக பிரித்தானியர்கள் அறிமுகம் செய்து வைத்த சிற்சில சனநாயகப் பண்புகள் மூலம் மேற்கத்தேய கோட்பாடொன்றான பிரதிநிதித்துவ மற்றும் பொறுப்பு வாய்ந்த அரசியல் முறையொன்று உருவாகியது. 1815 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைக்கும் வரை பிரித்தானியர்கள் இலங்கையை ஆட்சி செய்தனர்.

## 1.4 இலங்கையின் அரசியலமைப்புச் சீர்த்திருத்தமும் தேர்தல் வாக்குரிமை தொடர்பான வரலாறும்

### 1.4.1சுதந்திரத்திற்கு முந்திய காலப்பகுதி

சுதந்திரத்திற்கு முன்னரான அரசியலமைப்பு சீர்திருத்தங்களும் வாக்குரிமையின் பரிணாமமும்.

#### (அ) இலங்கை தேசிய காங்கிரஸ்

1888ல் இலங்கை தேசிய சங்கம் (ஊநலடழெ யேவழைெயட யுளளழஉயைவழைெ) உருவாகியது. 1917 இல் இலங்கை சீர்திருத்த லீக் (ஊநலடழெ சுநகழசஅ டுநயபரந) ஆரம்பிக்கப்பட்டது. இந்த அரசியல் ஒழுங்கமைப்புக்கள் இரண்டோடும் இரண்டறக் கலந்து பணியாற்றிய சிங்கள மற்றும் தமிழ் அரசியல் வாதிகள் தேசிய அரசியல் இயக்கம் ஒன்றாக ஒன்றிணைந்து 1919 திசெம்பர் மாதம் 11 ஆம் திகதி இலங்கை தேசிய காங்கிரசை (ஊநலடழெ யேவழைெயட ஊழபெசநளள) நிறுவினர். இலங்கை தேசிய காங்கிரஸ் அரசியல் சீர்திருத்தங்களுக்காக தொடர்ந்தும் குரல் எழுப்பியது. இதற்கமைய 20 ஆம் நூற்றாண்டில் முன்னரைப்பகுதியில் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலப்பகுதிக்குள் தேசிய இயக்கம் தலைதூக்கியதோடு, அது 1948 ஆம் ஆண்டில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள உறுதுணையாக விளங்கியது.

#### (ஆ) கோல்புறூக் கமிறன் சீர்திருத்தம்.

சட்ட ஆட்சியின் அடிப்படையிலான உபயோகத்தன்மை மிக்கதும் தாராளவாதத்தன்மை உடையதுமான அரசியல் கலாச்சாரமொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் கமிறன்

அரசியலமைப்புத் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இது உயர் நிலப் பிரதேசங்கள், கரையோர மாகாணங்கள் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்த ஒரு தனி அலகு கொண்ட அரசாங்கத்தை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் பிரதிநிதிகள் சட்டவாக்கத்திற்கு வழியமைக்கும் விதத்தில் ஒரு நிறைவேற்று சபையும் ஒரு சட்டவாக்க சபையும் தாபிக்கப்பட்டன. பிரித்தானியர்களினால் இலங்கை சிவில் சேவை, நவீன சட்ட, கல்வி மற்றும் வைத்திய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேலைத்தேய கல்வி கற்ற ஒரு வகுப்பினர் உருவாகினர். இந்நாட்டின் சனத்தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல்வேறு இனக் குழுமங்களிலிருந்து உருவெடுத்த புதிய தலைவர்கள் தேசியவாத அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு இலங்கைச் சட்டவாக்கக் கழகத்தோடு இணைந்து கொண்டனர். அக்காலப் பகுதியில் அதாவது 20 ஆம் நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப்தங்களிலும் அனைத்து இனக்குழுமங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களிடையே ஒப்பற்ற ஐக்கியம் நிலவியது. இவ்வொற்றுமை பிற்பட்ட காலத்தில் வலுவிழக்கத் துவங்கியது.

### (இ) க்ரூ மெகலம் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

இலங்கையின் அரசியலமைப்பு சீர்திருத்த வரலாற்றில் முதன் முதலாக தேர்தல் மூலம் சட்டவாக்கக் கழகத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படல் 1910 ஆம் ஆண்டு க்ரூ மெகலம் அரசியலமைப்புச் சீர்த்திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சீர்திருத்திற்கமைய சட்டவாக்கக் கழகத்தின் 10 உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களில் 4 பேர் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமை வரையறுக்கப்பட்ட எண்ணிக்கைக் கொண்ட நபர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டது.

### (ஈ) மெனிங் - டெவோன்ஷெயார் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

1920 மற்றும் 1924 ஆம் ஆண்டுகளில் மெனிங் - டெவொன்ஷெயர் சீர்த்திருத்தங்களினூடாக உத்தியோகப்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போதிலும், வாக்களிக்கும் உரிமையில் மாற்றம் கொண்டுவரப்படவில்லை. உயர் கல்வி, செல்வம் மற்றும் பால் என்ற அளவீடுகளுக்கமைய சமூகத்தின் சிற்சில பிரிவினர்களுக்கு மாத்திரம் இவ்வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்டது.

### (உ) டொனமூர் ஆணைக்குழு

டொனமூர் அரசியல் அமைப்பு 1931 ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டது. டொனமூர் சீர்த்திருத்தங்களினால் இனரீதியான பிரதிநிதித்துவம் அகற்றப்பட்டதோடு, இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இச்சீர்திருத்தத்தித்திற்கு முன்னர் வாக்குரிமை மொத்த சனத்தொகையில் 4 வீதத்திற்கு மாத்திரமே உரித்தாகியிருந்தது.

வாக்குரிமை சமூகத்தின் ஒரு சிறிய பகுதியினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் வரை பொதுமக்கள் நாட்டின் நிருவாகம் தொடர்பான ஆர்வமொன்றைக் காட்டமாட்டார்களெனக் கருத்துத் தெரிவித்த ஆணைக்குழு, பாலின வேறுபாட்டைக் கருத்திலெடுக்காமல் 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென விதந்துரைத்ததன் காரணமாக, 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமை இந்நாட்டிற்குக் கிடைத்தது. இதன் கீழ் வாக்காளர் இடாப்பைத் தயாரிக்கின்றபோது ஆட்களின் வதிவு கருத்திலெடுக்கப்பட்டதோடு, தேர்தலொன்றை நடாத்துவதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 01 ஆந் தேதிக்கு முன்னர் உரிய தேர்தல் தொகுதியில் 6 மாத வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். சர்வஜன வாக்குரிமை இலங்கைக்கு அது அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்ற முன்மொழிவு முன்வைக்கப்பட்ட, 1928 ஆம் ஆண்டிலேயே அது பிரித்தானியாவிற்கு கிடைக்கப் பெற்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் முழு ஆசியாக் கண்டத்திலும் சர்வஜன வாக்குரிமையைப் பயன்படுத்தும் பாக்கியம் கிடைக்கப்பெற்ற முதல் நாடு இலங்கையாகும்.

1931 இல் முதன் முதலாக இலங்கையர்களுக்கு தமது தேர்தல் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 50 பேரை அரச பேரவைக்கு நியமனம் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இரண்டாவது அரச பேரவைக்கு 1936 இல் பிரதிநிதிகள் நியமனம் செய்யப்பட்டதோடு, 1941 இன் முன்னரைப்பகுதியில் அக்காலத்தில் நிகழ்ந்த இரண்டாம் உலக மகாயுத்தம் காரணமாக தேர்தலொன்று நடாத்தப்படவில்லை. புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தமொன்றைச் செயற்படுத்துவதற்காக சட்டவாக்கக் கழகத்திற்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்ற தேர்தலொன்று 1947 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது. 1947 ஆம் ஆண்டு வரை டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தம் செயற்பட்டதோடு, அக்காலப்பகுதியில் இந்நாட்டிற்கு ஆணிலப்பத அந்தஸ்து மற்றும் பொறுப்புடன் கூடிய அரசாங்க முறையொன்று வழங்கப்பட வேண்டுமென்ற கோசங்கள் எழுப்பப்பட்டன.

### (ஊ) சோல்பரி ஆணைக்குழு

20 ஆம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டில் ஆரம்பித்த சுதேச மக்களுக்கு நாட்டின் நிருவாக நடவடிக்கைகளில் பெருமளவில் பங்கேற்பதற்கான அவகாசம் வழங்கப்படவேண்டுமென இலங்கையர்கள் மேற்கொண்ட கோசங்களின் பெறுபேறாக இலங்கைக்கு ஒரு புதிய அரசியல் அமைப்பை ஆக்கிக்கொடுப்பதை முன்மொழிவதற்காக பிரித்தானிய அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்ட சோல்பரி ஆணைக்குழு 1944 ஆம் ஆண்டு இந்நாட்டிற்கு வருகை தந்தது.

சோல்பரி ஆணைக்குழு ஒரு புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை முன்மொழிந்தது. இவ்வரசியலமைப்புக்கமைய 101 உறுப்பினர்களில் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 95 உறுப்பினர்களையும் பிரதம மந்திரியின் இணக்கப்பாட்டுடன் ஆளுநரினால் நியமனம் செய்யப்பட்ட 6 உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பிரதிநிதிகள் சபை பரிந்துரைக்கப்பட்டது. 1946 செப்தெம்பர் 26 ஆந் தேதி இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரச கட்டளை விதிக்கப்பட்டது. வாக்காளர் இடாப்பைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துதல் தொடர்பான ஏற்பாடுகள் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த அரச கட்டளையின் கீழ் 1947 ஆகஸ்ட் 23 ஆந் தேதி முதல் 1947 செப்தெம்பர் 20 ஆந் தேதி வரையிலான 19 நாட்களுக்குள் முதலாம் பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப்பட்டது.

இக்காலப் பகுதிக்குள் நிகழ்ந்த ஒரு முக்கியமான நிகழ்வு யாதெனில், 1949 ஆம் ஆண்டின் பிரசாவுரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமது பிரசாவுரிமையை நிரூபிப்பதற்கோ அல்லது பெற்றுக்கொள்வதற்கோ முடியாமற்போன இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உயர் நிலப் பிரதேசங்களில் வசித்த சில தமிழர்களின் பிரசாவுரிமை மாத்திரமன்றி வாக்குரிமையும் இல்லாதொழிந்ததாகும்.

1959 ஆம் ஆண்டில் வாக்குரிமை உரித்தாகின்ற வயதை 21 லிருந்து 18 வரை குறைக்கின்ற திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டமை தேர்தல் தொடர்பாக நிகழ்ந்த ஒரு மிகமுக்கியமான மாற்றமாகும்.

சோல்பரி ஆணைக்குழு பரிந்துரைத்தவாறு இலங்கைப் பாராளுமன்றத்தின் செனட் சபை (மூதவை) 1947 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. செனட் சபையின் 30 உறுப்பினர்களில் 15 உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, எஞ்சிய 15 பேரும் ஆளுநரினால் நியமனம் செய்யப்பட்டனர். செனட் சபையின் பிரதான பணி பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டமொன்றை ஆராய்தல் அல்லது திருத்தியமைத்தல் என்பதனூடாக ஒரு மீளாய்வு சபையாக விளங்கியமையாகும். 1971 மே மாதம் 21 ஆந் தேதி பிரதிநிதிகள் சபையினால் ஆக்கப்பட்ட சட்டமொன்றின் மூலம் செனட் சபை இல்லாதொழிந்தது. 1971 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை அரசியலமைப்பு (திருத்தச்) சட்டத்திற்கு 1971 ஒக்தோபர் மாதம் 02 ஆந் தேதி அரச இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றமையைத் தொடர்ந்து சோல்பரி அரசியலமைப்பின் 8 ஆம் திருத்தமாக அது மாற்றுருப்பெற்றது.

## 1.5 சுதந்திரத்திற்குப் பிந்திய காலம்

### (அ) 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு

1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பு 1972 இன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு (குடியரசு அரசியலமைப்பு) என அழைக்கப்படுகின்றது. 1948 ஆம் ஆண்டில் நாடு பெற்ற சுதந்திரம், சோல்பரி அரசியல் அமைப்பு என்பவற்றிற்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட இது இலங்கையின் இரண்டாம் அரசியல் அமைப்பாகும். நாட்டின் பெயர் "இலங்கை" என்பதற்குப் பதிலாக "ஸ்ரீலங்கா" என பெயரிடப்பட்டதும் இக்குடியரசு அரசியலமைப்பினாலாகும். அதைத் தொடர்ந்து நாடு சுயாதீன குடியரசு என வெளிப்படுத்தப்பட்டது. 1972 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பு 1972 மே மாதம் 22 ஆந் தேதி சட்டமாக்கப்பட்டது. இது தனியான ஒரு சட்டவாக்க சபையாகவும் தேசிய அரச பேரவையாகவும் விளங்கியதோடு, பெயரளவிலான அரசாங்கத் தலைவராக சனாதிபதி ஒருவரையும் தேசிய அரசப் பேரவைக்கு வகை கூறுகின்ற பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையொன்றையும் அங்கங்களாகக் கொண்டிருந்தது. இறைமை முழுமையாக தேசிய அரசப் பேரவைக்குக் காணப்பட்டதோடு, அதன் பதவிக் காலம் 6 ஆண்டுகளாகவிருந்தது. அக்காலத்தில் காணப்பட்ட பிரதிநிதிகள் சபை முதலாம் தேசிய அரசப் பேரவையாக மாறியது. தேசிய அரசப் பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றினால் தீர்மானிக்கப்பட்டது. அதுவரை காணப்பட்ட "நியமன உறுப்பினர்" களுக்கான ஏற்பாடுகள் இதில் காணப்படவில்லை.

## (ஆ) 1978ன் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு

1978 செப்தெம்பர் 07 ஆந் தேதி தேசிய அரசுப் பேரவை முதலாம் குடியரசு அரசியலமைப்புக்கு பதிலாக இரண்டாம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பொன்றை அறிமுகப்படுத்தியது. 2015 மே மாதம் வரை அது பத்தொன்பது முறை திருத்தியமைக்கப்பட்டது. அது 1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்புக்கு பதிலாக பதிலீடு செய்யப்பட்டதோடு, பிரித்தானிய பொதுநலவாய சபைக்குள் டொமினியன் நாடொன்றாக சுயநிர்ணய ஆட்சிமுறை கிடைக்கப்பெற்றதன் பின்னர் உருவான மூன்றாவது அரசியலமைப்பாக விளங்கியது. புதிய அரசியலமைப்பினால் ஒரு தனியான சட்டவாக்கத் துறையும் ஒரு நிறைவேற்று சனாதிபதிப் பதவியும் அறிமுகம் செய்யப்பட்டன. சனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலம் 06 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பினால் பாராளுமன்றத் தேர்தலின் மூலம் தேர்தல் மாவட்டங்களிலிருந்து விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் நியமனம் செய்யப்படுகின்ற 196 உறுப்பினர்களுடன் கூடிய பாராளுமன்றமொன்று உருவாகியது.

பதினான்காம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 வரை அதிகரிக்கப்பட்டது. இவ்வரசியலமைப்பினால் சுயாதீனமான நீதிமன்றமும் நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) ஒருவரும் தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மற்றும் சிற்சில வரைபுகள் தொடர்பாக மக்கள் தீர்ப்பை நடாத்துதலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பின்னிணைப்பு 1இல் இலங்கையில் காணப்பட்ட தேர்தல் முறைமைகளின் பரிணாமம் காலக்கெடுவிற்கிணங்க எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு நாடற்றவர்களுக்கு பிரசாவுரிமை வழங்கும் சட்டத்தினூடாக பிரசாவுரிமையும் வாக்குரிமையும் அற்றுப் போயிருந்த தோட்டப் பிரதேசங்களிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த இந்திய வம்சாவளியினர்களான தமிழர்களுக்கு பிரசாவுரிமை வழங்கப்பட்டமை இலங்கை தேர்தல் வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

## (இ) அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கான முன்மொழிவுகள்

2015 சனவரி மாதம் 08 ஆந் தேதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதிப் பதவியில் மாற்றம் ஏற்பட்டது. இலங்கையின் 06 ஆம் சனாதிபதியாக ஒரு புதிய சனாதிபதி நியமனம் செய்யப்பட்டார். பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக நிறைவேற்றுத்துறை சனாதிபதி அவர்களின் சில அதிகாரங்கள் நீக்கப்பட்டன. 2015 ஆகஸ்ட் மாதம் 17 ஆந் தேதி நடைபெற்ற தேர்தலைத் தொடர்ந்து இலங்கையின் 7ஆம் பாராளுமன்றம் உருவாகியது. சனாதிபதி அவர்களும் அமைச்சரவையும் ஒன்றிணைந்து புதிய அரசியலமைப்பொன்றை வரைவதற்கான முன்மொழிவினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தனர்.

அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கிய அரசியலமைப்பு சபையொன்றையும் புதிய அரசியலமைப்பு வரைபினை மேற்கொள்வதற்கு 17 பேரை உள்ளடக்கிய செயற்குழுவொன்றையும் அமைப்பதற்குப் பாராளுமன்றம் தீர்மானித்தது. அதற்கமைய முழுப் பாராளுமன்றமும் அரசியலமைப்பு சபையொன்றாக மாறியதோடு, புதிய அரசியலமைப்பினூடாக நிறைவேற்று சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு அல்லது அப்பதவியை முழுமையாக நீக்குவதற்கும் புதிய தேர்தல் முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களைக் கருத்திலெடுப்பதற்கான ஒரு குழு நியமிக்கப்பட்டதோடு, அக்குழு நாடெங்கிலும் உள்ள சிவில் சமூக குழுக்களோடும் அரசியல் கட்சிகளோடும் கலந்துரையாடி அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பது தொடர்பான கருத்துக்களைப் பெற்றுக்கொண்டது.

படம் III - இலங்கையின் வாக்கெடுப்புப் பிரிவுகள்



வாக்கெடுப்புப் பிரிவுகளும் தேர்தல்கள் திணைக்களத்தின் வரலாறும்.

## 1.6.1 தேர்தல்கள் திணைக்களம்

1931 ஆம் ஆண்டில் சர்வஜன வாக்குரிமை கிடைக்கப்பெற்ற போதிலும் 1947 ஆம் ஆண்டு வரை தேர்தலை நடாத்துவதற்கென வேறாகக் குறித்தொதுக்கப்பட்ட நிறுவனமொன்று காணப்படவில்லை. இதனால் அப்பொறுப்பு அவ்வச்சந்தர்ப்பங்களில் காணப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனத்திற்கு கையளிக்கப்படும் நடைமுறை பின்பற்றப்பட்டது. இலக்காலப்பகுதியில் ஆணையாளர் ஒருவரும் உதவி ஆணையாளர் ஒருவரும் நியமனம் செய்யப்பட்டதோடு, மாவட்ட மட்டத்தில் தேர்தல்களை நடாத்தும் பொறுப்பு அரசாங்க அதிபர்களுக்குக் கையளிக்கப்பட்டது.

முதலாம் பாராளுமன்றத் தேர்தல் 1947 இல் நடாத்தப்பட்டது. 1946 ஆம் ஆண்டின் உள்ளூர் அதிகார சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய உள்ளூராட்சித் தேர்தல்கள் நடாத்தப்பட்டன. இரண்டாம் பாராளுமன்றத் தேர்தல் 1952 மே மாதம் 20 ஆந் தேதி முதல் 30 ஆந் தேதி வரையிலான காலப்பகுதிக்குள் 4 நாட்கள் நடாத்தப்பட்டன.

1946 ஆம் ஆண்டு முதல் 1955 ஆம் ஆண்டுவரை தேர்தல்களை நடாத்துவற்காக இரண்டு திணைக்களங்கள் காணப்பட்டன. பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களத்திற்கு வாக்காளர் பதிவை மேற்கொள்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்குமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்ததோடு, உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இவ்விரண்டு திணைக்களங்களும் ஒன்றிணைக்கப்பட்டு 1955 ஒக்தோபர் மாதம் 01 ஆந் தேதி தேர்தல்கள் திணைக்களம் அமைக்கப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களத்தின் பிரதான கடமை யாதெனில், சுதந்திரமானதும் நீதியுமான தேர்தல்களை நடாத்தி பிரசைகளின் சர்வஜன வாக்குரிமையை நிலை நாட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் வருடாந்தம் தகைமை பெறுகின்ற வாக்காளர்களை பதிவு செய்வதும் தகைமையற்ற நபர்கள் வாக்காளர் இடாப்பில் உட்சேர்க்கப்படுதலை தவிர்த்தலுமேயாகும். தேர்தல்கள் திணைக்களம் எந்தவொரு அமைச்சின் கீழும் வராத அரசாங்க நிறுவனமொன்றாக விளங்கியதோடு, தேர்தல்கள் ஆணையாளர் நீதிமன்றத்திற்கு மாத்திரமே வகைகூற வேண்டியவராயிருந்தார்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடாத்தப்பட்ட முதலாம் பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து வந்த தேர்தல்கள் மூலமும், 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு அரசியலமைப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு என்பவற்றின் கீழ் நடாத்தப்பட்ட தேர்தல்கள் மூலமும் கிடைக்கப்பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் ஏறத்தாழ 2000 ஆம் ஆண்டளவில் தேர்தல்களை சுதந்திரமாக நடாத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவொன்றை நிறுவவேண்டிய தேவைப்பாடு தொடர்பாக அடிக்கடி கருத்துக்களை முன்வைத்தன.

தேர்தல் ஆணைக்குழுவின் தோற்றம்

## 1.6.2 தேர்தல் ஆணைக்குழு

இதன் விளைவாக 2001 ஒக்தோபர் 03 ஆந் தேதி அரசியலமைப்புக்கு பதினேழாம் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அத்திருத்தத்திற்கமைய அரசியமைப்புச் சபையின் பரிந்துரைக்கமைய சனாதிபதி அவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவை நியமனம் செய்யவேண்டியிருந்தது. எது எவ்வாறாயினும் அரசியலமைப்புச் சபையை நியமனம் செய்வது தொடர்பான பிரச்சினைகள் நிலவியமையால் எதிர்பார்த்தவாறு தேர்தல்கள் ஆணைக்குழு நியமனம் செய்யப்படவில்லை. அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய தேர்தல் ஆணைக்குழுவொன்று நியமனம் செய்யப்படும் வரை ஐந்தாம் தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் ஆணைக்குழுவின் கடமைகளை ஆற்றவேண்டியவராயிருந்தார். 2015 மே மாதம் 15 ஆந் தேதி சட்டமாக்கப்பட்ட பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய அப்போது தேர்தல்கள் ஆணையாளர் பதவியை வகித்த அலுவலர் தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படும் வரை தேர்தல் ஆணையாளரினதும் தேர்தல் ஆணைக்குழுவினதும் அதிகாரங்களை செயற்படுத்தினார். தேர்தல்கள் திணைக்களம் 2015 செப்தெம்பர் 30 ஆந் தேதியளவில் 60 ஆண்டுகளை நிறைவு செய்தது.

இறுதியில் 2015 நவம்பர் மாதம் 13 ஆந் தேதி பத்தொன்பதாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்குமைய தேர்தல் ஆணைக்குழுவிற்கு மூன்று அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டனர். அரசியலமைப்புச் சபையின் பரிந்துரைக்கேற்ப சனாதிபதி அவர்களால் இவ்வங்கத்தினர்கள் மூவரும் நியமிக்கப்பட்டனர். அப்போதைய தேர்தல்கள் ஆணையாளராக பணியாற்றி வந்த திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்கள் தவிசாளராகவும் ஏனைய அங்கத்தினர்களாக சனாதிபதி சட்டத்தரணி திரு. என்.ஜே. அபேசேகர அவர்களும் பேராசிரியர் ரத்னஜீவன் எச். ஹூல் அவர்களும் நியமனம் செய்யப்பட்டனர். தேர்தல்கள் திணைக்களம் தேர்தல் ஆணைக்குழுவாக மாற்றுருப் பெற்றது.

## 2.தேர்தல் ஆணைக்குழுவிற்கான பங்களிப்பு மூலோபாயத் திட்டம்

### 2.1.பங்களிப்பு மூலோபாயத் திட்டமொன்றின் தேவைப்பாடு

2015 நவம்பர் மாதம் 13 ஆந் தேதி தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது. 2015 ஆகஸ்ட் மாதம் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் அரசியலமைப்புச் சபையை நிறுவுவதற்கு ஏகமானதாகத் தீர்மானித்தது. அச்சபை சுயாதீன ஆணைக்குழுக்களை தாபிப்பதற்கான ஆட்களின் பெயர்களை சனாதிபதிக்கு பரிந்துரை செய்தது.

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்திற்கமைய நடந்தொழுகி, நாட்டு மக்கள் தமது நாட்டின் ஆட்சியில் பங்கேற்பதற்கான அவகாசத்தை ஈட்டிக்கொடுப்பதற்கான தேவைப்பாட்டைப் பற்றி கருத்திலெடுத்த தேர்தல் ஆணைக்குழு தனது நோக்கு, பணிக்கூற்று, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றை தயாரிக்க வேண்டுமெனவும் நான்கு ஆண்டுகளுக்கான அமுலாக்கல் திட்டமொன்றைத் தயாரித்தல் இன்றியமையாத முன்னுரிமை நடவடிக்கையொன்றெனவும் புரிந்துகொண்டது. கடந்த மூன்று தசாப்த காலத்திற்குள் நிகழ்ந்திருக்கின்ற சமூக - அரசியல், மற்றும் சமய - கலாச்சார மாற்றங்களைக் கருத்திலெடுத்து, தமது நிறுவனத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்கு கூட்டான ஒரு நோக்கு இருக்கவேண்டுமென்ற தேவைப்பாட்டினைப் புரிந்துகொண்ட தேர்தல் ஆணைக்குழு, பங்களிப்பு மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்தது. தகவல்கள், கருத்துக்கள், முன்மொழிவுகள் மற்றும் மறுபதில்கள் என்பன தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களிலிருந்து ஒன்று சேர்க்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, தயாரிக்கப்பட்ட ஓர் அமுலாக்கல் திட்டமாதலால் இது குறிப்பிடத்தக்கவிதத்திலும் ஒப்பீட்டளவிலும் விரிவான ஒரு முயற்சியாக விளங்கியது.

நீண்ட காலமாக நிலவிய யுத்தத்தினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கும் சமூக மற்றும் அரசியல் சீர்திருத்தங்களுக்கும் பொருந்தத்தக்கவாறு உருவாகியிருக்கின்ற சூழலும் உள்ளக மற்றும் வெளியக சூழல்களின் இயல்பினையும் கருத்திலெடுத்து தமது பணியை பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆற்றிக்கொள்வதற்கான வழிகளைக் கண்டறிவதற்கும் புதிய ஆணைக்குழுவின் மூலோபாயங்களின் போக்கினை வலுப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வாய்த்தது.

பங்களிப்பு மூலோபாயத் திட்ட (ப.மூ.தி) முறைமை விளைதிறன் மிகு முகாமைத்துவத்திற்கான ஒரு புதுக் கண்டுபிடிப்பாகும். நிறுவனத்தை நன்கு கட்டமைக்கின்றதும் அதன் எதிர்காலத்தை முன்னெடுத்துச் செல்லத்தக்கதுமான ஒரு முகாமைத்துவ முறைமையான இது, இந்நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள், கொள்கைப் பூட்கைகள் என்பவற்றை சிறப்பாக வழிநடாத்துமாதலால் நான்காண்டுகளுக்கான அமுலாக்கல் திட்டமொன்றை தயாரிக்கும் நோக்கோடு பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோரிடம் இத்திட்டம் தொடர்பான ஆழமானதும் ஆளுமைமிக்கதுமான அர்ப்பணிப்பைத் தாண்டி தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கு, பணிக்கூற்று, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றைத் தயாரிப்பதற்காக இது பயன்படுத்தப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரிகின்ற ஒவ்வொருவருக்கும் கலந்துரையாடன மேசையில் ஆசனமொன்றும் கருத்துக்களை முன்வைப்பதற்கான வாய்ப்பொன்றும் வழங்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக நடாத்தப்பட்ட பயன்தரு கலந்துரையாடல்களில் அலுவலர்களினால் இனங்காணப்பட்ட மூலோபாய இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வலுவை ஊட்டவல்ல தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கை இனங்காண இந்த மூலோபாயத் திட்டம் துணைபுரிந்தது.

தற்போது காணப்படுகின்ற வேறுபாடுகளை அங்கீகரித்து பிணக்குகள் மற்றும் துருவநிலை வேறுபாடுகள் என்பவற்றைத் தவிர்க்கும் வண்ணம் நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒழுங்கமைப்பு மாற்றங்களை இனங்கண்டுகொள்வதற்கும், தடங்கல்கள் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் என்பவற்றை அடையாளம் கண்டு கொள்வதற்கும் பங்களிப்பு மூலோபாயத்திட்டச் செயன்முறை உறுதுணையாக விளங்கியது. பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தில் சர்ச்சைக்குரிய பிணக்குகள் தொடர்பான அணுகு முறையை (உசவைஉையட ளைளரந யீசழயஉா) பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டு இது செயல்படுத்தப்பட்டது.

எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கான பங்களிப்பு மூலோபாயத் திட்டம்.

## 2.2. ஊகிக்கப்பட்ட எதிர்கால சூழ்நிலை (Projected Future Scenario)

தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளக மற்றும் வெளிப்புறத் தோற்றத்தை பகுப்பாய்வு செய்கையில் ஊகிக்கப்பட்ட கீழ்வரும் எதிர்கால சூழ்நிலைகளின் கீழ் செயற்பட வேண்டிவருமென ஏனைய தரப்பினருடன் செயற்பட்டபோது திட்டக் குழுவால் புரிந்துகொள்ள முடிந்தது. எதிர்கொள்ள வேண்டிய இவ்வெதிர்கால சூழ்நிலைகளில் பல இதன் பின்னர் மேலும் சிக்கலடையக்கூடும். நிறுவனத்தின் எதிர்கால இலக்குகள் மற்றும் பணிகள் என்பவற்றை பூர்த்தி செய்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முயற்சியில் எதிர்கால சவால்களை வெற்றிக்கொள்வதற்காக தனக்கு ஒரு பாரிய பணி கையளிக்கப்படுகின்றதென்பதை தேர்தல் ஆணைக்குழு நன்கு புரிந்துவைத்துள்ளது. இதனோடு தொடர்புடைய விடயங்களின் உள்ளடக்கம், ஒப்பீடு, மாற்றமுறத்தக்க செயன்முறைகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்ததன் மூலம் ஊகிக்கப்பட்ட எதிர்கால சூழ்நிலைகள் சில சுருக்கமாக கீழே காட்டப்பட்டுள்ளன.

### 1.பொருளாதார விடயங்கள்

தற்காலிக பொருளாதார அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்ச்சியாக நிகழுகின்ற போது, நீண்ட கால சமூக நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை பேணவேண்டியுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட செயன்முறைகளை கருத்திலெடுக்காமல் அரசாங்கத்துறையில் நியமனங்களை வழங்குதல் மற்றும் பெற்றுக்கொள்ளல் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. அடிக்கடி தேர்தல்கள் பகுதி பகுதியாக நடாத்தப்படுவது குறையக்கூடுமென்பதோடு, அதனால் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்பும் குறைவடையக் கூடும். அரச வளங்களின் துஷ்பிரயோகத்தை தவிர்ப்பதற்கான சட்ட விதிகள் ஆக்கப்பட்டல் மற்றும் அமுலாக்கப்படல் காரணமாக ஒரு சிறந்த நிலை உருவாக்கப்படக் கூடும். எனினும் வேலையற்றவர்களிடம் காணப்படக்கூடிய தொழில் எதிர்பார்ப்பை அரசியல் வாதிகள் தமக்கு சாதகமான முறையில் பயன்படுத்தவும் கூடும்.

### 2.சமூக விடயங்கள்

தமது அரசியல் கொள்கை சார்பாக வாக்கினையளிக்குமாறு வேட்பாளர்கள் வாக்காளரைத் தூண்டும் விதத்திலான விளிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் காரணமாக வாக்களிப்பதற்கான ஆர்வம் உச்சகட்டத்தை அடைவதற்கான சாத்தியப்பாடுகளும் உண்டு. மாற்றுத் திறனாளிகளுக்கு தடங்கலின்றி வாக்களிப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகள் தொடர்பாக மக்களிடையே நிலவுகின்ற அறியாத்தன்மை தொடர்ந்தும் அவ்வாறே இருக்கக்கூடும். வாக்களிக்கும் முறை தொடர்பாக விளிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினால் தகைமையுள்ள வாக்காளர்களின் நிராகரிக்கப்படுகின்ற வாக்குகளின் சதவீதம் மேலும் குறைவடையக் கூடும். அதற்கிடையே தகைமையுள்ள பிரசைகளில் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தினர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்படுவதற்கு முனைப்பாக ஈடுபாடுகாட்டாத சந்தர்ப்பங்கள் பல காணப்படுகின்றன. மக்களின் கோசங்கள் அதிகாரத்தினால் அடக்கப்படுதல் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்கக்கூடும். தேர்தல் செயன்முறை தொடர்பாக நம்பிக்கை வைத்துள்ள சமூகத்தினரின் நிலைமை தொடர்ந்தும் அதே நிலையில் காணப்படும். தேர்தல் செயன்முறையின் பால் சமூக வலைத்தளங்களின் அழுத்தம் மேலும் தீவிர அடையக்கூடுமென்பதோடு, சமூக வலைத்தளங்கள் அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடும்.

### 3.கலாச்சார விடயங்கள்

இனம், சாதி மற்றும் சமயம் ஆகிய விடயங்கள் வேட்பாளர் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கின்றபோது மேலும் முக்கியத்துவம் பெறக்கூடும். அரசியல் நிகழ்ச்சி நிரலைப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க போலி இனவாதிகள் மீண்டும் தலைதூக்கக்கூடும். சமய ரீதியான குழுக்கள் அரசியலோடு கலந்து சமய விழாக்களை தமது அரசியல் சக்தியை எடுத்துக்காட்டுவதற்காக பயன்படுத்தக்கூடும். அரசமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக்கூடும்.

## 4.அரசியல்

புதிய அரசியல் கட்சிகளின் அங்கீகாரம் தொடர்பாக கடுமையாக நிலவுகின்ற சட்ட வரையறைகளை அகற்றுவதன் மூலம் புதிய அரசியல் கட்சிப் பதிவுக்காக பெருமளவிலான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட இடமுண்டு. இன மற்றும் சமய அடையாளங்களுடன் கூடியதாக அரசியல் கட்சிகளுக்கு பெயர் குறித்தல் மீண்டும் நிகழக்கூடும். வாக்களிப்போரின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்படுகின்ற 70% சதவீதம் வரை அதிகரிக்கக்கூடுமென்பதோடு, அதிகாரத்தில் இருக்கின்ற அரசியல் வாதிகள் தொடர்ந்தும் அதிகாரத்திலிருக்க முயற்சிக்கக் கூடும். சிற்சில உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களும் தத்தம் தனிப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக அரசியல் கட்சிகளின் விடயங்களில் வெகுவாக தலையிடக்கூடும்.

## 5.பாலினம்

உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்கு வேட்புமனு சமர்ப்பிக்கின்றபோது பெண் வேட்பாளர்களுக்கு (25%) உரிய தொகையை வழங்கியதன் காரணமாக பெண்களின் நிலையில் ஒரு விருத்தியைக் காணமுடியுமென்பதோடு, பெண்களுக்கு பிரதான அரசியல் நீரோட்டத்தில் பங்குகொள்வதற்கு இடமளிக்கப்பட்டமையால் சமய, சமூக மற்றும் கலாச்சார அழுத்தல்கள் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்படக்கூடும். பெண் வேட்பாளர் சார்பாக வாக்களிக்கப்படுவதில் நேர்க்கணிய ரீதியான விருத்தியொன்றைக் கண்டுகொள்ள முடியும். அரசியல் தொடர்பாக பெரும்பாலான பெண்களுக்குள் காணப்படுகின்ற பின்னடைவான மனோநிலை தொடர்ந்தும் காணப்படுமென்பதோடு, நிருவாக அதிகாரங்களுக்குள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்வதற்கான சர்வதேச அழுத்தங்கள் தீவிரமடையக் கூடும்.

## 6.சுற்றாடல்

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது சுற்றாடலுக்குத் தீங்கை விளைவிக்கக் கூடிய பொலித்தீன் மற்றும் செயற்கைப் பொருட்கள் என்பவற்றின் பாவனை இதுவரை காணப்படாத அளவிற்கு அதிகரிக்கக்கூடும். பிரச்சார நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய ஒலி மற்றும் வளி மாசடைதல் அதே நிலையில் அவ்வாறே இருக்கக் கூடும். அரசாங்க சொத்துக்களுக்கும் தொடர்பாடல் முறைகளுக்கும் ஏற்படக்கூடிய சேதங்களின் அளவு குறையக்கூடுமென எதிர்பார்க்க முடியுமாயினும் தற்போது காணப்படுகின்ற போக்கு அதேநிலையில் தொடரக்கூடும். பசுமைக் கொள்கை தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படும்.

## 7.தொழிநுட்பம்

தேர்தல் நடவடிக்கைகளுக்காக வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்துதல் தொடர்ந்தும் அதிகரிக்கக்கூடும். புதுப்புது தொடர்பாடல் ஊடகங்களின் அதிகரிப்போடு இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் பயன்பாடு என்பன அதிகரிக்குமாதலால் கிசு கிசு செய்திகளைப் பரப்பக்கூடிய இணையத்தளங்களின் செயற்பாடுகள் அதிகரிக்கக்கூடும். தேர்தல் முடிவுகளை மிக கவர்ச்சிகரமான வகையில் வெளியிடல் விருத்தியடையுமென்பதோடு, அவை பிரபல்யமடையவும் இடமுண்டு. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் வேட்பாளர்கள் குறுந்தகவல் செய்திகளை பெருமளவில் பயன்படுத்தக்கூடுமென்பதோடு, டிஜிடல் திரைகள், தொலைக்காட்சிகள் போன்ற புதிய தொழிநுட்ப உபகரணங்கள் பெருமளவில் பயன்படுத்தக்கூடும்.

## 3.விருத்தி செய்யப்பட வேண்டிய பலங்களும் துறைகளும்

### 3.1. பலங்கள்

தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களோடு அதன் பலங்கள், பலவீனங்கள் என்பவற்றின் உண்மை நிலை தொடர்பாக விரிந்ததொரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதோடு, அதில் அதன் தாபன பொறிமுறையின் நிகழ்கால நிலைமை வெளிப்பட்டது. புதிய தேர்தல் ஆணைக்குழு அரசியலமைப்பினால் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் கூடிய ஒன்றாதலால் முன்பு காணப்பட்ட திணைக்களக் கட்டமைப்பிலும் பார்க்க சுயேச்சையானதும் வலுவானதுமான ஓர் ஒழுங்கமைப்புப் பொறிமுறையுடன் கூடிய நிறுவனமொன்றாகும். பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகச் செயன்முறையொன்றோடு பிணைந்த நீண்டகால அனுபவங்களுடன் கூடிய பணியாட் குழுவொன்று காணப்படுகின்றமையும் ஏனைய அரச நிறுவனங்களோடு ஒப்பிடுகையில் மனித, பௌதிக மற்றும் நிதி வளங்களை முறையாகப் பிரயோகிப்பதற்கான சக்தியும், கொள்கை ரீதியான விடயங்களில் கூட்டுத் தீர்மானங்களை எடுப்பதற்கான சக்தி வாய்ந்த ஆற்றலும் காணப்படுகின்றமை தேர்தல் ஆணைக்குழுவின் சக்திகளை எடுத்துக்காட்டுகின்ற மிக முக்கியமான காரணியென்பது இனங்காணப்பட்டது. மேலும் நேர்மையானதும் வெளிப்பாட்டுத் தன்மை கொண்டதுமான ஒரு நிறுவனம் என்ற வகையில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையும், சர்வதேச தேர்தல் முகாமைத்துவ அதிகாரங்களோடு தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டுள்ளமையும் காரணமாக அதன் திறனும் நிபுணத்துவமும் மேலும் பிரபல்யமடையக் கூடும்.

### 3.2. விருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள்

மேற்குறித்த பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சிகள், ஆற்றல்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் காணப்பட்ட போதிலும் முழுமைத்துவத்தை நோக்கிப் பயணிப்பதாயின் விருத்தி செய்யப்பட வேண்டிய பலதுறைகள் மேலும் காணப்பட வேண்டுமென புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு சிறந்த சேவையொன்றை வழங்குவதற்காக பயனுறு வகையில் மேற்பார்வை செய்யத்தக்க வலுமிக்க பொறிமுறையொன்றினூடாக மாவட்ட அலுவலகங்களுடன் காணப்படுகின்ற தொடர்புகளை மேலும் அதிகரிக்க வேண்டியுள்ளது. சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக வாக்காளரை வலுவூட்டுகின்ற பணிக்குப் பொறுப்பாகவுள்ள தேர்தல் ஆணைக்குழு நன்கு திட்டமிடப்பட்ட வகையிலும் சக்தி வாய்ந்த கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களூடாகவும் வாக்காளரை அறிவூட்டவும் அவர்களின் புரிந்துணர்வை விரிவாக்கம் செய்வதற்கும் கூடிய கவனம் ஈர்க்கப்படல் வேண்டும். "அறிவே சக்தி" என்ற கலாச்சாரத்தைக் கட்டியெழுப்புவதில் அறிவுப் பரிவர்த்தனை மிகப் பயனுறுதி வாய்ந்த ஒரு முறையாதலால், தேர்தல் ஆணைக்குழுவை மிக வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்காக முக்கியமாக தகவல் தொழிநுட்பத் துறையின் தகவல் மற்றும் தொடர்பாடல் அலுவலர்களின் அறிவை விருத்தி செய்வதும் அடிக்கடி அவர்களின் அறிவைச் சீராக்கம் செய்வதும் விருத்தி செய்வதும் அத்தியவசியமான ஒரு விடயமாகும். இதற்காக தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவு விருத்தி செய்யப்படவும் தரமுயர்த்தப்படவும் வேண்டும். தொழிநுட்பத்தைப் பயன்படுத்துகின்ற போது போதிய சட்ட ஏற்பாடுகள் இல்லாமை போன்ற தடங்கல்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டுமென்பதோடு, நிருவாக மற்றும் பாதுகாப்பு பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு தேர்தலொன்றின் பின்னர் அரசியல் காரணங்களினால் எதிர்நோக்க வேண்டி நேரிடுகின்ற பாதுகாப்பற்ற நிலைகளிலிருந்தும் பழிவாங்கல் நிலைமைகளிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்கான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். தமது செயலாற்றுகை மட்டத்தை தொடர்ச்சியாக விருத்தி செய்வதற்காக தேர்தல் ஆணைக்குழு போதியளவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினூடாக தமது முகாமைத்துவப் பொறிமுறையை செயற்படுத்துகின்ற பணியாட் குழுவினரின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

## 4.பங்களிப்பு மூலோபாயத் திட்டத் தயாரிப்பின் போது பின்பற்றப்பட்ட முறைமை

பாதையை இலகுபடுத்த பின்பற்றப்பட்ட முறைமையை

இது தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் நாட்டின் 9 மாகாணங்களிலும் பரந்து காணப்படுகின்ற அனைத்து தரப்பினரிடமிருந்தும் தகவல்களையும் கருத்துக்களையும் பெற்றுக்கொள்கின்ற ஒரு பாரிய பணியாதலால் இதற்காக பயன்படுத்தப்பட்ட முறைமை மிக விரிவான ஒன்றாக விளங்கியதோடு, பலத்த எதிர்பார்ப்புக்களையும் கொண்டதாக விளங்கியது. ஆணைக்குழுவின் உயர் மற்றும் மத்தியதர முகாமைத்துவ மட்டத்தைச் சேர்ந்த 10 அலுவலர்களுடன் கூடிய திட்டத் தயாரிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அவர்களுக்கு இம்மகத்தான பணி கையளிக்கப்பட்டது. அக்குழு, வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2 நிபுணர்களின் வழிகாட்டலின் கீழ், தேர்தல் ஆணைக்குழுவிற்குத் தேவையான பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் உருவாக்கத்திற்கான கருத்துக்களை ஒன்று திரட்டுவதற்காக நாட்டின் அனைத்து பிரதேசங்களிலுமுள்ள முக்கியமான எல்லாத் தரப்பினரையும் தழுவிய விதத்தில் 38 ஆலோசனைக் கூட்டங்களை நடாத்தினர். கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கான இக்கலந்துரையாடல்களில் அரசியல் கட்சிகளின் முகவர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், தொழில் வல்லுநர்கள், தொழிற்சங்க உறுப்பினர்கள், வங்கியலாளர்கள், வர்த்தக சமூகத்தினர், ஊடகவியலாளர்கள், இளைப்பாறிய தேர்தல் அலுவலர்கள், மகளிர் மற்றும் இளைஞர் செயற்பாட்டாளர்கள், கமத்தொழில் மற்றும் கடற்றொழில் சமூகத்தினர், மாற்றுத்திறனாளிகள் சங்க பிரதிநிதிகள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் தலைநகரம் மற்றும் மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. இந்த ஒவ்வோர் ஆலோசனைக் கூட்டத்திலும் பங்குதாரர்களின் பங்கேற்பு உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. தேர்தல் ஆணைக்குழுவிற்கான இந்த பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தைத் தயாரிக்கின்றபோது தர்க்கரீதியான சட்டக அணுகு முறை (Logical Framework Approch) யும் உரியவாறு பயன்படுத்தப்பட்டது.

மூலோபாய திட்ட செய்முறையின் முக்கியமான அங்கங்களாவன :-

1. ஒழுங்கமைப்புக்கு வெளியே உள்ள சக்திகள் பற்றிய பகுப்பாய்வு
2. ஒழுங்கமைப்புக்கு உள்ளே உள்ள சக்திகள் பற்றிய பகுப்பாய்வு
3. நோக்கு, பணிகள், உபாயங்கள் போன்றவற்றை மீள்பரிசீலனை செய்தல்.
4. ஒப்பீட்டுப் பகுப்பாய்வை மேற்கொள்ளல்.
5. மாற்றச் செயன்முறைப் பகுப்பாய்வு.
6. போக்குப் பகுப்பாய்வை மேற்கொள்ளல்.
7. ஊகிக்கப்பட்ட எதிர்கால சூழ்நிலை.
8. ஒழுங்கமைப்பினால் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கியமான விடயங்களை இனங்காணல்
9. நோக்கு பணிக்கூற்று, இலக்குகள், உபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.
10. திட்டத்தை அமுலாக்குவதற்கான வளங்களை இனங்காணல்.

திட்டமிடல் நடபடி முறையில் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், அங்கத்தவர்கள், பணிப்பாளர் நாயகம் பங்கேற்புடனான அமர்வொன்று நடாத்தப்பட்டது. திரட்டப்பட்ட தகவல்கள் ஒப்பீடு செய்யப்பட்டு, மீளாயப்பட்டு ஓர் அமுலாக்கல் திட்டமாக வடிவமைக்கப்பட்டது. மேலே காட்டப்பட்ட பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் உள்ளடக்கங்கள் IV ஆம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

படம் IV




திட்டத் தயாரிப்புக் குழுவினதும் தேர்தல் ஆணைக்குழுவினதும் அலுவலர்களினால் இந்த பங்குதாரர்களுடான கலந்துரையாடல்களிலிருந்தும் நீண்ட பகுப்பாய்வுகளிலிருந்தும் ஒன்று திரட்டப்பட்ட தகவல்கள், முன்மொழிவுகளுக்கு மேலதிகமாக இத்திட்டத்தின் நிலைமையை மேலும் மேம்படுத்துவதற்காக அரசியலமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான மக்கள் பிரதிநிதிகள் குழுவினால் அரசாங்கத்திற்கு 2016 மே மாதம் கையளித்த அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்களின் கருத்துக்கள் பற்றிய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த முக்கியமான ஆலோசனைகளும் இதில் உட்சேர்க்கப்பட்டன.

இந்த மூலோபாயத் திட்டம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. பகுதி I இல் பின்னணி, இலங்கையின் அரசியல் வரலாறு, அரசியல் அமைப்பு, சீர்திருத்தத்தின் பரிணாமம் மற்றும் தேர்தல் செயன்முறை என்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்தகவல்கள் அவை பற்றி எழுதப்பட்டுள்ள நூல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன.

தேர்தல் திணைக்களத்தினால் அதுவரை அங்கீகரிக்கப்பட்டிருந்த நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகள் என்பன இன்றைக்குப் பொருந்தத்தக்கவாறு தயாரிக்கப்பட வேண்டியிருந்ததனால் அவை தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. பகுதி II இன் மூலம் செயற்பாட்டுத் திட்டத்தின் பொறுப்புக்கள், காலக்கெடுக்கள் என்பன கலந்துரையாடப்படுகின்றன.

## 5.தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகளின் உருவாக்கம்

நோக்கற்ற பணியும் பணியற்ற நோக்கும் உணர்வை ஏற்படுத்தாது.

### 5.1. தேர்தல் ஆணைக்குழுவின் நோக்கு

உள்ளடக்க நிகழ்வுகள், ஊகிக்கப்பட்ட எதிர்கால சூழ்நிலைப் பகுப்பாய்வுகள் என்பவற்றினூடாக இதுவரை காணப்பட்ட நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகளை மீளாய்வு செய்வதற்கான வழியேற்படுத்திக்கொள்ளப்பட்டது. வெற்றிகரமான நோக்கொன்றைத் தயார் செய்து கொள்வதன் வெற்றி தங்கியிருப்பது அந்நோக்கு தொடர்பாக மீண்டும் மீண்டும் கலந்துரையாடுவதற்கான அர்ப்பணிப்பென கருத்திலெடுத்த திட்டத் தயாரிப்புக் குழு துரிதமாகவும் மிக நுணுக்கமாகவும் பரஸ்பரமாகவும் கருத்துக்களைப் பரிமாறி பல கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் பின்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கு தயாரிக்கப்பட்டது.

**“சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கின்ற ஒரு நாடு”**

### 5.2. தேர்தல் ஆணைக்குழுவின் பணிக்கூற்று

மேற்குறித்த நோக்கை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் ஆணைக்குழுவின் பணிக்கூற்றைத் தயாரிப்பதற்காக மிக ஆழமான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. ஆணைக்குழுவின் குறிக்கோள்களை ஆழமாகப் பிரதிபலிக்கும் விதத்தில் ஏன் ஆணைக்குழு விளங்கவேண்டும்? அது வழங்கவுள்ள சேவைகள் எவை? மேலும் அதன் சேவை பெறுநர்கள் யார்? ஆணைக்குழுவைக் கட்டுப்படுத்துகின்ற பெறுமானங்களோடு ஒப்பிடுகையில் எவ்வாறு? ஏன்? அவை முக்கியத்துவம் பெறுகின்றன என்ற விடயங்களை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் திட்டத் தயாரிப்புக் குழு கூட்டாக செயற்பட்டு கீழ்காட்டப்பட்டுள்ள பணிக்கூற்றைத் தயாரித்தது.

**“மக்கள் இறைமை, சர்வசன வாக்குரிமை மற்றும் அதனோடு தொடர்புடைய சனநாயகக் கோட்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் ஏற்புடையவாறு அனைத்துத் தரப்புக்களையும் அறிவுறுத்துகின்ற சுதந்திரமான நீதியான மற்றும் நம்பத்தகுந்த தேர்தல் செயற்பாடுகளை வினைத்திறனும் விளைதிறனும் கொண்டதாக மேற்கொள்ளல்”**

# 6.பெறுமானங்கள், கவனம் ஈர்ப்புப் பகுதிகள் மற்றும் இலக்குகள்

## 6.1. பெறுமானங்கள்

பெறுமானங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவையே

பெறுமானங்கள் என்பவை ஆணைக்குழுவின் அபிவிருத்திச் செயன்முறைக்கும் வளர்ச்சிப் போக்கிற்கும் வழிகாட்டுகின்ற சைக்கினைகள் எனக் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். ஆணைக்குழுவின் தத்துவத்தை உள்ளடக்கியிருப்பது அப்பெறுமானங்களேயாகும். அந்தச் சைக்கினைகள் ஆணைக்குழுவின் நோக்கிற்கு வலுவை ஊட்டுகின்றமையால் அவை வழிகாட்டல் சித்தாந்தங்கள் எனவும் கருதப்படுகின்றன. ஏனெனில் அவற்றினூடாக ஆணைக்குழுவின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுவதோடு, அதன் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியுமென்ற நிச்சயத்தன்மையும் ஏற்படுகின்றது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 8 முக்கியத்துவம் வாய்ந்த பெறுமானங்களும் வருமாறு :-

**வரைபாம் V**

| | |
|---|---|
| நேர்மை | தேர்தல் ஆணைக்குழுவினதும் அதன் அலுவலர்களினதும் நேர்மை, சீரிய ஒழுக்கம், நேரடிக் கொள்கை அமுலாக்கம் என்பன |
| வெளிப்படைத்தன்மை | தேர்தல் ஆணைக்குழுவும் அதன் அலுவலர்களும் அனைத்து நடவடிக்கைகளிலும் உண்மையாகவும், நியாயமாகவும், திறந்த மனதோடும் நடவடிக்கைகளை எடுத்தல். |
| திறந்த மனப்பான்மை | தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் எதனையும் மறைக்காமல் உரையாடுவதும், நடந்துகொள்வதும் |
| அர்ப்பணிப்பு | தேர்தல் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் அதன் நோக்கை, பணிக்கூற்றை, இலக்குகளை மற்றும் குறிக்கோள்களை உளப்பூர்வமாக ஏற்று நடத்தலும் முன்வைக்கப்படுகின்ற பிரச்சினைகள், சவால்கள் என்பவற்றை தயக்கமின்றி எதிர்கொள்ளலும். |
| கடமை உணர்ச்சி | கடமை நடவடிக்கைகளில் தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள் தார்மீகப் பொறுப்புடன் நடந்து கொள்ளல். |
| பொறுப்புக்கூறல் | தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்கள் தாம் ஆற்றுகின்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் வகைகூறலும், அந்நடவடிக்கைகளில் பொறுப்புணர்ச்சியை ஏற்றுக்கொள்ளலும், தாம் ஆற்றுகின்ற பணிகளின் இறுதி முடிவுகளை வெளித் தெரியத்தக்க விதத்தில் வெளிப்படுத்தலும். |
| பக்கச்சார்பற்ற தன்மை | தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அலுவலர்கள் ஒரு நபர் அல்லது ஒரு குழுவினால் கட்டுப்படுத்தப்படாமையும் அத்தகைய அழுத்தங்களுக்கு இலக்காகாமையும் பக்கச் சார்புடன் நடந்துகொள்ளாமையும். |
| குழு மனப்பான்மையும் ஓர் அணியாக நடந்து கொள்ளலும். | தேர்தல் ஆணைக்குழுவின் உயர் மட்டத்திலிருந்து அனைத்து அலுவலர்களுக்குள்ளேயும் சீரிய மன எண்ணங்களுடன் கூடிய ஒன்றிணைந்த செயற்பாடு பற்றிய ஓர் உணர்வு தோன்றுதல். |

## 6.2. கவனம் ஈர்ப்புப் பகுதிகள்

பயனத்திற்கான தெளிவான பாதையைக் கைக்கூட்டுகின்ற கவன ஈர்ப்புப் பகுதிகள்

அடிப்படை மூலோபாயப் பகுதிகள் அல்லது கவன ஈர்ப்புப் பகுதிகள் எனப்படுபவை நிறுவனத்தினால் எதிர்காலத்தில் கூடியளவில் கவனம் ஈர்க்கப்பட வேண்டிய விடயங்களாகும். மூலோபாயப் பகுப்பாய்வுகளின் போது அடையாளம் காணப்பட்ட முக்கியமான விடயங்கள் பல தொடர்பாக நடவடிக்கையெடுக்கின்ற போது இவை முக்கியத்துவம் பெறுகின்றன. தேர்தல் ஆணைக்குழுவின் பணிக்கூற்றுக்கு அமைய சாதகமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளும் விடயத்தில் இவை தனியிடத்தைப் பெறுகின்றன. அத்தகைய நான்கு பகுதிகள் கவனஈர்ப்புப் பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ளன. இவ்விடயங்களைத் தரப்படுத்துவதற்கான அளவுத்திறனைக் கணிப்பிடுகின்றபோது பணிகளை நிறைவேற்றுவதனூடாக நோக்கை அடைந்து கொள்வதற்கு ஆணைக்குழுவிற்குள்ள ஆற்றலின் தாக்கம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.

அடையாளம் காணப்பட்ட கவன ஈர்ப்புப் பகுதிகள் கீழ்வருமாறு :-

**அடையாளம் காணப்பட்ட கவன ஈர்ப்பு பகுதிகள்**

**1 விழிப்புணர்வு மேம்பாடும் கடமை உணர்ச்சியூட்டலும் :**

இது தேவைப்படுவது மக்களின் இறைமை மற்றும் சர்வஜன வாக்குரிமை என்பவற்றைப் பாதுகாத்தல் தொடர்பான விழிப்புணர்வை, கடமை உணர்ச்சியை மேம்படுத்தலேயாகும். விழிப்புணர்வுடன் கூடிய கடமை உணர்ச்சி என்ற விடய நோக்கம் தொடர்பாக எழுகின்ற வினாக்கள், மானிட கௌரவம், சுதந்திரம், அதிகாரம், புலமை, சமூகப் பொறுப்பு ஆகிய விடயங்களையே குறிக்கின்றது.

**2 சட்டச் செயன்முறைகளும் சட்ட மதியுரைகளும்:**

மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் சுதந்திரமானதும் நீதியானதும், நம்பத் தகுந்ததுமான தேர்தல்களை நடாத்துவதற்கும் இது தேவைப்படுகின்றது. சட்ட மதியுரை தேவைப்படுவது ஏதேனுமொரு பிரச்சினை தொடர்பான புரிந்துணர்வைக் கட்டியெழுப்பவும் கொள்கை ஆக்குநர்களுக்கு அழுத்தம் கொடுக்கவும். பிரசைகளைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளை தீர்த்து வைக்கவுமாகும். அதிகாரத்-தில் உள்ள ஒருவரால் மேற்கொள்ளப்படுவதுபோல பிணக்குகளைத் தீர்த்தல், அல்லது இணக்கப்பாட்டை ஏற்படுத்தல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் அல்லது ஒரு பிரச்சினையை அல்லது சிரமத்தைத் தவிர்க்கும் நோக்கில் தகவல்களை வழங்குதல் என்பவற்றையும் உள்ளடக்கும்.

**3 தாபன அபிவிருத்தி :**

நிறுவனத்தின் இலக்குகளையும் அதன் நோக்கினையும் நிலைபேறாக ஆற்றிக்கொள்வதறகான மனித, பௌதிக மற்றும் நிதி வளங்களைப் பயன்படுத்த முடிந்த ஒரு நிறுவனம் என்ற வகையில் தமது நிறுவனத்தை வினைத்திறனுள்ளதாகவும், விளைத்திறனுள்ளதாகவும் ஒழுங்கமைத்தல் மற்றும் வலுவூட்டல். தேர்தலை வினைத் திறனோடும், விளைத் திறனோடும் நடாத்துவதற்காக நவீன தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் பிரயோகத்தை பெருமளவில் பயன்படுத்துதல் மற்றும் வள முகாமைத்துவம் என்பவற்றிற்காக இது அவசியமாகிறது.

**4 ஆராய்ச்சிகள் மற்றும் தகவல் பரிமாற்றம் :**

முக்கியமாக தேர்தல் செயன்முறையோடு தொடர்புடையதும் தேர்தல் மேற்பார்வை நிறுவனத்தோடு தொடர்புடையதுமான கொள்கைகள் பற்றி ஆராய்ச்சி செய்தல் அவ்வாராய்ச்சிகளின் முடிவுகள் மற்றும் அவற்றிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் என்பவற்றை ஏனைய தரப்பினர்களின் தகவல் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக பரிமாற்றம் செய்து கொள்ளலும் வாக்களித்தல் மற்றும் மக்களின் இறைமையோடு தொடர்புடைய விடயங்கள் தொடர்பான சந்தர்ப்பமொன்றை வழங்குதற்காகப் பயன்படுத்தலும், அதனோடு தொடர்புடைய விடயங்களும்.

இலக்குகளை எய்துவதற்கு மூலோபாயங்கள் முக்கியமானவையாகும்.

## 6.3. இலக்குகள்

தனது பணிகளையும் நோக்கினையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ள இலக்குகள் வருமாறு :

| | |
|---|---|
| இலக்கு 1 | தகைமையுள்ள அனைத்து பிரசைகளும் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களில் அச்சமின்றியும், சுதந்திரமாகவும், நம்பிக்கையோடும் வாக்களிக்கின்றனர். |
| இலக்கு 2 | வாக்கைப் பிரயோகித்தல் தமக்குரிய பராதீனப்படுத்த முடியாத ஓர் உரிமை எனவும், தாம் தேர்தல் செயன் முறைக்குள் தொழிற்பாட்டு ரீதியாக பங்கேற்கின்றனர் எனவும் நன்கு புரிந்து வைத்துள்ளனர். |
| இலக்கு 3 | தேர்தல் காலப்பகுதிக்குள் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமானதும், நியாயமானதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| இலக்கு 4 | ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் தகைமையுள்ள அனைவரையும் உள்ளடக்கிய சீராக்கம் செய்யப்பட்ட வாக்காளர் இடாப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| இலக்கு 5 | சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற அனைத்து பிரசைகளும் நம்பிக்கையோடும், போதியளவிலும் தேர்தல் செயன்முறையில் பங்குகொள்கின்றனர். |
| இலக்கு 6 | தேர்தல் செயன்முறை திறமையாகவும் வெளிக்காட்டுத் தன்மையுடன் கூடியதாகவும் நிருவாகம் செய்யப்படுகின்றது. |
| இலக்கு 7 | தேர்தல் செயன்முறையோடும் தேர்தல் ஆணைக்குழுவோடும் தொடர்புடைய புள்ளி விபரங்களையும் உரிய தகவல்களையும் அனைத்து தரப்பினர்களுக்கும் வழங்குவதற்கான வசதிகள் போதியளவிலும் உரிய காலத்திற்குள் நிறைவேற்றப்படத் தக்கனவாகவும் உள்ளன. |

### மூலோபாயங்கள்

கவன ஈர்ப்புப் பகுதிகள், இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன மூலோபாயங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் மூலோபாய மற்றும் அமுலாக்கல் திட்டங்களை செயற்படுத்துகையில் வேறு சில மூலோபாயங்கள் தொடர்பாகவும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அவையாவன :-

- தாபன அபிவிருத்தி
- பணியாட்குழுவினர்களின் ஆற்றல் விருத்தி
- திறைசேரியிலிருந்து போதிய நிதியீட்டைப் பெற்றுக்கொள்ளல்
- சனநாயக ஊக்குவிப்பில் ஆர்வம் காட்டுகின்ற உண்ணாட்டு மற்றும் சர்வதேச சிவில் சமூக அமைப்புக்களோடு இணைந்து பணியாற்றல்
- சர்வஜன வாக்குரிமையை பாதுகாப்பது தொடர்பாக பிரசைகளை ஊக்குவித்தல்

## 6.4. இலக்குகளும் உரிய குறிக்கோள்களும்

SMART ஆக இருக்கவேண்டிய குறிக்கோள்கள்

தேர்தல் ஆணைக் குழுவின் இலக்குகளை எய்துவதற்கான குறிப்பான குறிக்கோள்கள் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளன

அட்டவணை - 1 கவனயீர்ப்புப் பகுதிகள் மற்றும் குறிப்பன குறிக்கோள்கள்.

| 1 ஆம் கவன ஈர்ப்புப் பகுதி: விழிப்புணர்வு மேம்பாடும் கடமை உணர்ச்சியூட்டலும் | | |
|---|---|---|
| இலக்கம் | இலக்கு | குறிப்பான குறிக்கோள்கள் |
| **1.** | தகைமையுள்ள அனைத்து பிரசைகளும் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களில் அச்சமின்றியும், சுதந்திரமாகவும், நம்பிக்கையோடும் வாக்களிக்கின்றனர். | **1.1.** ஒவ்வோர் ஆண்டிலும் நாடெங்கிலும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களோடு தொடர்புடைய சட்டங்கள், தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக பிரசைகளுக்கு 250 ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படும். |
| | | **1.2.** தேர்தலொன்றின் போது முறையாகப் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், பொலிசார் மற்றும் இராணுவத்தினர்கள் விளைதிறன் மிக்க வகையில் வாக்களிப்பு நிலையங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். |
| | | **1.3.** முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் வாக்களிப்பு நிலையங்களில் பொறுப்புக் கூறத்தக்க விதத்திலான கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். |
| | | **1.4.** 2017 ஆம் ஆண்டு முடிவடைகின்ற போது எல்லா மாவட்டங்களினதும் தேர்தல் முகாமைத்துவ அலுவலர்கள் தொழில் வல்லமையோடும் திறமையாகவும் செயற்பட்ட வண்ணமிருப்பர். |
| | | **1.5.** 2018 ஆம் ஆண்டின் அரைப் பகுதியளவில் அரசாங்கத்தினதும் தனியார் துறையினரதும் பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்கள் என்பன சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக தமது மாணவர்களை அறிவூட்டியவாறு இருக்கும். |
| | | **1.6.** அனைத்து வாக்காளர்களும் தேர்தல் செயன்முறையை தெளிவாக விளங்கி வைத்துள்ளனர். தேர்தலின் போது அவர்கள் சுறுசுறுப்பாக பங்கேற்பதற்கான மனோவலிமையைப் பெற்றிருக்கிறார்கள். |
| **2.** | வாக்கைப் பிரயோகித்தல் தமக்குரிய பரா-தீனப்படுத்த முடியாத ஓர் உரிமை எனவும், தாம் தேர்தல் செயன் முறைக்குள் தொழி-ற்பாட்டு ரீதியாக பங்கேற்கின்றனர் எனவும் நன்கு புரிந்து வைத்துள்ளனர். | **2.1.** 2017 ஆம் ஆண்டின் அரைப் பகுதி முதல் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிற்கும் உரிய வாக்காளர்களின் பதிவு, அனைவரையும் உள்ளடக்கிய பதிவு, வாக்களிக்கும் முறை மற்றும் வாக்காளர்களுக்குரிய பராதீனப்படுத்த முடியாத உரிமை ஆகிய விடயங்கள் தொடர்பாக அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படும். |
| | | **2.2.** வாக்காளரின் உரிமைகள், வாக்காளர் பதிவு மற்றும் பிழையின்றி வாக்களித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக வாக்காளர்களை அறிவூட்டுவதற்கு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன |
| | | **2.3.** 2020 ஆம் ஆண்டளவில் “தேர்தல் முறையும், நடைமுறையும்” என்ற விடயம் க.பொ.த (சா.த) பாட விதானத்தின் சமூகக் கல்வி என்ற பாடப் பரப்பின் கீழ் உட்சேர்க்கப்படும். |
| | | **2.4.** கிராம அலுவலர்களின் பிரிவு மட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் (விசேடமாக சனசமூக அமைப்புக்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டு “வாக்குரிமை பிரசைகளுக்குரித்தான பராதீனப்படுத்த முடியாத உரிமையொன்றாக பயன்படுத்தப்படல்” என்ற தொனிப்பொருளில் பயிற்சி அளிக்கப்பட்டு அதற்கமைய வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படும். |
| | | **2.5.**“வாக்குரிமையைப் பிரயோகித்தல் பிரசைகளுக்குரிய பராதீனப்படுத்தப்பட முடியாத ஓர் உரிமை” என்ற தொனிப்பொருளில் வாக்காளர்களை அறிவூட்ட தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்கின்ற முறைகள் பிரசைகளால் மெச்சப்படுகின்றன. |

| இலக்கம | இலக்கு | குறிப்பான குறிக்கோள்கள் |
|---|---|---|
| | | **2.6.** தகவல் பரிமாற்றப் பொறி (Server) விளைதிறன் மிக்கவாறு செயற்படுகின்றது. |
| **2 ஆம் கவன ஈர்ப்புப் பகுதி : சட்டச் செயன்முறைகளும் சட்ட மதியுரைகளும்** | | |
| **3.** | தேர்தல் காலப்பகுதிக்குள் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமானதும், நியாயமானதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. | **3.1.** தேர்தல் செயன்முறை மற்றும் தேருநர்களைப் பதிவு செய்வதோடு தொடர்புடைய புதிய சட்டஏற்பாடுகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டளவில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. |
| | | **3.2.** அனைத்து வேட்பாளர்களும் நிதி பெறப்படுகின்ற மூலங்கள் தொடர்பாக தமது வாக்காளர்களுக்கு வெளிப்படுத்துவதற்காகவும் அவர்களின் அச்செலவினத் தொகைகள் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகளைத் தாண்டிச் செல்லவில்லை எனவும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நன்கு திட்டமிடப்பட்ட பொறிமுறையொன்று தாபிக்கப்பட்டுள்ளது. |
| | | **3.3.** தேர்தலில் ஊழல் புரிந்த மற்றும் / அல்லது தேர்தல் சட்டங்களை மீறிய நபர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு, தவறிழைத்தவர்களை நீதிமன்றத்திற்கு முன்னால் கொண்டுவருவதற்கு உரிய விசாரணைப் பிரிவினரின் ஒத்துழைப்போடு செயற்படத்தக்க ஒரு பிரிவு 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறுவப்பட்டிருக்கும். |
| | | **3.4.** வேட்பாளர்களினால் உத்தியோக பூர்வமாகவோ அல்லது உத்தியோகப்பற்றற வகையிலோ அரசாங்க ஆதனங்களையும், வளங்களையும் துஷ்பிரயோகம் செய்தல் தடுக்கப்பட்டுள்ளது. |
| | | **3.5.** தேர்தல் வன்முறைகள் 2015 ஆண்டில் காணப்பட்ட தொகையிலும் பார்க்க 2020 ஆம் ஆண்டில் ஆகக்குறைந்தது 90மு சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. |
| **4.** | ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் அனைவரையும் உள்ளடக்கிய சீராக்கம் செய்யப்பட்ட வாக்காளர் இடாப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | **4.1** மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்காக சர்வஜன வாக்குரிமை மிகமிக முக்கியமான ஒரு விடயமெனப் புரிந்து கொண்டுள்ள பிரசைகள் ஏனையோரையும் வாக்காளராகப் பதியுமாறு ஊக்குவின்றனர் |
| | | **4.2.** ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தகைமை வாய்ந்த பிரசைகள் யூன் 01ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கணக்கெடுக்கப்படுகின்றனர். |
| | | **4.3.** தகைமையுள்ள வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்கள் ஒவ்வோர் ஆண்டும் யூன் 01 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படுவர். |
| | | **4.4.** தேருநர் இடாப்புப் பதிவேட்டுத் திருத்தச் சட்டத்திற்கு புதிய ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுவதனூடாக, தேர்தலொன்று பிரகரனப்படுத்தப்படுகின்ற திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள இளைஞர், யுவதிகள் வாக்காளர் இடாப்பில் பதியப்படுவதை உறுதிப்படுத்தத்தக்க விதத்தில் தேருநர் இடாப்புக்கான குறைநிரப்பு தேருநர் இடாப்பொன்று 2018 ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்படும். |
| | | **4.5.** 2018 ஆம் ஆண்டளவில் அனைத்து பிரசைகளும் தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்படுகின்றனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தகவல், தொடர்பாடல் தொழிநுட்பக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | | **4.6** பங்களிப்பு அணுகுமுறையொன்றின் மூலம் தேர்தல் செயன்முறையில் அனைத்து பிரசைகளையும் பங்கேற்கச் செய்யத்தக்க விதத்திலான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கின்றது. |
| | | **4.7** 2018 ஆம் ஆண்டளவில் பிரசைகள் தமக்குரிய தகவல்களை தாமே சீராக்கம் செய்யத்தக்க விதத்திலான நிகழ்நேர தேருநர் இடாப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கும். (Real time on line Voter Registry) |

| இலக்கம | இலக்கு | குறிப்பான குறிக்கோள்கள் |
|---|---|---|
| **5.** | சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற அனைத்து பிரசைகளும் நம்பிக்கையோடும், போதியளவிலும் தேர்தல் செயன்முறையில் பங்குகொள்கின்றனர். | **5.1.** வாக்காளரின் உரிமை தொடர்பான செய்தியை பிரசைகளுக்கு எத்திவைக்கின்றபோது சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்கள் என்பன செயற்பாட்டு ரீதியாக பங்கெடுத்துக்கொள்கின்றன. |
| | | **5.2.** ஒவ்வோர் ஆண்டிலும் உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கொண்டாடப்படுகின்ற தினங்களில் தேர்தல் ஆணைக்குழு வாக்காளர்களின் உரிமை தொடர்பாக மக்களை அறிவூட்டுகின்ற பிரச்சார நிகழ்வுகளை நடாத்துகின்றது. |
| | | **5.3.** பாலின சமநிலையைப் பேணுவதற்கான பெண்களில் போதியளவினர் தேர்தல் செயன்முறையில் ஈடுபாடு காட்டுகின்றனர். |
| | | **5.4.** 2019 ஆம் ஆண்டளவில் இளைஞர்கள் தேர்தல் செயன்முறையில் போதியளவிலும் ஆர்வத்தோடும் பங்கேற்கின்றனர். |
| | | **5.5.** மாற்றுத்திறன், விளிம்பு நிலை, இடம்பெயர்ந்த மற்றும் அத்தகைய வேறு சமூகப் பிரிவினர்கள் தேர்தல் செயன்முறையில் தடங்கலின்றி போதியளவில் ஈடுபாடு காட்டுகின்றனர். |
| | | **5.6.** அரச மற்றும் தனியார் துறையின் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுகின்றவர்களும் தற்போது அஞ்சல் வாக்கினை பிரயோகிப்பதற்கான அனுமதி கிடைக்காதவர்களுமான வாக்காளர்கள் வாக்கினை அளிப்பதற்கான முறைமையொன்று 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் அறிமுகஞ் செய்து வைக்கப்படும். |
| **3 ஆம் கவன ஈர்ப்புப் பகுதி : தாபன அபிவிருத்தி** | | |
| **6.** | தேர்தல் செயன்முறை திறமையாகவும் வெளிக்காட்டுத் தன்மையுடன் கூடியதகாவும் நிருவகிக்கப்படுகின்றது. | **6.1.** தேர்தலோடு தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழு-ங்கமைக்கவும், முகாமைத்துவம் செய்யவும், நிருவகி-க்கவும் தேவையான முறைமையொன்று முறையாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | | **6.2.** 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் இலத்திரனியல் வாக்களித்தலுக்கான முன்னோடிக் கருத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |
| | | **6.3.** 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டளவில் தேர்தல் ஆணைக்குழுவின் திட்டமிடல் பிரிவு சக்தி வாய்ந்த முறையில் தாபிக்கப்பட்டுள்ளது. |
| | | **6.4.** 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் வலுவான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | | **6.5.** தேர்தல் ஆணைக்குழுவின் இலக்குகள் குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றிக்கொள்ளும் விதத்திலான பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக முறையாக நெறிப்படுத்தப்பட்ட ஒரு பொறிமுறை தாபிக்கப்பட்டுள்ளது. |
| | | **6.6.** 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தேர்தல் ஆணைக்குழுவில் பூரண மனிதவள பொறிமுறையொன்று விளைதிறன் மிக்க விதத்தில் செயற்படுத்தப்படுகிறது. |
| | | **6.7.** 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பணியாட் குழுவினர்களுக்கு முறையாகத் திட்டமிடப்பட்ட பரிசளிப்பு, மனக்குறை நிவர்த்தி செய்தல் முறைமைகள் செயற்படுத்தப்படுகின்றன. |
| | | **6.8.** 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் நடைமுறையிலுள்ள நிதி முகாமைத்துவ முறைக்குப் பதிலாக சீராக்கம் செய்யப்பட்ட புதிய நிதி முகாமைத்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. |
| | | **6.9.** 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தேர்தல் ஆணைக்குழுவின் நடைமுறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வு முறைக்குப் பதிலாக விருத்தி செய்யப்பட்ட ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப்படுள்ளது. |

| இலக்கம | இலக்கு | குறிப்பான குறிக்கோள்கள் |
|---|---|---|
| | | **6.10.** 2018 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முகாமைத்துவ முறையொன்றையும் தேர்தல் செயன்முறையொன்றையும் ஒழுங்கமைப்பதற்குத் தேவையான ஆற்றல் மிக்க மனிதவளம் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கிடைத்துள்ளது. |
| | | **6.11.** 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் (உள்ளக மற்றும் வெளிவாரி என்ற வகையில்) வலுவான தொடர்பாடல் முறையொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |
| **4 ஆம் கவன ஈர்ப்புப் பகுதி : ஆராய்ச்சியும் தகவல் பரிமாற்றமும்** | | |
| **7.** | தேர்தல் செயன்முறையோடும் தேர்தல் ஆணைக்குழுவோடும் தொடர்புடைய புள்ளி விபரங்களையும் உரிய தகவல்களையும் தரப்பினர்களுக்கு வழங்குவதற்கான வசதிகள் போதியளவிலும் உரிய காலத்திற்குள் நிறைவேற்றப்படக்கூடிய வகையிலும் உள்ளன. | **7.1.** 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஆராய்ச்சிப் பிரிவொன்று செயற்படுத்தப்படும். |
| | | **7.2.** தகவல் தொழிநுட்பம் மற்றும் ஏனைய உபகரணங்களை ஈடுபடுத்தி தற்போது காணப்படுகின்ற தகவல் பிரிவு 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் வலுப்படுத்தப்- பட்டுள்ளது. |
| | | **7.3.** தற்போது காணப்படுகின்ற தகவல் பிரிவு 2017 இன் இறுதியளவில் அனைத்து கருவி, உபகரணங்களை உள்ளடக்கிய வள நிலையமொன்றாக மாறி இருக்கின்றது. |
| | | **7.4.** அனைத்து தேர்தல் முடிவுகளும் உள்நாட்டு மற்றும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அறிக்கைகளும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மென்பிரதிகளையும் வன்பிரதிகளையும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| | | **7.5.** ஒவ்வொரு பிரதான தேர்தலும் நிறைவு பெற்று இரண்டு மாதங்களுக்குள் கற்றுக்கொண்ட பாடங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக ஒருநாள் பொதுமக்கள் கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டுள்ளது. |

## 7. இலக்குளை அடைதல்

**நோக்கு**

சர்வஜன வாக்குரிமையைப் பேணிப் பாதுகாக்கின்ற ஒரு நாடு

**பணிக்கூற்று**

மக்களின் இறைமை, வாக்குரிமை என்பவற்றோடு தொடர்புடைய சனநாயகக் கோட்பாடுகளைப் பேணி, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் உரிய அனைத்து தரப்பினரையும் அறிவூட்டுகின்ற சுதந்திரமானதும், நீதியானதும் நம்பத்தகுந்ததுமான தேர்தல் செயன்முறையொன்றை வினைத்திறன் மிக்கதாகவும், விளைத்திறன் மிக்கதாகவும் வழிநடாத்துதல்.

கவன ஈர்ப்புப் பகுதிகள்

- விழிப்புணர்வு மேம்பாடும், கடமை உணர்ச்சி ஊட்டலும்
- சட்ட செயள்முறைகளும்சட்ட மதியுரைகளும்
- தாபன அபிவிருத்தி
- ஆராய்ச்சிகள் மற்றும் தகவல் பரிமாற்றம்

முக்கிய பெறுமானங்கள்

- நேர்மை
- வெளிப்படைத் தன்மை
- திறந்த மனப்பான்மை
- அர்ப்பணிப்பு
- கடமை உணர்ச்சி
- பொறுப்புக்கூறல்
- பக்கச் சார்பற்ற தன்மை
- குழு மனப்பான்மை

| இலக்கு | குறிப்பிட்ட இலக்குகள் |
|---|---|
| இலக்கு 1. தகைமையுள்ள அனைத்து பிரசைகளும் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களில் அச்சமின்றியும் சுதந்திரமாகவும் நம்பிக்கையோடும் வாக்களிக்கின்றனர். | குறிப்பிட்ட இலக்குகள் இலக்கு 1ன் கீழான ஆறு குறிப்பான குறிக்கோள்கள். தயவ்ய்செய்து பகுதி II ஐ பார்க்கவும் |
| இலக்கு 2. வாக்கைப் பிரயோகித்தல் தமக்குரிய பராதீனப்படுத்த முடியாத ஓர் உரிமையெனவும், தாம் தேர்தல் செயன் முறைக்குள் தொழிற்பாட்டு ரீதியாக பங்கேற்கின்றனர் எனவும் நன்கு புரிந்து வைத்துள்ளனர். | குறிப்பிட்ட இலக்குகள் இலக்கு 2ன் கீழான ஆறு குறிப்பான குறிக்கோள்கள். தயவு செய்து பகுதி II ஐ பார்க்கவும் |
| இலக்கு 3 தேர்தல் காலப்பகுதிக்குள் அனைத்து வேட்பாளர்களு -க்கும் சமமானதும் நியாமானதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. | குறிப்பிட்ட இலக்குகள் இலக்கு 3ன் கீழான ஐந்து குறிப்பான குறிக்கோள்கள். தயவு செய்து பகுதி II ஐ பார்க்கவும் |
| இலக்கு 4. ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் தகைமையுள்ள அனைவரையும் உள்ளடக்கிய சீராக்கம் செய்யப்பட்ட வாக்காளர் இடாப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது | குறிப்பிட்ட இலக்குகள் இலக்கு 4ன் கீழான ஏழு குறிப்பான குறி-க்கோள்கள். தயவு செய்து பகுதி II ஐ பார்க்கவும் |
| இலக்கு 5. சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற அனைத்து பிரசைகளும் நம்பிக்கையோடும் போதியளவிலும் தேர்தல் செயன்முறையில் பங்குகொள்கின்றனர். | குறிப்பிட்ட இலக்குகள் இலக்கு 5ன் கீழான ஆறு குறிப்பான குறிக்கோள்கள். தயவு செய்து பகுதி II ஐ பார்க்கவும் |
| இலக்கு 6. தேர்தல் செயன்முறை திறமையாகவும் வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் நிருவகிக்கப்படுகி-ன்றது | குறிப்பிட்ட இலக்குகள் இலக்கு 6ன் கீழான பதினொரு குறிப்பான குறிக்கோள்கள். தயவு செய்து பகுதி II ஐ பார்க்கவும் |
| இலக்கு 7. தேர்தல் செயன்முறையோடும் தேர்தல் ஆணைக்குழுவோடும் தொடர்புடைய புள்ளி விபரங்களையும் உரிய தகவல்களையும் அனைத்து தரப்பினர்களுக்கும் வழங்குவதற்கான வசதிகள் போதியளவிலும் உரிய காலத்திற்குள் நிறைவேற்றப்படத் தக்கனவாகவும் உள்ளன. | குறிப்பிட்ட இலக்குகள் இலக்கு 7ன் கீழான ஐந்து குறிப்பான குறிக்கோள்கள். தயவு செய்து பகுதி II ஐ பார்க்கவும் |

செயல்திறன

## 8. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## 9. அமுலாக்கம், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு

உத்தேச பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் செயற்பாடுகளை அமுலாக்கம் செய்யும் பொறுப்பு, இத்திட்டத்தின் செயற்பாட்டு முன்னேற்றம் தொடர்பான மாதாந்த கூட்டங்களை நடாத்தி மேற்பார்வையில் ஈடுபடும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள பிரிவு/ கிளையின் தலைவர்களையே சாரும். நேரடி ஆவணமொன்றான தர்க்கரீதியான சட்டகத்தை (Logical Frame) அடிப்படையாகக் கொண்ட அமுலாக்கத் திட்டம் (II பகுதியின் "அ" பகுதி) செயற்பாட்டின் போது நடைமுறைப்படுத்தப்படும். மேலும் ஒவ்வோர் இலக்கு தொடர்பாகவும் காட்டப்பட்டுள்ள குறிகாட்டிகள் திட்டத்தின் முன்னேற்றத்தை அளவிடப் பயன்படுத்தப்படும்.

2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் சக்திமிக்க மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறையொன்று திட்டத்தின் குறிக்கோள் ஒன்றாக தாபிக்கப்படுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் சிரேட்ட அலுவலர்கள் 7 பேரை (பணிப்பாளர் நாயகம், செயலாளர், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள், பிரதான நிதி அலுவலர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்) உள்ளடக்கிய குழுவொன்றிற்கு அப்பணியை ஆற்றும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள முன்னேற்றங்களை அறிக்கையிடல், படிவங்களை நிகழ்காலத் தேவைகளுக்கேற்றவாறு விருத்தி செய்து கொள்ளல், நடைமுறையிலுள்ள முன்னேற்ற மீளாய்வு முறைகளை விரிவாக்கம் செய்தல், ஒவ்வோர் ஆண்டும் நடு ஆண்டு மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ளல், ஒவ்வோர் ஆண்டிலும் பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்ததன் பின்னர் வருடாந்த பூரண மதிப்பீடொன்றை மேற்கொள்ளல் மற்றும் பிரதான பணிகளுக்கான அடிப்படை செயலாற்றுகைக் குறிகாட்டிகளைத் (KPI) தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அதில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. புள்ளி விபரங்கள் மற்றும் தகவல்களுடன் கூடிய அனைத்து செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்வதற்காக தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் பயன்படுத்தப்படும். அலுவலர்களுக்கும் அவர்களின் பிரிவுகளுக்கும் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் II ஆம் பகுதியின் "ஆ" பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகள், பொறுப்புக்கள், காலஅட்டவணைகள் என்பவற்றுக்குள் விளக்கப்பட்டுள்ளன.

## 10. சவால்களும் மட்டுப்பாடுகளும்

ஒவ்வொரு குறிக்கோளின் கீழும் எதிர்கொள்ள வேண்டிவரக்கூடிய பல்வேறு சவால்களையும் தேர்தல் ஆணைக்குழு ஊகித்து இத்திட்டத்தில் உள்ளடக்கியுள்ளது. திட்ட அமுலாக்கத்தின் போது அவ்வூகங்களுக்கு மேலதிகமாக சில பிரச்சினைகளும் சவால்களும் தலையெடுக்க இடமுண்டு. தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்கின்ற போதும் மக்களிடமிருந்தும் அரசியல் கட்சிகளிடமிருந்தும் சிவில் சமூக அமைப்புக்களிடமிருந்தும் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்கின்ற போதும் தடங்கல்கள் ஏற்பட இடமுண்டு.

இந்நிச்சயமற்ற சூழ்நிலைகளை மட்டுப்படுத்துவதற்கு உரிய அமைச்சுக்கள், ஏனைய நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து நடவடிக்கையெடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த நடவடிக்கைகள் தொடர்பான புரிந்துணர்வை இற்றைப்படுத்திக்கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழு அரசியல் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் என்பவற்றோடு அடிக்கடி கலந்துரையாடல்களில் ஈடுபட எண்ணியுள்ளது. சனநாயகம் சார்பாக அர்ப்பணிப்போடு பல்வேறு சர்வதேச அமைப்புக்களினூடாக தனது பணியாட் குழுவினர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான உபகரணங்களையும் நிதிசார் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்வதற்கென அரசாங்கத்தின் அனுமதியோடு உரிய நடவடிக்கையெடுக்க தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சாத்தியப்படக்கூடும்.

பிரதான சவாலாக விளங்குவது யாதெனில், பராதீனப்படுத்தப்பட முடியாத ஓர் உரிமையே வாக்குரிமையென்ற அறிவு சமூக மட்டத்தில் மிகக் குறைவாகக் காணப்படுவதேயாகும். இப்பாரிய பிரச்சினையை தீர்ப்பதற்காக தேர்தல் ஆணைக்கழு பொதுமக்களுக்கு விசேடமாக வாக்காளர்களின் அரசியல் விழிப்புணர்வை விருத்தி செய்வதற்காக அவர்களின் சனநாயக உரிமைகள் மற்றும் சர்வஜன வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பாகவும் தகைமையற்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்ந்து கொள்வது தொடர்பாகவும் அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவுள்ளது.

# பகுதி II

## "அ" பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

1. பிரிவு

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஆம் கவன ஈர்ப்புப் பகுதி: விழிப்புணர்வு மேம்பாடும் கடமை உணர்ச்சியூட்டலும் | | | | |
| இலக்கு 1: தகைமையுள்ள அனைத்து பிரசைகளும் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களில் அச்சமின்றியும், சுதந்திரமாகவும், நம்பிக்கையோடும் வாக்களிக்கின்றனர். | | | | |
| தேவைப்பாடு: 2015 ஆம் ஆண்டிற்கான வாக்களிப்போரின் 65% சதவீதத்தை 2020 ஆம் ஆண்டளவில் 85% ஆக அதிகரிக்கச் செய்தல் | | | | |
| **இலக்கம** | **விசேட குறிக்கோள்கள்** | **பிரதான செயற்பாடுகள்** | **குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள்** | **ஊகங்கள்** |
| 1. | ஒவ்வோர் ஆண்டிலும் நாடெங்கிலும் நடாத்தப்படுகின்ற தேர்தல்களோடு தொடர்புடைய சட்டங்கள், தேர்தல் நடைமுறைகள் தொடர்பாக பிரசைகளுக்கு 250 ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படும். | **1.1.**தற்போது காணப்படுகின்ற தேர்தல் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக பிரசைகளுக்குள் புரிந்துணர்வொன்றை ஏற்படுத்துவதற்காக 250 நிகழ்ச்சித் திட்டங்களை (போதியளவில்) ஒவ்வோர் ஆண்டிலும் நடாத்துதல். | 1.1.1.நடாத்தப்பட்ட அறிவூட்டல் கருத்தரங்குகளின் எண்ணிக்கை.<br>1.1.2.அறிவூட்டல் கருத்தரங்குகளில் பங்கேற்கின்றவர்களின் எண்ணிக்கை | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.மக்களின் பிரதிபலிப்பும் ஆர்வமும் உயர்மட்டத்தில் காணப்படுகின்றன.<br>3.தேவையான வளங்கள் உள்ளன.<br>4.இதற்காக அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்ற அலுவலர் குழாம் ஒன்று உள்ளது. |
| 2. | தேர்தலொன்றின் போது முறையாகப் பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள், தேர்தல் கண்காணிப்பாளர்கள், பொலிசார் மற்றும் இராணுவத்தினர்கள் விளைதிறன் மிக்க வகையில் வாக்களிப்பு நிலையங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். | 2.1.தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு தேர்தல் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான 50 ஒருநாள் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 2.1.1.ஈடுபடுத்தப்படுகின்ற பயிற்சிப் அளிக்கப்பட்ட அலுவலர்களின் ஈடுபடுத்தப்படும் எண்ணிக்கை<br>2.1.2.பயிற்சி அளிக்கப்பட்ட கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் போதியளவில் காணப்படுகின்றன.<br>3.அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடியவர்களும் துறைசார் அறிவைக் கொண்டவர்களுமான பயிற்றுவிப்பாளர்கள்<br>4.அர்ப்பணிப்புடன் கூடிய பயிலுநர்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு கொள்கின்றனர். |
| | | 2.2.நிகழ்கால தேர்தல் சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக சிரேட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கும் பிராந்திய மட்டத்தில் 50 ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (450 பொலிஸ் நிலையங்களுக்கு) | 2.1.1.பணியில் ஈடுபட்டுள்ள பயிற்சி அலுவலர்களின் எண்ணிக்கை<br>2.1.2.பயிற்றுவிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை. | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 3. | முறையாகப் பயிற்றுவிக்கப்பட்ட அரசாங்க அலுவலர்கள் வாக்களிப்பு நிலையங்களில் பொறுப்புக் கூறத்தக்க விதத்திலான கடமை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். | 3.1.அந்தந்த பிரதேச செயலகங்களிலும் கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் தேசியப் பாடசாலைகளிலுமுள்ள அலுவலர்களுக்கு தேர்தல்கள் சட்டம் மற்றும் நடைமுறைகள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல | 3.1.1.நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>3.1.2.பயிற்சியைப் பெற்ற அரசாங்க அலுவலர்களின் எண்ணிக்கை<br>3.1.3.வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இணைக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் போதியளவில் காணப்படுகின்றன.<br>3.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் துறைசார் அறிவைக் கொண்டவர்களுமான பயிற்றுவிப்பாளர்கள் போதியளவில் இருக்கின்றனர்.<br>4.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர்கள் உள்ளனர்.<br>5.அர்ப்பணிப்புடன் கூடிய பயிலுநர்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுகின்றனர். |
| 4. | 2017 ஆம் ஆண்டு முடிவடைகின்ற போது எல்லா மாவட்டங்களினதும் தேர்தல் முகாமைத்துவ அலுவலர்கள் தொழில் வல்லமையோடும் திறமையாகவும் செயற்பட்ட வண்ணமிருப்பர். | 4.1.நிலவுகின்ற தேர்தல் பணியாட் குழுவினர்களின் வெற்றிடங்களை நிரப்புதல், அனைத்து அலுவலர்களினதும் ஆற்றல்களை விருத்தி செய்தல். | 4.1.1.தகைமை வாய்ந்த பயிற்று விக்கப்பட்ட மாவட்ட மட்டத்தில் பணிபுரிகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை | 1.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் தகைமை உள்ளவர்களுமான அலுவலர்கள் காணப்படுகின்றனர்<br>2.தேவையான ஒத்துழைப்புச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன<br>3.அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடியவர்களும் துறைசார் அறிவைக் கொண்டவர்களுமான பயிற்றுவிப்பாளர்கள் போதியளவில் இருக்கின்றனர்.<br>4.தேவையான நிதி ஒதுக்கீடுகள் இருக்கின்றன.<br>5.பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் ஆர்வமுள்ளவர்களுமான பயிற்சியாளர்கள் கலந்து கொள்கின்றனர். |
| | | 4.2.தேர்தல் முகாமைத்துவ பணியாட் குழுவினர்களுக்கு தெளிவான முறையில் பொறுப்புக்களை கையளித்தல். | 4.2.1.தெளிவாக கையளிக்கப் -பட்டுள்ள பொறுப்புக்களுக்கமைய நடவடிக்கையெடுக்கும் அலுவலர்களின் எண்ணிக்கை | |
| | | 4.3.தேவையான தகவல்கள் மற்றும் தொழிநுட்ப உபகரணங்களை தலைமை அலுவலகத்திற்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் வழங்கல். | 4.3.1.தகவல் மற்றும் தொழிநுட்ப உபகரணங்களுடன் கூடிய பயிற்சி வழங்கப்படுகின்ற தேர்தல் முகாமைத்துவ நிறுவனங்களின் எண்ணிக்கை | |
| 5. | 2018 ஆம் ஆண்டின் அரைப் பகுதியளவில் அரசாங்கத்தினதும் தனியார் துறையினரதும் பாடசாலை -கள் மற்றும் கல்வி நிலையங்கள் என்பன சர்வஜன வாக்குரிமை-யைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக தமது மாணவர்களை அறிவூட்டியவாறு இருக்கும். | 5.1.மாணவர் பாராளுமன்றத்தின் மூலம் சர்வஜன வாக்குரிமை மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான எண்ணக்கருவை 2018 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் ஊக்குவித்தல். | 5.1.1.சனநாயகம் மற்றும் சர்வஜன வாக்குரிமையை ஊக்குவிப்பதற்கான மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.கல்வி அமைச்சும் மனித உரிமை ஆணைக்குழுவும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவுகின்றன.<br>3.தேவையான எல்லா வளங்களும் காணப்படுகின்றன. |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 5. | | 5.2.கல்வி அமைச்சின் சம்மதத்தோடு ஒவ்வொரு இரண்டாந்தர பாடசாலையிலும், குடியியல் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியரை இதற்கான இணைப்பாளராக பயிற்றுவித்து நியமித்தல் | 5.2.1.தேர்தல் ஆணைக்குழுவோடு தொடர்பு கொண்டு ஒவ்வொரு காலாண்டிலும் முன்னேற்றத்தை அறிக்கையிடுகின்ற பாடசாலைக -ளின் இணைப்பாளர்களின் எண்ணிக்கை | 1.கல்வி அமைச்சினதும் மனித உரிமை ஆணைக்குழுவினதும் நேர்க் கணியமான பதிலளிப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய ஆசிரியர்களும் அலுவலர்களும் உள்ளனர்.<br>3.தேவையான வளங்கள் உள்ளன.<br>4.பாடசாலை முகாமைத்துவம், கல்வி அமைச்சு, பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் நேர்க்கணிய ரீதியில் பதிலளிக்கின்றனர்.<br>5.அரசாங்கத்தினதும் தனியாரினதும் தொழிற் பயிற்சி நிறுவனங்களிடமிருந்தும் உயர் கல்வி |
| | | 5.3.வாக்குரிமையை பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பாக தேசிய மட்டத்திலான சித்திர/ கட்டுரை/ பொது அறிவு போட்டிகள்/ விவாதங்களை ஏற்பாடு செய்தல். | 5.3.1.குறித்த நடவடிக்கைகளை ஆர்வத்தோடு மெச்சுகின்ற பெற்றோர்களினதும் பாடசாலை மாணவர்களினதும் எண்ணிக்கை. | |
| | | 5.4.அரசாங்க மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் வாக்குரிமை மற்றும் பிரசை உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடாத்துதல | 5.4.1.நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. | |
| 6. | அனைத்து வாக்காளர்களும் தேர்தல் செயன்முறையை தெளிவாக விளங்கி வைத்துள்ளனர். தேர்தலின் போது அவர்கள் சுறுசுறுப்பாக பங்கேற்பதற்கான மனோவலிமையைப் பெற்றிருக்கிறார்கள். | 6.1.ஒவ்வொரு வீட்டிற்கும் அவர்களது மொழியில் தேர்தல் நடைமுறை தொடர்பாக எளிய நடையில் மனங்கவரத்தக்க விதத்தில் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் கைநூலொன்றை வழங்குதல | 6.1.1.அலுவலர்கள் மற்றும் வாக்காளர்களிடையே குறைந்த மட்டத்திலான பிணக்குகளும் இணக்கப்பாடின்மைகளும்.<br>6.1.2.தேர்தல் நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியாக அமைதியாக நடைபெறுகின்றதென. | 1.அர்ப்பணிப்புடன் கூடிய தேர்தல் அலுவலர்கள் உள்ளனர்.<br>2.துறைசார் அறிவும் ஆற்றலும் மிக்க எழுத்தாளர்கள் உள்ளனர்.<br>3.தேவையான அனைத்து வளங்களும் உள்ளன.<br>4.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது. |

**இலக்கு 2:**
**வாக்கைப் பிரயோகித்தல் தமக்குரிய பராதீனப்படுத்த முடியாத ஓர் உரிமை எனவும், தாம் தேர்தல் செயன்முறைக்குள் தொழிற்பாட்டு ரீதியாக பங்கேற்கின்றனர் எனவும் புரிந்து வைத்துள்ளனர்.**

**தேவைப்பாடு:**
**சர்வஜன வாக்குரிமை மற்றும் சிவில் உரிமை என்ற வகையில் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான கோட்பாடு பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்தத்தக்க விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டத் தொடர்களினூடாக செயற்பாட்டு நிலைமையை வாக்காளர்களிடையே ஏற்படுத்தலும் அப்புரிந்துணர்வின் அளவினை மேம்படுத்தலும் வாக்காளர்கள் அர்த்த புஷ்டியோடு தேர்தல் செயன்முறைகளில் ஈடுபாடு காட்டுவதை உறுதிப்படுத்திக் கொள்ளலும்**

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 1. | 2017 ஆம் ஆண்டின் அரைப் பகுதி முதல் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிற்கும் உரிய வாக்காளர்களின் பதிவு, அனைவரையும் உள்ளடக்கிய பதிவு, வாக்களிக்கும் முறை மற்றும் வாக்காளர்களுக்குரிய பராதீனப்படுத்த முடியாத உரிமை ஆகிய விடயங்கள் தொடர்பாக அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படும். | 1.1.ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிலும் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களின் புவியியல் ரீதியான அமைவிடம் சனத்தொகை, இனரீதியான உள்ளடக்கம் ஆகிய விடயங்களைக் கருத்திலெடுத்து ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட சனசமூகத் தலைவர்களுக்கு வாக்காளர்களின் பதிவு, தகைமை வாய்ந்த அனைவரையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் நடவடிக்கையெடுத்தல், சரியாக வாக்கினை அடையாளமிடல் மற்றும் வாக்காளருக்குரிய பராதீனப்படுத்த முடியாத உரிமையான வாக்குரிமை ஆகிய விடயங்கள் தொடர்பான 3 முதல் 5 வரையிலான ஒருநாள் கருத்தரங்குகளை நடாத்துதல். | 1.1.1.வாக்காளர்களை அறிவூட்டுவதற்காக நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.<br>1.1.2.நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற சனசமூக தலைவர்களின் எண்ணிக்கை.<br>1.1.3.பங்கேற்கின்ற சனசமூக அமைப்புக்களின் எண்ணிக்கை. | 1.சனசமூக அமைப்புக்களின் அதிகூடிய அக்கறை<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழுவொன்று உள்ளது.<br>4.திறமை வாய்ந்த சனசமூக தேர்தல் பயிற்றுவிப்பாளர்கள் உள்ளனர்.<br>5.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது. |
| | | 1.2.தகைமையுள்ள இலங்கை வாக்காளர்களுக்கு தேசிய மட்டத் தேர்தல்களில் வெளிநாடுகளிலிருந்து வாக்கினைப் பிரயோகிப்பதற்கு சட்டத்தின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ளவாறு வசதி செய்து கொடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு உரிய நடவடிக்கையை எடுத்தல். | 1.2.1.வெளிநாடுகளிலுள்ள தகைமை பெற்றுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை. | 1.இலங்கை தூதுவராலயங்-களிடமிருந்து சிறந்த ஒத்துழைப்பு கிடைக்கின்றது.<br>2.வெளிநாடுகளிலிருக்கின்ற இலங்கை வாக்காளர்கள் இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குகின்றனர். |

| இலக்கம் | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| | | **1.3தேர்தல ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடலும் பொது மக்களின் பாவனைக்காக அச்சுவடிவில் கொண்டுவருதலும்.** | 1.3.1.திருத்தியமைக்கப்பட்டதும் புதியதுமானசட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன.<br>1.3.2.இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மற்றும் அச்சிடப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை. | 3.ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் நேர்க் கணியமான ஒத்துழைப்பொன்று ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.<br>4.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது. |
| 2. | வாக்காளரின் உரிமைகள், வாக்காளர் பதிவு மற்றும் பிழையின்றி வாக்களித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக வாக்காளர்களை அறிவூட்டுவதற்கு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. | 2.1.வாக்காளரின் உரிமைகள், வாக்காளர் பதிவு என்பன தொடர்பாக பத்து (10) ஒருநாள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகவியலாளர்களுக்காக நடாத்துதல். | 2.1.1.நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின எண்ணிக்கை.<br>2.1.2.பயிற்சி பெற்ற ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை. | 1.ஊடக நிறுவனங்களிடமிருந்து சிறந்த, நேர்க்கணிய ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றிருக்கின்றது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய ஊடகவியலாளர் குழுவொன்றுள்ளது.<br>3. அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடியவர்களும் துறைசார் அறிவைக் கொண்டவர்களுமான பயிற்றுவிப்பாளர்கள் போதியளவில் இருக்கின்றனர்.<br>4.அர்ப்பணிப்பும், ஆர்வமும் கொண்ட பங்குகொள்வோர் உள்ளனர்.<br>5.கல்வி அமைச்சிடமிருந்து உயர் மட்ட மற்றும் நேர்க்கணிய பதிலளிப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.<br>6.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>7.அர்ப்பணிப்புடன் கூடிய அரசாங்க அலுவலர்கள் உள்ளனர். |
| 3. | 2020 ஆம் ஆண்டளவில் "தேர்தல் முறையும், நடைமுறையும்" என்ற விடயம் க.பொ.த (சா.த) பாட விதானத்தின் சமூகக் கல்வி என்ற பாடப் பரப்பின் கீழ் உட்சேர்க்கப்படும். | 3.1.இப்பாடத்தை க.பொ.த (சா.த) பாட விதானத்திற்குள் உட்சேர்ப்பதற்கான தேவைப்பாடு தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதலே கல்வி அமைச்சுடனான கலந்துரையாடல்களை துரிதப்படுத்தல். | 3.1.1.கல்வி அமைச்சோடு நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின் எண்ணிக்கை.<br>3.1.2.தேர்தல்கள் முறைமை மற்றும் நடைமுறை தொடர்பாக அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை. | |
| | | 3.2.தேர்தல் முறைமை, நடைமுறை தொடர்பான பாடவிதானத்தைத் தயாரிப்பதற்கு கல்வி அமைச்சுக்கு ஒத்துழைத்தல். | 3.2.1.தேர்தல் முறைமை மற்றும் நடைமுறை என்பன க.பொ.த (சா.த) பாடவிதானத்திற்குள் உட்சேர்க்கப்பட்டுள்ளதென | |
| | | 3.3.பாடவிதானத்தை விளைதிறன் மிக்க வகையில் கற்பிப்பதற்கான ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கு கல்வி அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கல். | 3.3.1.பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | கிராம அலுவலர்களின் பிரிவு மட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் (விசேடமாக சனசமூக அமைப்புக்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டு "வாக்குரிமை பிரசைகளுக்குரித்தான பராதீனப்படுத்த முடியாத உரிமையொன்றாகப் பயன்படுத்தப்படல்" என்ற தொனிப்பொருளில் பயிற்சி அளிக்கப்பட்டு அதற்கமைய வாக்காளர் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படும். | 4.1.அந்தந்த வாக்கெடுப்பு மாவட்டங்களின் வாக்களிப்பில் கலந்துகொள்ளவுள்ள சனசமூக அமைப்புக்களின் தலைவர்களுக்கு "வாக்குரிமை" தொடர்பான ஒருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்கமைத்தல் | 4.1.1.பயிற்றுவிக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தினர்கள் மற்றும் சனசமூக அமைப்புக்களின் அங்கத்தினர்கள் ஆகியோரின் எண்ணிக்கை.<br>4.1.2.கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்ட எண்ணிக்கை தொடர்பாக சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்களிடமிருந்து கிடைக்கப்பெறுகின்ற அறிக்கைகள். | 1.ஆர்ப்பணிப்புடன்கூடிய சிவில் சமூக அமைப்புக்களும் சனசமூக அமைப்புக்களும் உள்ளன.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>4.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் துறைசார் அறிவுடையவர்களுமான பயிற்றுவிப்பாளர்கள் உள்ளனர்.<br>5.அர்ப்பணிப்பும் ஆர்வமும் கொண்ட பங்குபற்றுநர்கள் உள்ளனர். |
| 5. | "வாக்குரிமையைப் பிரயோகித்தல் பிரசைகளுக்குரிய பராதீனப்படுத்தப்பட முடியாத ஓர் உரிமை" என்ற தொனிப்பொருளில் வாக்காளர்களை அறிவூட்ட தேர்தல் ஆணைக்குழுவால் பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் பிரசைகளால் மெச்சப்படுகின்றன. | 5.1."வாக்குரிமை என்பது பராதீனப்படுத்த முடியாத பிரசைகளின் ஓர் உரிமையாகும்." என்ற தொனிப்பொருளின் கீழ் குறுந்தொலைக்காட்சி படங்களைத் தயாரித்து இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் சமூக வலைப்பின்னல்கள் ஊடாக பிரச்சாரம் செய்தல். | 5.1.1.வாக்காளர்களை அறிவூட்டுவதற்காக தயாரிக்கப்பட்ட படைப்புக்களின் எண்ணிக்கை.<br>5.1.2.அப்படைப்புக்களைத் தயாரிப்பதற்காக பயிற்றுவிக்கப்பட்டுள்ள தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை.<br>5.1.3.படைப்புக்கள் பிரச்சாரம் செய்யப்பட்ட தடைவைகளின் எண்ணிக்கை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் துறைசார் அறிவை உடையவர்களுமான தயாரிப்பாளர்கள் போதியளவில் உள்ளனர்.<br>4.அரசாங்க மற்றும் தனியார் துறை தொலைக்காட்சி நிலையங்கள் அர்ப்பணிப்போடு இவற்றை பிரச்சாரம் செய்வதில் பங்களிப்பு வழங்குகின்றன. |
| | | 5.2."வாக்குரிமை என்பது பராதீனப்படுத்த முடியாத பிரசைகளின் ஓர் உரிமையாகும்." என்ற தொனிப்பொருளின் கீழ் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்ட பல்வர்ண அறிவித்தல்கள் 6 தயாரிக்கப்பட்டு பகிரங்க இடங்களில் காட்சிப்படுத்தப்படலும் சைக்கினை மொழிமூலம் டிஜிடல் பிரச்சாரங்களை காட்சிப்படுத்தலும். | 5.2.1.பிரச்சாரங்கள் காட்சிப்படுத்தப்படுகின்ற பகிரங்க இடங்களின் எண்ணிக்கை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையாயன வளங்கள் போதியவில் உள்ளன.<br>3.அர்ப்பணிப்படன் கூடியவர்களும் துறைசார் அறிவைக் கொண்டவர்களுமான தொழிநுட்ப அலுவலர்கள் போதியளவில் உள்ளனர். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | **5.3.**“வாக்குரிமை என்பது பராதீனப்படுத்த முடியாத பிரசைகளின் ஓர் உரிமையாகும்.” என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வர்ண அறிவித்தல்கள் தயாரிக்கப்பட்டு பிரசைகளிடம் பகிர்ந்தளிக்கப்படல். | **5.3.1.**“வாக்குரிமை என்பது பராதீனப்படுத்த முடியாத பிரசைகளின் ஓர் உரிமையாகும்.” என்ற தொனிப்பொருளை ஒவ்வொரு பிரசையும் அறிந்து வைத்துள்ளனர் என | |
| 6. | தகவல் பரிமாற்றுப் பொறி (Server) விளைதிறன் மிக்கவாறு செயற்படுகின்றது. | **6.1.**“வாக்குரிமை என்பது பராதீனப்படுத்த முடியாத பிரசைகளின் ஓர் உரிமையாகும்.”என்ற தொனிப்பொருளின் கீழ் கையடக்கத் தொலைபேசி தொடர்பாடல் வழங்குநர்கள் தமது வாடிக்கையாளர்களுக்கு குறுந்தகவல்களை (SMS) அனுப்புதல். | **6.1.1.**அனுப்பிவைக்கப்பட்ட குறுந்தகவல்களின் (SMS) எண்ணிக்கை.<br>**6.1.2.**தொடர்பு கொள்ளப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன<br>3.அர்ப்பணிப்பும் வளமிக்கதுமான தொழில் நுட்பக்குழுவொன்று காணப்படுகின்றது. |

## 2 ஆம் கவன ஈர்ப்புப் பகுதி : சட்டச் செயன்முறைகளும் சட்ட மதியுரைகளும்

### இலக்கு 3

**தேர்தல் காலப்பகுதிக்குள் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமானதும், நியாயமானதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

**தேவைப்பாடு:**

**பங்குதாரர்களின் ஒத்துழைப்போடு தேவையான அனைத்து சட்டப் பாதுகாப்புக்களும் வழங்கப்பட்டுள்ளதும் சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலுக்குப் பொருத்தமானதுமான சூழ்நிலையொன்று 2020 ஆம் ஆண்டளவில் உருவாகியுள்ளது.**

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 1. | தேர்தல் செயன்முறை மற்றும் தேருநர்களைப் பதிவு செய்வதோடு தொடர்புடைய புதிய சட்டஏற்பாடுகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டளவில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. | 1.1.தேர்தல் செயன்முறையோடு தொடர்புடைய சட்ட நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும் ஏனைய அதிகாரங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கல். | 1.1.1.தேர்தல் ஆணைக்குழுவின் முன்மொழிவுகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் கருத்திலெடுக்கப்படுவதென. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது<br>2.நீதி அமைச்சு நேர்க்கணிய ரீதியில் ஒத்துழைப்பு வழங்குகிறது.<br>3.பராளுமன்ற தெரிவுக் குழுவும் உரிய ஏனைய நிறுவனங்களும் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றன.<br>4.அர்ப்பணிப்புடன் கூடிய பயிற்சி பெற்ற அலுவலர் குழுவொன்றுள்ளது. |
| | | 1.2.சட்டங்கள், ஒழுங்கு விதிகள் என்பவற்றை வெற்றிகரமான முறையில் அமுலாக்கம் செய்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு முறையான அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளமை. | 1.2.1.சட்டத்தை அமுலாக்குவதற்கு பயிற்றுவிக்கப்பட்ட அலுவலர்கள் உரிய நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றுகின்றனரென | |
| | | 1.3.திருத்தியமைக்கப்பட்டதும் புதிதாக கொண்டுவரப்பட்டதுமான சட்டங்களும் விதிகளும் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோக-பூர்வ இணையத்தளத்திலும் அச்சு ஊடகங்களிலும் பொதுமக்களின் பாவனைக்காக பிரசுரிக்கப்படல். | 1.3.1.திருத்தியமைக்கப்பட்டதும் புதிதாக கொண்டுவரப்பட்டதுமான சட்டங்களும் விதிகளும் உள்ளனவென.<br>1.3..2.உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் அச்சு ஊடகங்களிலும் பிரசுரிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை. | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| | | 1.4.செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்கும், காலக்கெடுவை கருத்திலெடுக்காமல் நடாத்தப்படுகின்ற தேர்தல்களினால் ஏற்படக்கூடிய குளறுபடியான நிலைமைகளைத் தவிர்ப்பதற்குமான தேர்தல் நாட்காட்டியொன்றைத் தயாரிப்பதற்கு அரசியல் கட்சிகள் மற்றும் அரசாங்கத்துடனான கலந்துரையாடல்களை ஆரம்பித்தல். | 1.4.1.தேர்தல் நாட்காட்டிகளினூடாக தேர்தல்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற அதிக செலவினங்களைக் குறைத்துக்கொள்ள முடியுமென்பதோடு, குளறுபடியான நிலைமைகளையும் தவிர்த்துக்கொள்ள முடியுமென. | 1.அரசியல் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குகின்றன.<br>2.அரசாங்கக் கொள்கை அனுகூலமானது.<br>3.நீதியமைச்சு நேர்க்கணிய ரீதியான ஒத்துழைப்பை நல்குகின்றது.<br>4.பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் ஏனைய அதிகாரங்களும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன<br>5.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழாமொன்று காணப்படுகின்றது. |
| 2. | அனைத்து வேட்பாளர்களும் தமக்குரிய நிதியைப் பெற்றுக்கொள்கின்ற மூலங்கள் தொடர்பாக தமது வாக்காளர்களுக்கு வெளிப்படுத்துவதற்காகவும் அவர்களின் அச்செலவினத் தொகைகள் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகளைத் தாண்டிச் செல்லவில்லை என உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் நன்கு துணைபுரியக் கூடிய திட்டமிடப்பட்ட பொறிமுறையொன்று தாபிக்கப்பட்டுள்ளது. | 2.1.தேர்தல் வேட்பாளர்களின் பிரச்சார செலவினங்கள் மற்றும் நிதி மூலங்கள் தொடர்பான ஒழுங்கு விதித் தொகுப்பொன்றை அறிமுகப்படுத்தல். | 2.1.1.அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் வேட்பாளர்களுக்கு விநியோகிக்கின்ற அறிவுறுத்தல்கள். | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் அர்ப்பணிப்போடு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்<br>3.அரசியல் கட்சிகளின் செயலாளர்களும் வேட்பாளர்களும் ஒத்துழைப்பை நல்குகின்றனர்.<br>4.ஊடகங்களின் பங்களிப்பு உயர் தரத்தில் காணப்படுவதோடு, அர்ப்பணிப்புடன் கூடிய ஊடகவியலாளர்கள் உள்ளனர்.<br>5.திறமையான அலுவலர் குழாம் ஒன்றுள்ளது.<br>6.நீதிமன்றங்கள் சிறந்த ஒத்துழைப்பை நல்குகின்றன.<br>7.அர்ப்பணிப்புடன் கூடிய குழுவொன்று இருக்கின்றது. |
| | | 2.2.வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார செலவினங்கள் மற்றும் நிதி மூலங்கள் தொடர்பாக ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்திலும் கண்காணிப்பாளர்களுக்கான ஒருநாள் கருத்தரங்குகளை நடாத்துதல். | 2.2.1.நடாத்தப்படுகின்ற கருத்தரங்குகளில் கலந்துகொள்கின்ற தேர்தல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை | |
| | | 2.3.வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார செலவினங்கள் மற்றும் நிதி மூலங்கள் தொடர்பாக வேட்பாளர்களுக்கான ஒருநாள் கருத்தரங்குகளை மாகாண மட்டத்தில் நடாத்துதல். | 2.3.1.தேர்தல் சட்டங்களுக்கு இணங்க நடந்தொழுகுகின்ற வேட்பாளர்கள் | |
| | | 2.4.அரசியல் கட்சிகளோடு கலந்துரையாடி தேர்தல் பிரச்சார செலவினங்களின் மட்டுப்பாடுகள் தொடர்பா சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல். | 2.4.1.வேட்பாளர்களினால் தேர்தல் பிரச்சார செலவின மூலங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றனவென | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| | | 2.5.பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள், சட்ட விதிகள், ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகள் என்பவற்றை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களூடாக பகிரங்கப்படுத்தல். | 2.5.1.சட்ட ஏற்பாடுகள், ஒழுங்கு விதிகள் மற்றும் வழிகாட்டு நெறிகள் தொடரபாக போதியளவு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றதென | |
| | | 2.6.வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களுக்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கின்றார்களா என புலனாய்வு மேற்கொள்ளல். | 2.6.1.சட்டமீறல் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா -வென புலனாய்வு செய்வதற்கான ஒரு பிரிவு நிறுவப்பட்டுள்ளதென. | |
| | | 2.7.தேர்தல் சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுக்கின்றவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல். | 2.7.1.தேர்தல் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக உரிய சட்ட வலுவாக்கல் நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கின்றனவென | |
| 3. | தேர்தலில் ஊழல் புரிந்த மற்றும் / அல்லது தேர்தல் சட்டங்களை மீறிய நபர்கள் தொடர்பான புலனாய்வுகளை மேற்கொண்டு தவறிழைத்தவர்களை நீதிமன்றத்திற்கு முன்னால் கொண்டுவருவதற்கு உரிய விசாரணைப் பிரிவினரின் ஒத்துழைப்போடு செயற்படத்தக்க ஒரு பிரிவு 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறுவப்பட்டிருக்கும். | 3.1.தேர்தல் ஊழல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு தகைமையுள்ள அலுவலர்களை உள்ளடக்கிய ஓர் அலகினை சட்ட அதிகாரங்களுடன் கூடியதாக நிறுவுதல | 3.1.1.பயிற்றுவிக்கப்பட்டவர்களும் ஆட்சேர்க்கப்பட்டவர்களுமான தகைமையுள்ள அலுவலர்கள் மற்றும் ஆலோசகர்களின் எண்ணிக்கை | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.நேர்மையானவர்களும் கடுமையான அர்ப்பணிப்போடு பணியாற்ற கூடியவர்களுமான அலுவலர்கள் உள்ளனர்.<br>3.தேவையான வளங்கள் போதியளவில் உள்ளன<br>4.தேவையான எல்லா உபகரணங்களும் கட்டமைப்பு வசதிகளும் காணப்படுகின்றன |
| | | 3.2.தேர்தல் ஊழல் நடவடிக்கைகளை புலனாய்வு செய்வதற்கான பிரிவுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் கருவிகள் என்பவற்றை போதியளவில் கொண்டிருக்கின்ற இடவசதிகளுடன் கூடிய அலுவலகமொன்றை வழங்குதல். | 3.2.1.அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய அலுவலகமொன்று காணப்படுகின்றதென | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3.3.தேர்தல் ஊழல்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கும் தனது பணி தொடர்பாக சிறந்த புரிந்துணர்வோடு நடவடிக்கை எடுப்பதற்குமாக அப்பிரிவின் பணிகளையும் கடமைப் பொறுப்புக்களையும் தெளிவாக வரையறுத்தல். | 3.3.1.நடாத்தப்படுகின்ற விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>3.3.1.புலனாய்வு செய்யப்பட்ட ஊழல் நடவடிக்கைகளின் எண்ணிக்கையும் சட்டத்திற்கு முன்னால் கொண்டுவரப்பட்ட நபர்களின் எண்ணிக்கையும். | |
| | | 3.4.வேட்பாளர்கள் சட்ட வரம்பெல்லைக்குட்பட்ட வகையில் நடவடிக்கையெடுப்பதை மேற்பார்வை செய்வதற்கு தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப உபகரணங்களை பயன்படுத்துதல். | 3.4.1.கணினியூடாக நேரடியாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றதெனவும் அதற்கமைய நடவடிக்கையெடுக்கப்படுகின்ற-தெனவும்.<br>3.4.1.ஊடகங்களின் மேற்பார்வைக்காக தகவல் தொழிநுட்ப முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதென | |
| 4. | வேட்பாளர்களினால் உத்தியோகபூர்வமாகவோ அல்லது உத்தியோகப்பற்றற்ற வகையிலோ அரசாங்க ஆதனங்களையும், வளங்களையும் துஷ்பிரயோகம் செய்தல் தடுக்கப்பட்டுள்ளது. | 4.1.அரச ஆதனங்களை தேர்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக நடைமுறையிலுள்ள சட்ட திட்டங்கள் மற்றும் எடுக்க முடிந்த நடவடிக்கைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தொழிற்படு நிலையிலுள்ள அரசியல்வாதிகள், உரிய அரசாங்க அலுவலர்கள் ஆகியோரை அறிவூட்டுவதற்காக தேசிய ரீதியிலான ஒருநாள் கருத்தரங்குத் தொடர் ஒன்றை நடாத்துதல் | 4.1.1.அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்கின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் தொழிற்படு நிலையிலுள்ள அரசியல் வாதிகள் மற்றும் அரசாங்க அலுவலர்களின் எண்ணிக்கை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் நேரடியாக செயற்படக்கூடியவர்களுமான அரசாங்க அலுவலர்கள் உள்ளனர்.<br>3.தேவையான வளங்கள் உள்ளன.<br>4.அனைத்து அரசியல் கட்சிகளும், செயலாளர்களும், தொழிற்படு நிலையிலுள்ள அரசியல் வாதிகளும் உரிய அரசாங்க அலுவலர்களும், நேரக்கணிய ரீதியாக அர்ப்பணிப்புக்களை மேற்கொள்கின்றனர்.<br>5.அர்ப்பணிப்புடன் கூடிய சட்ட அலுவலர் குழுவொன்று காணப்படுகின்றது |
| | | 4.2.ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆகியோருடன் ஒன்றிணைந்து சட்டம் மற்றும் சமாதானம் என்பவற்றைப் பாதுகாப்பது தொடர்பான ஒருங்கிணைந்த வெளிப்படுத்துகையொன்றை வெளியிடல். | 4.2.1.வெளிப்படுத்துகையில் கையொப்பமிட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 5. | தேர்தல் வன்முறைகள் 2015 ஆண்டில் காணப்பட்ட தொகையிலும் பார்க்க 2020 ஆம் ஆண்டில் ஆகக்குறைந்தது 90% ஆல் குறைவடைந்துள்ளது. | 5.1.தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள், பொலிசார், ஊடகங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு என்பவற்றோடு ஒன்றிணைந்து பொதுமக்கள், வேட்பாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு வன்முறையை ஒழிப்புத் தொடர்பாக விளைதிறன் மிகு அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல். | 5.1.1.அறிக்கையிடப்பட்டுள்ள வன்முறைகள் குறைந்துள்ளனவென<br>5.1.2.கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள், வாக்காளர்கள், முக்கியமாக பொலிசார் மற்றும் பாதுகாப்புத் துறையினர் ஆற்றிய சேவைகள் என்பன தேர்தல் ஆணைக்குழுவின் மெச்சுதலுக்கு இலக்காகியுள்ளதென | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழுவொன்று உள்ளது.<br>3.சட்டத்தையும், சமாதானத்தையும் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்ற பொலிசார் மற்றும் இராணுவத்தினர் உள்ளனர்.<br>4.மக்கள் பூரண ஒத்துழைப்பை நல்குகின்றனர்.<br>5.கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோரும் ஒத்துழைப்பு நல்குகின்றனர். |
| | | 5.2.ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிலும் பாதுகாப்புக்காக போதியளவு பயிற்றுவிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர்களைப் பணியிலீடுபடுத்தல். | 5.2.1.பொலிஸ் அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>5.2.2.வாக்கெடுப்புப் பிரிவுகளில் பாதுகாப்பை வழங்குவதற்காக பயிற்றுவிக்கப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை | |

| இலக்கு 4: ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் அனைவரையும் உள்ளடக்கிய சீராக்கம் செய்யப்பட்ட வாக்காளர் இடாப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | | | | |
|---|---|---|---|---|
| தேவைப்பாடு: வாக்குரிமை கிடைக்கப்பெற வேண்டிய எந்தவொரு பிரசையும் விட்டுவிடப்படாத விதத்தில் அனைவரும் உள்ளடக்கப்பட்ட தேருநர் இடாப்பொன்று உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல். | | | | |
| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
| 1. | மக்களின் இறைமையைப் பாதுகாப்பதற்காக சர்வஜன வாக்குரிமை மிகமிக முக்கியமான ஒரு விடயமெனப் புரிந்து கொண்டுள்ள பிரசைகள் ஏனையோரையும் வாக்காளராகப் பதியுமாறு ஊக்குவிக்கின்றனர் | 1.1.வாக்காளர்களின் தினத்திற்கு இணையாக ஒவ்வோர் ஆண்டும் யூன் மாதம் 01 ஆம் திகதியன்றும் அதையடுத்து வருகின்ற சில நாட்களைக் கொண்ட காலக்கெடுவிற்குளேயும் பொதுமக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிலும் நடாத்துதல். | 1.1.1.நடாத்தப்பட்ட மக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.<br>1.1.2.உள்ளடக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.பொதுமக்களின் ஆர்வம் வரவேற்புக்குரியது.<br>3.ஊடகங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.<br>4.தேவையான வளங்கள் உள்ளன.<br>5.அனைத்து அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.<br>6.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழுவொன்று உள்ளது.<br>7.சிவில்/தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான திறமையான பயிற்றுவிப்பாளர்கள் காணப்படுகின்றனர். |
| | | 1.2.வாக்காளர் பதிவு மற்றும் சர்வஜன வாக்குரிமை தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்துப் பிரச்சாரம் செய்தல். | 1.2.1.வாக்காளர் பதிவு மற்றும் சர்வஜன வாக்குரிமை தொடர்பாக தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | |
| | | 1.3.வாக்காளர்களின் பதிவு மற்றும் சர்வஜன வாக்குரிமை தொடர்பான 10 வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல். | 1.3.1.வாக்காளர் பதிவு மற்றும் சர்வஜன வாக்குரிமை தொடர்பாக ஒலிபரப்பப்பட்ட வானொலி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | |
| 2. | ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் தகைமை வாய்ந்த பிரசைகள் யூன் 01ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கணக்கெடுக்கப்படுகின்றனர். | 2.1.வாக்காளர் கணக்கெடுப்பில் முன்னணி அலுவலர் குழுவொன்று பயிற்றுவிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படுதல். | 2.1.1.பயிற்றுவிக்கப்படுகின்ற அலுவலர்களின் எண்ணிக்கை. | 1.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் துறைசார் அறிவுடையவர்களுமான அலுவலர்கள் உள்ளனர்.<br>2.மாவட்டங்களில் தகைமையுள்ள அனைத்து வாக்காளர்களும் தமது பூரண ஒத்துழைப்பை நல்குகின்றனர்.<br>3.தேவையான வளங்கள் காணப்படுகின்றன. |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 3. | தகைமையுள்ள வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்கள் ஒவ்வோர் ஆண்டும் யூன் 01 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படுவர். | 3.1.வெளிநாடுகளிலுள்ள ஒவ்வோர் இலங்கைத் தூதுவராலயமும் தகைமை வாய்ந்த வெளிநாடு சென்ற அனைத்து வாக்காளர்களையும் பட்டியல்படுத்துவதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்தல். | 3.1.1.தகைமை வாய்ந்த வெளிநாடு சென்ற வாக்காளர்களின் எண்ணிக்கை | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழுவொன்று உள்ளது.<br>3.வெளிநாடு சென்றுள்ள தகைமை வாய்ந்த வாக்காளர்கள் ஒத்துழைப்பு நல்குகின்றனர்.<br>4.வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்கள் ஒத்துழைப்பு நல்குகின்றன.<br>5.தேவையான வளங்கள் உள்ளன. |
| 4. | தேருநர் இடாப்புப் பதிவேட்டுத் திருத்தச் சட்டத்திற்கு புதிய ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுவதனூடாக, தேர்தலொன்று பிரகரனப்படுத்தப்படுகின்ற திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள இளைஞர், யுவதிகள் வாக்காளர் இடாப்பில் பதியப்படுவதை உறுதிப்படுத்தத் தக்க விதத்தில் தேருநர் இடாப்புக்கான குறைநிரப்பு தேருநர் இடாப்பொன்று 2018 ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்படும். | 4.1.வாக்காளர் இடாப்பு மீளாய்வு ஆரம்பிக்கப்படுகின்ற தினத்தன்று வாக்களிப்பதற்குத் தகைமை பெற்றிருந்த போதிலும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்படாத தகைமை வாய்ந்த வாக்காளர்களின் பெயர்களை உள்ளடக்கிய குறைநிரப்பு தேர்தல் இடாப்பொன்றைத் தயாரித்தல். "தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தல் முடிவடைந்ததன் பின்னர் தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்படுமிடத்து அதுவரை தமது பெயரைப் பதிந்து கொள்ள முடியாமல் போன வாக்காளர்கள் வாக்கினைப் பிரயோகிப்பதற்கு இடமளிப்பதற்காக இப்பட்டியல் தயாரிக்கப்படுகின்றது." | 4.1.1.குறைநிரப்பு தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தகைமை வாய்ந்த வாக்காளர்களின் எண்ணகிகை | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் திறமை வாய்ந்தவர்களுமான அலுவலர் குழாமொன்று உண்டு.<br>3.நடைமுறை சாத்தியமானதும் பின்பற்றப்பட முடியுமானதுமான கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | 2018 ஆம் ஆண்டளவில் அனைத்து பிரசைகளும் தேருநர் இடாப்பில் உள்ளடக்கப்படுகின்றனர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தகவல், தொடர்பாடல் தொழிநுட்பக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | 5.1.சமூக ஊடகப் பிரிவொன்று தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்படல் | 5.1.1.சமூக ஊடகப் பிரிவு நிறுவப்பட்டுள்ளதென | 1.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் திறமையானவர்களுமான தகவல் தொழிநுட்பக் அலுவலர் குழாமொன்று உள்ளது.<br>2.திறன் வட்டங்களின் (ளுஅயசவ ஊசைஉடந) ஒத்துழைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br>3.தேவையான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் நிபுணத்துவமிக்க ஊழியர் குழாமொன்று உண்டு<br>4.ஏனைய வளங்களும் கருவிகளும் உள்ளன. |
| | | 5.2.தேர்தல் செயன்முறையில் சமூக வட்டங்களைத் தொடர்பு படுத்திக்கொள்வதற்கான பொறிமுறை பயன்படுத்தப்படுகின்ற அளவு/ முறைமையை தீர்மானித்தல். | 5.2.1.சமூக வட்டங்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் எண்ணிக்கை | |
| | | 5.3.உத்தியோகபூர்வ வலைப்பதிவு (Blog) தளமொன்றை விருத்தி செய்து பேணுதல | 5.3.1.வலைப்பதிவு (Blog) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதென | |
| 6. | பங்களிப்பு அணுகுமுறையொன்றின் மூலம் தேர்தல் செயன்முறையில் அனைத்து பிரசைகளையும் பங்கேற்கச் செய்யத்தக்க விதத்திலான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கின்றது | 6.1.தேர்தல் ஆணைக்குழுவுக்கான தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக் கொள்கையொன்று தயாரிக்கப்படல். | 6.1.1.தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக் கொள்கையொன்று செயற்படுத்தப்படுகின்றதென | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.திறமையான கொள்கை ஆக்குநர்கள் உள்ளனர். |
| 7. | 2018 ஆம் ஆண்டளவில் பிரசைகள் தமக்குரிய தகவல்களை தாமே சீராக்கம் செய்யத்தக்க விதத்திலான நிகழ்நேர தேருநர் இடாப்பொன்று தயாரிக்கப்பட்டிருக்கும். (Real time on line Voter Registry) | 7.1.அனைத்து இலங்கை பிரசைகளையும் உள்ளடக்குகின்ற கணினி மயப்படுத்தப்பட்ட நிகழ்நேர (ழுெ டலைநெ) தேருநர் இடாப்பொன்றைத் தயாரித்தல | 7.1.1.நிகழ்நேர தேருநர் இடாப்பொன்று உள்ளதென | 1.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் தகைமையுள்ளவர்களுமான தகவல் தொழிநுட்ப அலுவலர் குழாமொன்று உள்ளது<br>2.நிகழ்நேர (online) தேருநர் இடாப்பொன்று தொடர்பாக பிரசைகள் தெரிந்து வைத்துள்ளனர். |

| இலக்கு 5: சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற அனைத்து பிரசைகளும் நம்பிக்கையோடும் போதியளவிலும் தேர்தல் செயன்முறையில் பங்குகொள்கின்றனர். | | | | |
|---|---|---|---|---|
| தேவைப்பாடு: 2020 ஆம் ஆண்டளவில் சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் பாதுகாக்கப்பட்ட ஒரு சூழலுக்குள் பெண்கள், அங்கவீனர்கள், தொகை ரீதியாக குறைந்த எண்ணிக்கை கொண்ட இனப் பிரிவினர் மற்றும் ஏனைய விளிம்பு நிலை சமூகப் பிரிவினர்களின் பங்களிப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளது. | | | | |
| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
| 1. | வாக்காளரின் உரிமை தொடர்பான செய்தியை பிரசைகளுக்கு எத்திவைக்கின்றபோது சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்கள் என்பன செயற்பாட்டு ரீதியாக பங்கெடுத்துக்கொள்கின்றன. | 1.1.பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதி, பொருட்கள் மற்றும் முன்னாய்வுகளைத் தயாரித்தல். | 1.1.1.பயிற்றுவிக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புக்களினதும் சனசமூக அமைப்புக்களினதும் தலைவர்களின் எண்ணிக்கை.<br>1.1.2.நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. | 1.சிவில் சமூக அமைப்புக்களும் சனசமூக அமைப்புக்களும் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றன.<br>2.தகைமை வாய்ந்த பயிற்றுவிப்பாளர் குழுவொன்று உண்டு.<br>3.தேவையான வளங்கள் உள்ளன.<br>4.அர்ப்பணிப்புடன் கூடிய குழுவொன்றுள்ளது. |
| | | 1.2.சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களுக்காக ஒவ்வொரு வாக்கெடுப்புப பிரிவிலும் ஒருநாள் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல் படுத்தல். | 1.2.1.பயிற்சிக்குத் தேவையான மூலவளங்கள் மற்றும் முன்னாய்வுகளின் எண்ணிக்கை. | |
| | | 1.3.வாக்குரிமை தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல் படுத்துவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்களுக்கு உதவுதல். | 1.3.1.வாக்குரிமை தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகின்ற சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்களின் எண்ணிக்கை.<br>1.3.2.வாக்குரிமை தொடர்பாக நடாத்தப்படுகின்ற அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 1.சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி அர்ப்பணிப்போடு நடந்துகொள்கின்றன.<br>2.தேவையான வளங்கள் காணப்படுகின்றன.<br>3.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழாமொன்று உண்டு.<br>4.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது. |
| | | 1.4.நம்பத் தகுந்த தேர்தல்களை நடாத்துவதற்காக தேர்தல் தொடர்பான தரப்பினர்களோடு ஐக்கியமாக நடந்துகொள்ளல். | 1.4.1.தேர்தலோடு தொடர்புடைய பங்குதாரர்களிடையே ஒற்றுமையை கட்டியெழுப்புகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | 1.தேவையான வளங்கள் உள்ளன.<br>2.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் திறமையானவர்களுமான அலுவலர்கள் குழாமொன்று உள்ளது.<br>3.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது. |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 2. | ஒவ்வோர் ஆண்டிலும் உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் கொண்டாடப்படுகின்ற தினங்களில் தேர்தல் ஆணைக்குழு வாக்காளர்களின் உரிமை தொடர்பாக மக்களை அறிவூட்டுகின்ற பிரச்சார நிகழ்வுகளை நடாத்துகின்றது. | 2.1.மனித உரிமை தினம், மகளிர் தினம் மற்றும் ஆசிரியர் தினம் போன்ற சர்வதேச தினங்களில் வாக்குரிமை தொடர்பான கருத்தரங்குகளை நடாத்துதல். | 2.1.1.தேர்தல் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகளின் எண்ணிக்கை. | 1.தேவையான வளங்கள் உள்ளன.<br>2.அர்ப்பணிப்பும் திறமையும் கொண்ட அலுவலர் குழாமொன்று உள்ளது.<br>3.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது. |
| 3. | பாலின சமநிலையைப் பேணுவதற்காக பெண்களில் போதியளவினர் தேர்தல் செயன்முறையில் ஈடுபாடு காட்டுகின்றனர். | 3.1.பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 25% சந்தர்ப்பத்தை வழங்குகின்ற தேவைப்பாட்டினை பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு உணர்த்துவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்களோடு நடவடிக்கை எடுத்து 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தொடர்பான வசதிகளை செய்து கொடுத்தல். | 3.1.1.சிவில் சமூக அமைப்புக்களினூடாக நடாத்தப்படுகின்ற அறிவுறுத்தல் நடவடிக்கைகளின் எண்ணிக்கை.<br>3.1.2.கலந்து கொண்ட பெண் தலைவிகளின் எண்ணிக்கை.<br>3.1.3.அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்ட சிவில் சமூக அமைப்புக்களின் எண்ணிக்கை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய பெண் தலைவிகளும் மகளிர் அமைப்புக்களும் உள்ளன.<br>3.ஆண், பெண் இருபாலாரினதும் இளம் தலைவர்களும், தலைவி-களும் உள்ளனர்.<br>4.தேவையான அனைத்து வளங்களும் உள்ளன.<br>5.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் ஆற்றல்மிக்கவர்களுமான பாலின பயிற்றுவிப்பாளர்கள்.·. அலுவலர்கள் உள்ளனர்.<br>6.அர்ப்பணிப்புடன் கூடிய பயிற்றுவிப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.<br>7.அரசியல் கட்சிகள் ஒத்துப்பு வழங்குகின்றன. |
| | | 3.2.தமது கட்சியின் அலுவலர்களில் 20% பெண்களாக இருக்க வேண்டுமென அரசியல் கட்சிகளை ஊக்குவித்தல். | 3.2.1.அரசியல் கட்சிகளின் அலுவலர் குழாத்தின் ஆகக் குறைந்தது 20% பெண்களாகவுள்ளனரென. | |
| | | 3.3.தேர்தல் ஆணைக்குழுவில் ஆகக் குறைந்தது இரண்டு நிறைவேற்று அலுவலர்களையேனும் பாலினம் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி பயிற்றுவித்து உரிய அனைத்து தரப்பினர்களும் பாலின உரிமைகள் தொடர்பாக அக்கறையோடு நடந்துகொள் -கின்றனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல். | 3.3.1.தேர்தல் ஆணைக்குழுவின் வேலைத்திட்டங்கள் அரசியல் கட்சிகள் மற்றும் மகளிர் குழுக்களிடையே மெச்சப்படுகின் -றனவென.<br>3.3.2.பாலினம் தொடர்பாக செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 4. | 2019 ஆம் ஆண்டளவில் இளைஞர்கள் தேர்தல் செயன்முறையில் போதியளவிலும் ஆர்வத்தோடும் பங்கேற்கின்றனர். | 4.1.தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குரிமை தொடர்பாக விழிப்பூட்டுகின்ற 6 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | 4.1.1.நடாத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை<br>4.1.2.தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களில் கலந்து கொண்டோரின் தொகை. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய இளைஞர் அமைப்புக்கள் உள்ளன.<br>3.ஆண், பெண் இருபாலாரிலும் அர்ப்பணிப்புடன் கூடிய இளம் தலைவர்கள் உள்ளனர்.<br>4.தேவையான வளங்கள் உள்ளன.<br>5.தகைமை வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள் உள்ளனர்.<br>6.அர்ப்பணிப்பும் ஆர்வமுள்ள பயிலுநர்கள் உள்ளனர். |
| | | 4.2.“இளைஞரும் வாக்குரிமையும்” என்ற தொனிப்பொருளின் கீழ் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவிலும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்று வித்து 25 பேருடன் கூடிய குழாமொன்றை 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தயாரித்தல | 4.2.1.நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.<br>4.2.2.“இளைஞரும் வாக்குரிமையும்” என்ற தொனிப்பொருளின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை | |
| 5. | மாற்றுத்திறன், விளிம்பு நிலை, இடம்பெயர்ந்த மற்றும் அத்தகைய வேறு சமூகப் பிரிவினர்கள் தேர்தல் செயன்முறையில் தடங்கலின்றி போதியளவில் ஈடுபாடு காட்டுகின்றனர். | 5.1.வாக்கினை அடையாளமிடு -கையில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற மாற்றுத்திற -னாளிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை ஏற்கனவே கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகளுக்கமைய கணிப்பீடு செய்தல். | 5.1.1.வாக்களிக்கின்ற போது பிரச்சினைகளை எதிர்கொள் -கின்ற மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்கள் கிடை- க்கப்பெற்றுள்ளனவென. | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழாமொன்று உள்ளது.<br>3.மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக நடவடிக்கை -யெடுக்கின்ற சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சனசமூக அமைப்புக்கள் என்பன ஒத்துழைப்பு வழங்கி பங்களிப்பைச் செலுத்துகின்றன.<br>4.சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் ஏனைய உரிய நிறுவன- ங்கள் என்பன ஒத்துழைப்பு வழங்கி பங்களிப்புச் செலுத்துகின்றன.<br>5.தேவையான வளங்கள் உள்ளன.<br>6.பொதுமக்களின் ஒத்துழைப்பும் அறிவும் நேர்க்கணியமாகவும் சார்பாகவும் உள்ளன |
| | | 5.2.உள்ளக ரீதியாக இடம் -பெயர்ந்துள்ளவர்களுக்கு வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல | 5.2.1.உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்துள்ளவர்கள் அல்லது அரசியல் கட்சிகள் மூலம் உள்ளக ரீதியாக இடம் -பெயர்ந்துள்ள வாக்காளர்கள் எதிர்கொள்கின்ற இடையூறுகள் தொடர்பாக சமர்ப்பிக்கின்ற முறைப்பாடுகள் குறைந்துள்ள -தென. | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 5. | | 5.3.கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகளுக்கமைய விளக்கமறியலிலுள்ளவர்களின் எண்ணிக்கையை அடையாளம் காணலும் சிறைச்சாலைகள் திணைக்களத்திடமிருந்து தகவல்களைப் பெற்றுக் -கொள்ளலும். | 5.3.1.அடையாளம் காணப்பட்ட விளக்கமறியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை.<br>5.3.2.விளக்கமறியலிலுள்ள -வர்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளனவென. | |
| | | 5.4.விளக்கமறியலிலுள்ளவர்க -ளுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளை முறைமைப்படுத்தல். | 5.4.1.விளக்கமறியலிலுள்ளவர்க -ளுக்கு வாக்களிப்பதற்கான முறையான விசேட செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் -பட்டுள்ளதென. | |
| | | 5.5.குறவர்கள், ஆதிவாசிகள், தெலுங்கு, மலையாள குழுக்கள் மற்றும் வீதியோரங்களில் வாழ்பவர்கள் மொத்த சனத்தொகையில் எத்தனை வீதத்தினரென கணக்கெடுத்தல். | 5.5.1.குறவர்கள் மற்றும் ஆதிவாசிகள் தொடர்பான தகவல்கள் சேரிக்கப்பட்டுள்ளதென. | 1.அரசாங்க கொள்கை அனுகூலமானது.<br>2.அர்ப்பணிப்புடன் கூடிய அலுவலர் குழாமொன்று உள்ளது.<br>3.குறவர்கள், ஆதிவாசிகள், தெலுங்கு, மலையாள மற்றும் வீதியோர சனப்பிரிவினர் ஒத்துழைப்பு நல்குகின்றனர்.<br>4.தேவையான வளங்கள் உள்ளன.<br>5.மக்கள் புரிந்துணர்வு காணப்படுவதோடு, ஒத்துழைப்பும் சார்பானதும் நேர்க்கணியதுமாகும்.<br>6.வாக்காளர் பதிவுக்கான புதிய முறையொன்று உள்ளது.<br>7.குறவர்கள், ஆதிவாசிகள் தெலுங்கு மற்றும் மலையாள சனப்பிரிவினருக்கும் வீதியோரங்களில் வாழ்பவர்களுக்கும் அவ்வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. |
| | | 5.6.வாக்காளர் இடாப்பில் குறவர், ஆதிவாசிகள் தெலுங்கு மற்றும் மலையாள சனப்பிரிவினர், வீதியோர வாசிகள் உட்சேர்க்கப்படுவதை முறையான செயன்முறையொன்றின் மூலம் மேற்கொள்ளல் | 5.6.1.குறவர்கள், ஆதிவாசிகள், தெலுங்கு, மலையாள சனப்பிரிவினர் மற்றும் வீதி வாசிகள் எவ்வித சிரமமுமின்றி வாக்கினை பிரயோகிக்கின்றார்களென | |
| | | 5.7.அரசாங்க சேவையிலும் தனியார் துறையிலும் அத்தியவசிய சேவைகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு வாக்களிப்புத் தினத்தன்று விசேடமாக அடையாளம் காணப்பட்ட ஓர் இடத்தில் வாக்களிப்பதற்கு அவகாசமளிப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை வகுத்தல். | 5.7.1.அதே வாக்களிப்பு நிலையத்தில் இத்தகைய எல்லா சனப்பிரிவினர்களுக்கும் வாக்களிப்பதற்கான அவகாசத்தை வழங்குகின்ற ஒரு புதிய வாக்காளர் பதிவு முறை அமுல்படுத்தப்படுகின்றதென. | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 6. | அரச மற்றும் தனியார் துறையின் அத்தியவசிய சேவைகளில் ஈடுபடுகின்றவர் -களும் தற்போது அஞ்சல் வாக்கினை பிரயோகிப்பதற்கான அனுமதி கிடைக்காதவர்களு -மான வாக்காளர்கள் வாக்கினை அளிப்பதற்கான முறைமையொன்று 2020 ஆம் ஆண்டு இறுதியளவில் அறிமுகஞ் செய்து வைக்கப்படும். | 6.1.அரச மற்றும் தனியார் துறையின் அத்தியவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாக்களிப்புத் தினத்தன்று விசேட நிலையமொன்றில் வாக்களிப்பதற்கு அவகாசம் அளிப்பது தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்மொழிவொன்றை தயாரித்து வழங்குதல். | 6.1.1.அதே தினத்தன்று விசேட நிலையமொன்றில் வாக்கினை அளிப்பதற்கு அவகாசம் அளிப்பது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கான முன்மொழிவை பாராளுமன்றத் தெரிவுக்குழு கருத்திலெடுத்துள்ளதென. | 1.பாராளுமன்றத் தெரிவுக்குழு வழங்குகின்ற ஒத்துழைப்பு நேர்க்கணியமானது.<br>2.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது. |

**கவன ஈர்ப்புப் பகுதி 3 - தாபன அபிவிருத்தி**

**இலக்கு 6:**
**தேர்தல் செயன்முறை திறமையாகவும் வெளிக்காட்டுத் தன்மையுடன் கூடியதாகவும் நிருவகிக்கப்படுகின்றது.**

**தேவைப்பாடு:**

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 1“ | தேர்தலோடு தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழுங்கமை-க்கவும், முகாமைத்துவம் செய்யவும், நிருவகிக்கவும் தேவையான முறைமையொன்று முறையாகத் தயாரிக்கப் -பட்டுள்ளது. | 1.1.ஒவ்வொரு தேர்தலையும் நிருவகித்தல், மேற்பார்வை செய்வதற்கு மாவட்ட மட்டத்தில் பூரணத்துவம் வாய்ந்த திட்டமொன்று நடைமுறைப்படு-த்தப்படுகின்றது. | 1.1.1.தேர்தலை நடாத்துவதற்குத் தேவையான பூரண விளக்கத்துடன் கூடிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதென | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.திறமையான, அர்ப்பணிப்புடன் கூடிய ஆற்றல் மிக்க அலுவலர் குழாமொ-ன்று உண்டு.<br>4.தேர்தல் ஆணைக்குழுவின் அலு வலர்கள் அமைதியான தேர்தலொன்றை நடாத்துவது தொடர்பாக புரிந்துணர்வுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுகின்றனர். |
| | | 1.2.தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ள அலுவலர்-களை தேர்ந்தெடுத்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு பரிந்துரைத்தல். | 1.2.1.தகைமையும் திறமையும் வாய்ந்த அலுவலர்கள் தேர்தல் பணிகளில் ஈடுப்படுத்தப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளரென. | |
| | | 1.3.தேர்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கின்ற தற்போது நடைமுறையிலுள்ள முறையை விருத்தி செய்து தேர்தல் அலுவலர்களுக்கு தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் அறிவித்தல். | 1.3.1.அனைத்து அலுவலர்களும் தேர்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டம் தொடர்பாக தெரிந்துவைத்துள்ளனரென | |
| | | 1.4.ஒவ்வோர் அலுவலரினதும் பொறுப்புக்கள், அந்தந்த நிலையங்களில் மேற்கொள்ளப் -படுகின்ற நடவடிக்கைகள் பற்றிய ஒவ்வொரு பணியையும் மேற்பார்வை செய்வதோடு, அனைத்தையும் இணைத்த விதத்தில் தயாரிக்கப்பட்ட செவ்வை பார்க்கும் ஆவணங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் வெற்றிகரமாக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ளல். | 1.4.1.தேர்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் தொடர்பாக முறைப்பாடுகள் குறைவாக உள்ளனவென<br>1.4..2.தேர்தல் தொடர்பான வினைத்திறன் அதிகரித்துள்ளதென. | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 2. | 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் இலத்திரனியல் வாக்களித்தலுக்கான முன்னோடிக் கருத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | 2.1.இலத்திரனியல் வாக்களிப்பு முறையொன்றை அறிமுகப்படுத்துதல் தொடர்பாக 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தல். | 2.1.1.இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக பாராளுமன்றத்தின் தெரிவுக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதென | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.பாராளுமன்றத் தெரிவுக்குழு இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அங்கீகரிக்கின்றது.<br>4.அர்ப்பணிப்புடன் கூடியதும் பயிற்சி பெற்றவர்களுமான அலுவலர்கள் உள்ளனர்.<br>5.பொதுமக்களிடமிருந்து நேர்க் கணிய ஒத்துழைப்பும் பதிலளிப்பும் கிடைக்கின்றது. |
| | | 2.2.இலத்திரனியல் வாக்களிப்பு முறை இலங்கைக்கு எந்தளவு தூரம் பயனளிக்கும் என்பதைக் கண்டறிவதற்கான தூதுக்குழுவை இம்முறை நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஒரு நாட்டிற்கு அனுப்பி வைத்தல். | 2.2.1.இலத்திரனியல் வாக்களிப்பு முறை தொடர்பாக கண்டறிந்த தூதுக்குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதென | |
| | | 2.3.பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் இலத்திரனியல் வாக்களிப்பு முறைக்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் அறிமுகம் செய்யப்படல். | 2.3.1.நடைமுறையில் உள்ள சட்டம் இலத்திரனியல் வாக்களிப்பு முறை சார்பாக திருத்தியமைக்கப்பட்டுள்ளதென. | 1.அனைத்து அலுவலர்களும் ஒத்துழைப்பு நல்குகின்றனர் அர்ப்பணிப்போடு உள்ளனர்.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>4.தகவல் தொழிநுட்ப நிபுணத்துவம் கிடைக்கப்பெற்றுள்ளது. |
| | | 2.4.புதிய முறை தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படல். | 2.4.1.நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | |
| | | 2.5.2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் 5 வாக்கெடுப்புப் பிரிவுகளில் இலத்திரனியல் வாக்களிப்பு முறையை முன்னோடி நடவடிக்கையாக அமுல் செய்தல். | 2.5.1.2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் இலத்திரனியல் வாக்களிப்பு முறை பரீட்சிக்கப்பட்ட எண்ணிக்கை | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.பொதுமக்களின் நேர்க்கணிய பதிலளிப்பும் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றுள்ளன. |
| 3. | 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டளவில் தேர்தல் ஆணைக்குழுவின் திட்டமிடல் பிரிவு சக்தி வாய்ந்த முறையில் தாபிக்கப்பட்டுள்ளது. | 3.1.பங்களிப்பு மூலோபாயத் திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்படுவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவின் திட்டமிடல் பிரிவுக்கு ஆகக் குறைந்தது நிறைவேற்று தரத்திலான இரண்டு அலுவலர்கள் உள்ளிட்ட பணியாட் குழுவினர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படல். | 3.1.1.பயிற்சி பெற்ற இரண்டு அலுவலர்கள் திட்டமிடல் பிரிவில் தொழிற்படு நிலையில் இயங்கிக் -கொண்டிருக்கின்றனரென | 1.முகாமைத்துவ சேவை திணைக்களம் நேர்க்கணியமானது.<br>2.தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தினர்களும் அனைத் அலுவலர்களும் அர்ப்பணிப்போடு உள்ளனர்.<br>3.தேவையான வளங்கள் உள்ளன. |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 4. | 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் வலுவான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | 4.1.நிகழ்கால தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமானவாறு தற்போது நடைமுறையில் உள்ள மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு முறையை வலுப்படுத்தல். | 4.1.1.நிகழ்கால தேவைப்பாடுகளுக்கு பொருத்தமான விதத்தில் மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு முறை காணப்படுகின்றதென | 1.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் தகைமையுள்ளவர்களுமான மதிப்பீட்டாளர் குழுவொன்று காணப்படுகின்றது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன |
| | | 4.2.ஒவ்வொரு பிரதான செயற்பாட்டிற்கும் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (Key Performance Indicator – KPI) தயாரிக்கப்பட்டுள்ளமை. | 4.2.1.ஒவ்வொரு பிரதான செயற்பாட்டிற்கும் பிரதான செயலாற்றுகைக் குறிகாட்டி உள்ளதெனவும், அதற்கமைய மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்ற -தெனவும | |
| | | 4.3.நிகழ்கால தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தற்போது நடைமுறையிலுள்ள முன்னேற்ற அறிக்கைகளின் படிவங்கள் விருத்தி செய்யப்படல். | 4.3.1.நிகழ்கால தேவைப்பாடுகளுக்கேற்றவாறு விருத்தி செய்யப்பட்ட படிவங்கள் உள்ளனவென | |
| | | 4.4.நடைமுறையிலுள்ள முன்னேற்ற மீளாய்வு முறை மேம்படுத்தப்படல். | 4.4.1.மேம்படுத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வு முறையொன்று காணப்படுகின்றதென. | |
| | | 4.5.ஒவ்வோர் ஆண்டினதும் நடுப்பகுதியில் மதிப்பீடொன்றை மேற்கொள்ளல். | 4.5.1.ஆண்டின் நடுப்பகுதியில் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதெனவும், உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும், | 1.அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் தகைமையுள்ளவர்களுமான மதிப்பீட்டாளர் குழுவொன்று காணப்படுகின்றது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன |
| | | 4.6.பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் நிறைவு செய்யப்படுகின்ற ஒவ்வோர் ஆண்டும் அவ்வாண்டுக்கான பரிபூரண பொழிப்புடன் கூடிய மதிப்பீடொன்றை மேற்கொள்ளல். | 4.6.1.பரிபூரண பொழிப்புடன் கூடிய மதிப்பீட்டறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதென. | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 5. | தேர்தல் ஆணைக்குழுவின் இலக்குகள் குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்திலான பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக முறையாக நெறிப்படுத்தப்பட்ட ஒரு பொறிமுறை தாபிக்கப்பட்டுள்ளது. | 5.1.பங்களிப்பு மூலோபாயத் திட்டக்குழு அமுலாக்கல் குழுவாக மாற்றப்படல் | 5.1.1.அமுலாக்கும் பொறுப்புக்களையும், பணிகளையும் வகிக்கின்ற பங்களிப்பு மூலோபாய அமுலாக்கல் குழு அலுவலர்களின் எண்ணிக்கை | 1.தகைமையும் அர்ப்பணிப்புடன் கூடியவர்களும் உள்ளனர்.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.சிற்றூழியர்கள் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து பணியாட் குழுவினர்களும் அமுலாக்க திட்டம் தொடர்பாக நன்கு தெரிந்து வைத்துள்ளனரோடு அர்ப்பணிப்போடு அப்பணியில் ஈடுபட்டுள்ளனர். |
| | | 5.2. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் பொதுமக்களையும் அரசியல் வாதிகளையும், அலுவலர்களையும், அறிவூட்டுவதற்காக தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை (event) ஒழுங்கமைத்தல். | 5.2.1.தேசிய நிகழ்ச்சித் திட்ட அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளதென | |
| | | 5.3.2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் தேர்தல் ஆணைக்குழுவின் சிற்றூழியர் -கள் உள்ளிட்ட அனைத்து பணியாட் குழுவினருக்கும் பங்களிப்பு மூலோபாயத் திட்டம் தொடர்பான புரிந்துணர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 3 அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | 5.3.1.சிற்றூழியர்கள் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவில் அனைத்து பணியாட் குழுவினர்களும் பங்களிப்பு மூலோபாயத் திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதோடு, உள்வாங்கிக் கொண்டும் இருக்கின்றார்களென | |
| | | 5.4.“முடிவுகளின் அடிப்படையிலான திட்டமிடல்” **(Result Based Planning)** தொடர்பான அரசாங்கத்தின் தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொள்வதற்காக பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்களை பயன்படுத்திக் கொள்ளல். | 5.4.1.பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் தேர்தல் ஆணைக்குழு முடிவுகளின் அடிப்படையிலான திட்டமிடலை தயாரித்துள்ளதென | |
| | | 5.5.பங்களிப்பு மூலோபாயத் திட்ட அமுலாக்க முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக பங்களிப்பு மூலோபாயத் திட்ட அமுலாக்கல் குழு மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல். | 5.5.1.நடாத்தப்பட்ட திட்டமிடல் அமுலாக்க குழுக்கூட்டங்களின் எண்ணிக்கையும் பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளினதும் எண்ணிக்கை. | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| | | 5.6.தேர்தல் ஆணைக்குழுவின் செயலகத்திற்கு மாதாந்த முன்னேற்ற அறிக்கையொன்றையும் நிதி அறிக்கையொன்றையும் சமர்ப்பித்தல். | 5.6.1.முன்னேற்ற அறிக்கை மற்றும் நிதி அறிக்கை என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளனவென. | |
| 6. | 2017 ஆம் ஆண்டின் இறுதியில் தேர்தல் ஆணைக்குழுவில் பூரண மனிதவள பொறிமுறையொன்று விளைதிறன் மிக்க விதத்தில் செயற்படுத்தப்படுகிறது. | 6.1.தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து பணியாட் குழுவினர்களையும் தழுவியவாறு பயிற்சி தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல். | 6.1.1.அனைத்து பணியாட் குழுவினர்களுக்கும் பயிற்சித் தேவைப்பாட்டுப் பட்டியல் ஒன்று காணப்படுகின்றதென | 1.தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து அலுவலர்களும் அர்ப்பணிப்போடு உள்ளனர்.<br>2.திட்டமிடல் பிரிவின் அலுவலர்கள் தொழிற்படு நிலையில் உள்ளனர்<br>3.தேவையான வளங்கள் உள்ளன |
| | | 6.2.தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து பணியாட் குழுவினர்களுக்குமான பரிபூரண பயிற்சித் திட்டமொன்றைத் தயாரித்தல். | 6.2.1.பயிற்சித் திட்டத்திற்கமைய பணியாட் குழுவினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதென. | |
| | | 6.3.தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர்களுக்காக முறையான மனிதவள தகவல் தரவுத்தளமொன்றை பேணுதல | 6.3.1.முறையாக பேணப்படுகின்ற மனிதவளம் தொடர்பான தரவுத்தளமொன்று காணப்படுகின்றதென | 1.பணியாட் குழுவினர் முகாமைத்துவத்தோடு ஒத்துழைப்போடு நடந்துகொள்கின்றனர்.<br>2.செயலாற்றுகை மதிப்பீடு தொடர்பாக பணியாட் குழுவினர் இணங்கியுள்ளனர்/ அர்ப்பணிப்போடு உள்ளனர்.<br>3.தேவையான வளங்கள் உள்ளன.<br>4.கடல் கடந்த நாடுகளிலுள்ள பயிற்சி நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. |
| | | 6.4.அனைத்து பணியாட் குழுவினரதும் நிகழ்கால பணிகளுக்குப் பொருத்தமானவாறு அவர்களின் வேலை விபரங்களை (துழடி ந‌நளஉசனிவழைெ) மீள் பரிசீலனை செய்தல். | 6.4.1.எல்லா பணியாட் குழுவினர்களும் மீளாய்வு செய்யப்பட்ட வேலை விபரங்களுக்கமைய கடமையாற்றுகின்றனரென. | |
| | | 6.5.தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட் குழுவினர்கள் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள வருடாந்த செயலாற்றுகை மதிப்பீட்டு முறையை விருத்தி செய்தல். | 6.5.1.செயலாற்றுகை மதிப்பீட்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் மேம்பாடுகள் என்பவற்றின் எண்ணிக்கை | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| | | **6.6.**மனிதவள திட்டமிடலை அடிப்படையாகக் கொண்டு பணியாட் குழுவினர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளை ஒழுங்கமைத்தல். | **6.6.1.**பணியாட் குழுவினர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை.<br>**6.6.2.**பயிற்சி பெற்ற அலுவலர்களின் எண்ணிக்கை. | |
| | | **6.7.**தேர்தல் முகாமைத்துவ அதிகாரத்தினால் (EME) மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக பணியாட் குழுவினர்களால் ஆற்றப்பட வேண்டிய புதிய பணிகள் தொடர்பாக அறிவூட்டுவதற்கு 10 விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | **6.7.1.**தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் தம்மால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் என்பன தொடர்பாக பணியாட் குழுவினர் தெளிவாகவுள்ளனர் என | **1.**அலுவலர்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துகிறார்கள்<br>**2.**திறமையான அர்ப்பணிப்புடன் கூடிய பயிற்றுவிப்பாளர்கள் உள்ளனர்.<br>**3.**பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அங்கீகரித்ததோடு உதவி நிறுவனங்களிடமிருந்து உதவி கிடைக்கின்றது.<br>**4.**தேவையான வளங்கள் உள்ளன. |
| | | **6.8.**2017 ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பயிற்றுவிப்பாளராகப் பணிபுரிவதற்கு விருப்பமுள்ள அலுவலர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்தல் / குறித்தொதுக்குதல் மற்றும் அப்பிரிவினை முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான போதிய பயிற்சியை வழங்குதல். | **6.8.1.**நம்பத்தகுந்தவரும், அர்ப்பணிப்புடன் கூடியவருமான பயிற்றுவிப்பாளர் ஒருவர் இப்பிரிவினை முகாமைத்துவம் செய்கின்றாரென | |
| | | **6.9.**2020 ஆம் ஆண்டளவில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவு முகாமைத்துவ நிலையமொன்றை (KMC) நிறுவுவதற்குத் திட்டமிடல். | **6.9.1.**அரசாங்கத்தினூடாக உதவி வழங்கும் நிறுவனமொன்றின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வ-தற்கான செலவு மதிப்பீட்டறிக் கையுடன் கூடிய கட்டமைப்புத் திட்டமொன்று 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் கலந்துரையாடப்படுகின்றதென | |

| இலக்கம | விசேட குறிக்கோள்கள் | பிரதான செயற்பாடுகள் | குறிக்கோள்கள் தொடர்பான குறிகாட்டிகள் | ஊகங்கள் |
|---|---|---|---|---|
| 7. | 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பணியாட் குழுவினர்களுக்கு முறையாகத் திட்டமிடப்பட்ட பரிசளிப்பு மற்றும், மனக்குறைகளை நிவர்த்தி செய்தல் முறைமைகள் செயற்படுத்தப்படுகின்றன. | 7.1.நடைமுறையிலுள்ள பரிசளிப்பு முறையை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அதில் விருத்தி செய்யப்படவேண்டிய பிரிவுகளை இனங்காணல். | 7.1.1.பணியாட் குழுவினருக்கான பரிசளிப்பு முறை தொடர்பான மதிப்பீட்டறிக்கை கிடைக்கப்பெற்றதென | 1.அரசாங்கத்தின் கொள்கை அனுகூலமானது.<br>2.தேவையான வளங்கள் உள்ளன.<br>3.அர்ப்பணிப்புடன் கூடிய அபிவிருத்தி அலுவலர்கள் உள்ளனர். |
| | | 7.2.பணியாட் குழுவினர்களால் பாராட்டப்படக்கூடிய கவர்ச்சி மிக்க பரிசில்களைத் தயாரித்தல். | 7.2.1.கவர்ச்சிகரமான பரிசளிப்பு முறையொன்று அமுலில் உள்ளதென | |
| | | 7.3.பணியாட் குழுவினருக்கான மனக்குறைகளை நிவர்த்தி செய்யும் முறையொன்றினைத் தயாரித்தல். | 7.3.1.அனைத்து பணியாட் குழுவினர்களினதும் மனக்குறைகளை நிவர்த்தி செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட முறையொன்று காணப்படுவதென. | |
